

KALKI 2.1.94 ரூ. 3.00

கல்கி




பட்டு புடவைகளுக்கு
புதிய இலக்கணம்
சுந்தரம்ஸ் டெக்ஸ்டைல்ஸ்
சௌந்தரபாண்டி
ஸ்டோர்ஸ்
Insight-3840
சிட்டி பாங்க் கார்டுகள் ஏற்கப்படும். 73, G.A. ரோடு, சென்னை - 600 021 போன்: 551777, 555444.


அடுத்த இதழில்...
சுஜாதா எழுதும்
வண்ணத்துப் பூச்சி வேட்டை
3
புதிய தொடர் ஆரம்பம்!



சேரி நகரமும் நகரச் சேரியும்!

பாப்பையா



பக்கம்

எவர்சில்வர் சாமானிலிருந்து, பீங் கானையும் சேர்த்து, பிளாஸ்டிக் வாளி, குடமென்று அடுக் கிக்கிட்டுச் செல்லும் தள்ளு வண்டிக்காரன் கந்தன். ஆச்சு; அவ னும் கிராமத்தை விட்டு வந்து இருபத் தைந்து வருஷத்துக்கு மேலாச்சி. இப்ப அவன் ரெண்டு பிள் ளைத் தகப்பன். அவன் குடியிருக்கிற இடம் சேரி. ஆனால் அதுக்குப் பெயர் மட்டும் என்னவோ நகர்! பெரிய அரசியல் தலைவரின் பெயருக் குப் பின்னால் சேரி என்று எழுதக்கூடாது என்று எண்ணி நகர் ஆக்கிட்டாங்க போல. அந்த 'நகர்' விட்டுப் புறப்பட்டா அந்த ஊரில் அவன் காலடி படாத தெருவே இல்லை. ஒவ்வொரு நாளும் அந்தந்த தெருப்புழுதியோட உறவாடலைன்னா அவனுக்கு உறக்கமே வராது. அந்த வகை யில அவன் அந்தத் தொகுதி எம்.எல்.ஏவை விட உசத்தி!

அந்த நீளமான தெரு முக்கில் வண்டியைத் திருப்பும் போதே வேகத்தைக் குறைச்சிருவான். ரெண்டு பக்கமும் பழசாகி வெள்ளை அடிக்கக் கூடச் சக்தி இல்லாத வீடுகள்; ஒரு காலக் கட்டடக் கலையின் வர லாற்று மிச்சங்கள்.

'ஒவ்வொரு வீட்டுக்குள்றயும் இவ் வளவு பேரா? நான் குடியிருக்கிற சேரிலயும் இப்படித்தானே? ஒருவேளை சேரி தானோ! ஒரு நாளைக்காவது உள்ள போயிப் பாத்துப் புடணும்!'

ஒரு பழைய வீடு. தெருவி லிருந்தபடியே எட்டிப் பார்க்கிறான். பத்துப் பதி னைஞ்சு சின்னப் பசங்க; நெத்தி பூராத் திருநீறு! 'தலை முடியை இந்தப் பசங்க வழிச் சிருக்கிற மாதிரி நான் எங்க கிராமத் தில கூடப் பாத்ததில்ல; ஒன்னமாச் சேந்து பாடுதுக! என்ன குழைவு, எத்தனை கம்பீரம்! காந்தமா நிக்க வக்கருதே! சத்தம் இனிமையாத்தான் இருக்கு; சங்கதிதான் என்னன்னே விளங் கலை. இந்தப் பிள்ளைக இப்படிப் படிக் கிதுன்னா ஏதோ விசயம் இருக்கணும். இதை விளங்கி நம்ம பிள்ளைங்களும் படிச்சா என்ன? இப்பல்லாம் பணம் பண்ண உதவுறதுதான் படிப்புன்னு ஆகிப் போச்சு; இது எப்படியோ?' வியாபாரம் அங்கே நடக்கிறதோ இல்லையோ மெதுவாக வலம் வருவான்.

அங்கே ஒரு மொட்டைத் திண்ணை; தூண்ல சாஞ்சி ஒரு பெரியவர் - அறுபது எழுபது வயசாவது இருக்கும் - 'கண்ணைச் சுருக்கி என்னத்தை இம்புட்டுக் கவனமாப் படிக்கிறாரு? வண்டிய நிறுத்திட்டுக் கவன மாக் கேக்கிறான்; ராமாயணம்! இதை இவ் வளவு காலமாப் படிக்காமலா இருந்தாரு? திரும்பவும் படிப்பாரா இருக்கும்! அதெப் படி இவருக்கு மட்டும் இப்படியொரு ஆசை? எங்க சேரியிலயுந்தான் பெரியவங்க இருக்காங்க; அவுங்கள்ல யாரையும் நான் இப்படிப் பாத்தது இல்லையே!... ஆமா, இங்கிட்டும் அங்கிட்டுமா இந்தத் தெருப் பொம்பளைப் பிள்ளைங்க ஒவ்வொரு நாளும் எங்க போகுதுக? கை, காது, கழுத் துல பொட்டுத் தங்கத்தைக் காணலை; துணி உசத்தி இல்லை; உடுத்தியிருக்கிற மாதிரி நல்லா இருக்கு. தோள்ல பை; பை நிறைய என்னவோ இருக்கு; ஒரு கையில அட்டை-ஆங்; அதென்ன ஃபைலா - அதான் இருக்கு. பிள்ளைகளைப் பாத்தா இருபத்தைஞ்சு வயசாவது இருக்கும். எதுக்கும் கல்யாணம் ஆன மாதிரி தெரியலை! ஏன்?'

ஒரு நாள் ஒரு பெண் பிளாஸ்டிக் வாளி யின் விலையைக் கேட்க, பதில் சொல்லுகிற சாக்கில் இவன் தன் சந்தேகத்தைப் போக் கிக்கிட்டான். ''ஆமம்மா, இத்தாம் பெரிய பையைத் தூக்கிக்கிட்டு எந்த ஆபீசுக்குப் போறீங்க?''

''இதுல சாம்பிள்ஸ் இருக்கு; தெருத்

தெருவாப் போயி, வீடு வீடா ஏறி இதை அறிமுகப்படுத்தி அப்படியே வித்திருவோம்'' - அந்தப் பெண் கூனிக் குறுகிச் சிரித்தது.

'அட, பாவி மக்கா! இது என் பிழைப் புலயும் மோசமால்ல இருக்குது. நான் வண்டியில தள்ளிப் பிழைக்கிறேன்; இதுக தோள்ல தூக்கிப் பிழைக்குதுக. எங்க சேரியிலயும் பெண்டு பொிசுக வெங்காயம், மாங்காய், தேங்காய்னு கூடை தூக்கிப் பிழைக்குதுகதான்; அதுக நிலத்தில் விளைஞ்சதை விக்குதுக; இதுக பாக்டரியில செஞ்சதை விக்குதுக; ஆக மொத்தம் தொழிலு ஒண்ணுதானே; ஆனா நம்ம பெண்ணுங்க... அதுக இந்த வயசில குடியும் குடித்தனமுமா ஆயிருச்சிக; இதுக? படிச்சவங்கன்னா இப்படித்தானோ? எங்க பிள்ளைகளும் நாளைக்குப் படிச்சு வந்தா இந்தக் கதிதானோ?'

''ஏப்பா, பழைய சாமான்களை வாங்குவையா?'' - நடையிலிருந்து கொண்டே ஒரு அம்மா. இந்த வியாபாரம் அவன் இதுவரை செஞ்சதில்லை; ஆனா எங்க போய்ப் பார்த்திடணும்னு இருக்கானோ அதுக்குச் சந்தர்ப்பம் வந்திருக்கே; விடலாமா?

''நீங்க ஏன் தூக்கிக் கஷ்டப்படணும்? வச்சுருங்க; நானே உள்ள வந்து பாத்துக்கிட்டுச் சொல்றேன்.''


பார்வையில படுற மாதிரி வண்டிய நிறுத்திட்டுத் தைரியமா உள்ளே போய் விட்டான். எதிர் எதிராப் பத்துப் பத்து வீடுகள். இடையே நீண்ட வெளி. ஒடுக்கமான வராண்டா. எந்த வீட்டுக்கு முன்னாடியும் குப்பையைக் காணம். எங்க பாத்தாலும் துணியும் கொடியும். எல்லாமே ஒரு ஒழுங்கு. தன் சேரியையும் எண்ணிப் பார்க்கிறான். 'தன் வீட்டுக் குப்பையை அடுத்த வங்க வீட்டுக்கு முன்ன தள்ளி அதனால எத்தனை சண்டை? வெட்டுக் குத்து; போலீஸ் கேசு; இப்படி ஏதாச்சியும் இங்க நடக்கிற மாதிரியே தெரியலையே....!'

'அந்த அம்மா எந்த வீடு?' நிதானிக்கிறான். பக்கத்து வராண்டாவில் ஒரு சிறுமி ஒரு பெட்டியைப் பிடித்து ஆட்டிக் கொண்டே பாடினாள். பாட்டு என்னமோ தமிழ்தான். அவனுக்குத்தான் அது விளங்கியும் விளங்காமலும் இருந்தது!

இடைரென்று அந்தப் பிள்ளை அருகே இருந்த பெரியவர், ''ஏய்! தாளம் தப்புது; சரியாப்பாடு!'' என்றார். ஆமா, தாளம், ராகம் - இதை எல்லாம் எப்ப, எப்படி எவங்கிட்ட நாம தெரிஞ்சிக்கிடுறது?'

'அதோ, அந்த அம்மா நிக்குது' வாசலுக்குப் போய் விட்டான். அந்த அம்மாவுக்குத் தெரியாம வீட்டுக்குள்ளாற ஒரு நோட்டம் விட்டான்; சாமானெல்லாம் அதிகம் இல்லை.

'எல்லாம் என் வீட்ல இருக்கிறாப்பல தகரப் பெட்டியும் ஓலை விசிறியும் ஒண்ணு ரெண்டு பித்தளையுந்தான் தெரியுது. ஆனா அதைக்கூட இவங்க எப்படி ஒழுங்கா அடுக்கி வச்சிருக்காங்க! இந்தச் சுத்தமும் ஒழுங்கும் என் வீட்டுக்கும் வேணுமே... அந்தா ஒரு பெரிய சாதிக்காய்ப் பெட்டி. அதில சில சாமி படம். முன்னாடி சின்ன விளக்கு. பக்கத்தில இலை; இலை மேல பழம், பண்டம். அடுத்து சின்ன மண் சட்டி. அதில திருநீறு இருக்குமோ? - என் வீட்லயும் நிறையப் படங்கள் இருக்குதான்; ஆனால் இப்படி ஒரு பூசை ஒழுங்கு இல்லையே?' - அவனையும் அறியாமல் மானசீகமாகக் கும்பிட்டான். மனமோ சிந்தனை வாய்க்காலில் கிளை ஓடியது.



'இவுங்க கிட்ட இருந்து இதை நான் கத்துக் கிடணும்னா, இவுங்க உறவுல்ல எனக்கு வேணும்! இவுக இப்ப இருக்கிற நிலையில் எத்தனை காலத்துக்கு இதை எல்லாம் காப்பாத்திர முடியும்? நான் இருபத்திரெண்டு காரட்டாக மாறணும்; அதுக்குள்ள இவுக பதினாலு காரட்டாக மாறிட்டா....?'

வியாபாரம் முடிந்தது; அவன் மன வேதனையோ முடியாமல் தொடர்ந்தது.

– சாலமன் பாப்பையா.



கிரேஸி கமெண்ட்ஸ் - 1994

நாட்டு நலனுக்காக இரவு, பகலெல்லாம் யோசித்து நமது அரசியல்வாதிகளும் ஐ.ஏ.எஸ் ஆபீஸர்களும் திட்டோ திட்டென்று தீட்டுகிற திட்டங்களால்தான் நம் வாழ்வு செழிக்கிறது. அல்லது அவர்களுக்குப் பொழுது போகிறது. இந்த வருஷம் அவர்களுக்கு, அந்த சிரமம் கூட வேண்டாம் என்கிற உயர்ந்த நோக்கில், நாடக ஆசிரியரும் நகைச்சுவையாளருமான கிரேஸி மோகன், சில உன்னதமான திட்டங்களை இங்கே சிபாரிசு செய்கிறார். இதற்காகவே ஒரு ரூபாய் சம்பளத்திலாவது அவருக்கு அரசு உத்யோகம் தரலாம்!

ராவ் சிரிக்க!

நம் நாட்டின் மிகப் பெரிய பிரச்சனைகளுள் ஒன்று 'நரசிம்மராவ் ஏன் சிரிக்க மாட்டேனென்கிறார்?' என்பது. அவர் மட்டும் கலகலப்பாயிருந்தால் நாடே சுபிட்சமடைந்து விடும் என்று மந்தைவெளியில் ஒரு மரத்தடி ஜோசியர் சொல்லியிருக்கிறார். ஆனால் அது சாத்தியமா என்பதில் சந்தேகம் இருக்கிறது. பார்லிமெண்ட் நடவடிக்கைகளைப் பார்த்தே சிரிப்பு வராத ஒருவரை, கிச்சு கிச்சு மூட்டி சிரிக்க வைக்கலாமென்று நினைப்பது அபத்தம். ஒரு வேளை அவர் போன ஜென்மத்தில் கோல்டன் பீச் வாயிற்காவலனுக்குத் தாத்தாவாகப் பிறந்திருக்கலாமென்று நினைக்கிறேன். என் கணிப்பில் - ஆட்சியில் இருக்கிறவரை அவரைச் சிரிக்க வைக்க முடியும் என்று தோன்றவில்லை! அதற்காக அவர் ஆட்சியைக் கவிழ்க்க

வேண்டும் என்று சொல்வதாகக் கருதினால், அது உங்கள் தப்பு!



பல்லவன் பிழைக்க!

பல்லவன் பஸ்கள், சமீப காலமாகப் பல்வேறு ரூபங்களில் 'தொல்லை'யளாகி வருகின்றன. டிக்கெட் விலையேற்றம், ஊழியர் ஸ்டிரைக் போன்ற காரணங்கள் தவிர அடிக்கடி பஞ்சர், பிரேக்டௌன், ஆக்ஸிடன்ட் என்று கடுப்படிக்கிறார்கள். இதற்காக நாம் டிரைவர்கள், கண்டக்டர்களை மட்டும் குறை கூறுவது சரியில்லை. ஏரோப்பிளேனை எடுத்துக் கொள்ளுங்கள். பைலட், இஞ்சினியர், உதவி, துணை அது இதென்று ஏராளமானோர்! அதுவும் தவிர, ஏர் ஹோஸ்டஸ்களும் உண்டு! இந்த வருஷத்திலிருந்து பஸ் ஹோஸ்டஸ் அறிமுகப்படுத்தலாம்! இதன் மூலம் ஓட்டுனர், நடத்துனர்கள் உற்சாகம் மட்டுமின்றி, பிரேக்டவுன் ஆனாலும் மேற்படி ஹோஸ்டஸ்கள் புன்னகையுடன் அதை அறிவிப்பதால் பயணிகளின் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். ஃபுட் போர்டுவாசிகள் அவசியம் பஸ் உள்ளே வந்து விடுவார்கள். அதனால் விபத்துகள் தவிர்க்கப்படும்! சண்டை, கால் மிதித்தலால் வரும் குழப்பம் இத்யாதிகளைச் சமாளிக்க பஸ் ஹோஸ்டஸ்கள் கராத்தே பயிற்சி பெற்றவர்களாக இருக்கலாம்!

ஒலிம்பிக்கில் தங்கம் வாங்க!

சியோல் ஒலிம்பிக் கிட்டே வந்தபடி இருக்கிறது. ஒரு தங்கமாவது வாங்க வேண்டாமா? அவர்கள் நடத்தும் விளையாட்டுக்கள் நமக்கு சரிப்படவில்லையெனில், இந்த வருஷத்திலிருந்து மங்காத்தா, மூணுசீட்டு, முட்டி 'காகதல்', கோலி சோடா எறிதல் போன்ற நமது தேசிய விளையாட்டுக்களை ஒலிம்பிக்கில் இடம் பெற சிபாரிசு செய்வோம். இதன் மூலம் தங்கம், வெள்ளி, பித்தளை, அலுமினியம், பிளாஸ்டிக் இன்னும் என்னென்ன பதக்கங்கள் உள்ளனவோ அத்தனையும் நமக்கே வந்து சேரும்! நமது உன்னதமான விளை யாட்டுக்களை அவர்கள் ஏற்கவில்லை யெனில் போராடுவோம். எதெதற்கோ போராட்டம் நடத்துகிறோம். நமது 'தன்மானம்' காக்க, இதற்காகப் போராடினால் தப்பில்லை.





சொல்வதற்கு அருகதையில்லை!

ஒரு பேங்க் அதிகாரி ரேஷனுக்குப் போகிறார். க்யூவில் நிற்க வேண்டியதாகிறது. ஆபீஸுக்கு லேட்டாகிறது. என்ன சொல்கிறார்? 'இவனுங்களைக் கேட்க ஆளில்லப்பா!' அதே பேங்க்காரர் பேங்குக்கு லேட்டாகப் போகிறார். (ரேஷனில் நின்றதால்) கஸ்டமர் என்ன சொல்கிறான்? 'இவனுங்களைக் கேட்க ஆளில்லப்பா!' எல்லாவற்றுக்கும் நாம் ஆட்சியைக் குறை சொல்லியே பழகி விட்டோம். நம்மோடு ஒப்பிட்டால் ஆட்சியாளர்கள் எவ்வளவோ தேவலை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, 'தேமே' என்று தானுண்டு, தலைமை சீட்டுண்டு, அறிக்கை உண்டு, போஸ்டர் உண்டென்று ஒதுங்கியிருப்பவர்களைக் குறைகூற யாருக்கும் அருகதை இல்லை. நமது இந்த மனோபாவம் இந்தப் புது வருஷத்திலிருந்தாவது மாறியாக வேண்டும்.

1/2 ஆண்டுத் திட்டங்கள்

எதற்காக ஐந்தாண்டுத் திட்டங்கள்? ஐந்தாண்டுகள் நாம் சென்று மறைகின்றனவே தவிர, திட்டமெல்லாம் எங்கே போய் ஒளிந்து கொள்கின்றன என்றே தெரியவில்லை. ஒருவருடைய ஆட்சிக் காலமும் ஐந்தாண்டு; திட்டமும் ஐந்தாண்டு. ஐந்து வருஷம் பொழுது போக ஐந்தாண்டுத் திட்டங்கள் போதும்! இது உடனடியாக மாற்றப்பட்டாக வேண்டும். அரையாண்டுத் திட்டங்கள் கொண்டு வரலாம். அப்போதாவது பணியில் கொஞ்சம் சூடு பிடிக்க வாய்ப்பு உண்டு. அதே போல ஆட்சியாளர்களுக்கும் அரையாண்டுக்கு ஒரு தேர்தல் வைக்கலாம். ஒன்-டே கிரிக்கெட் மாதிரி ஒருவேளை இதில் ஏதேனும் சுவாரஸ்யம் கூடலாம்.

'பாம்' பிரச்னை தீர!

பொது இடங்களிலும், அலுவலகங்களிலும் இப்போதெல்லாம் கேப் மாதிரி, ஆர்.டி.எக்ஸ் வெடிக்கிறது. அலுவலகம் என்றொரு கட்டடம் இருந்தால்தானே, அதில் பாம் வைக்கிறார்கள்? பேசாமல் 'பௌண்டரி' மட்டும் ஓரடி உயரத்திற்குக் கட்டிவிட்டு, சேட்டு மாதிரி திண்டு போட்டு, தரையில் உட்கார்ந்து 'ஓப்பன் ஏரில்' வேலை பார்க்கலாம்! வெயிலுக்கு வேண்டுமானால் ஷாமியானா போட்டுக் கொள்ளலாம். இது சாத்தியமா என்று கேட்கிறவர்களுக்கு, முதல்வரின் மூன்று நாள் உண்ணாவிரதத்தை உதாரணம் காட்ட விரும்புகிறேன்!

வேலை வாய்ப்பு பெருக!

போர்ட்டர்கள் எதற்கு அனாவசியமாக ஹார்பரிலும் ஏர்போர்ட்டிலும் ரயில்வே ஸ்டேஷனிலும் கூலிக்காகக் காத்திருக்க வேண்டும்? பேசாமல் கான்வென்ட்





டுகளுக்குச் செல்லும் குழந்தைகளின் பையைத் தூக்கிச் சென்று சம்பாதிக்கலாம்! கிலோவுக்கு இத்தனை என்று பெற்றோரிடம் பேசி வாங்கிக் கொள்ளலாம். இதன் மூலம் தற்போதைய போர்ட்டர்கள் தவிர பல புதியவர்களுக்கும் வேலை வாய்ப்பு காத்திருக்கிறது. இதனை மாநிலம் தழுவிய ஒரு தொழிலாக அங்கீகரித்து, அரசு பிரபலப்படுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்து வைக்கலாம்!

தண்ணீர்ப் பிரச்னை

இப்போது கவலையில்லை, பீரோவைத் திறந்தாலே தண்ணீர் கொட்டுகிறது. ஆனால் வருஷா வருஷம் தண்ணீருக்காகச் சென்னைவாசிகள் படுகிற கஷ்டத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் நெஞ்சு துடிக்கிறது! இதற்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காண முடியும்!

தண்ணீர் எதற்குத் தேவை? குளிப்பதற்கும் குடிப்பதற்கும்! ஏன் குளிக்க, குடிக்க வேண்டும்? உடம்பில் அழுக்கு சேர்வதால் குளிக்க, தாகம் எடுப்பதால் குடிக்க. இந்த இரு பிரச்னையுமே இல்லாது போய் விட்டால்....?

செயற்கை மழை வரவழைப்பது போல, சில கோடி கொட்டிக் கொடுத்துச் செயற்கைப் பனி வரவழைக்க முடியுமானால் போதும்! 1994 - ல் ஆரம்பித்து ஓரிரு வருடங்கள் தொடர்ந்து செயற்கைப் பனி உற்பத்தி செய்து, சென்னை நகரையே ஆர்ட்டிக், அண்டார்ட்டிக் மாதிரி பனிப் பிரதேசமாக்கிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும். குளிர்ப் பிரதேசத்தில் குளிக்கவும் வேண்டாம்! தாகமும் எடுக்காது!

இது தவிர இன்னொரு உபயோகம். செயற்கைப் பனிக்காக அண்டார்ட்டிகா நிபுணர்களைத் தருவிப்பதில் கிடைக்கக் கூடிய கிக்பாக்கைத்தான் சொல்கிறேன்!

நோய்கள் நீங்க!

சென்னைக் கொசுக்களின் பிறப்பிடமான கூவத்தைச் சுத்தப்படுத்துவது அத்தனை எளிதல்ல. சற்று நீண்ட காலப் பணி என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.


சமீபத்தில் கதிர்வீச்சுக் கருவியை கூவத்தில் போட்ட அன்பரைக் கொஞ்சம் நினைவு கூர்வோம். அவர் பணியாற்றிய கம்பெனியில் ஏதோ மனஸ்தாபம். அதனால் அங்கிருந்து ஒரு கதிரியக்கக் கருவியைக் கொண்டு வந்து கூவத்தில் போட்டு விட்டார். இதே மாதிரி அவரவர் பணியாற்றும் நிறுவனங்களில் மனஸ்தாபம் ஏற்படும் போதெல்லாம், அந்தந்த நிறுவனத் தயாரிப்பு ஒன்றைக் கொண்டு வந்து கூவத்தில் போட்டு விடலாம். இப்படி பீரோ, லாரி, கார், பஸ், ஏரோப்பிளேன், டீ.வி. மேசை, நாற்காலி என்று பொருள்களால் கூவத்தை நிரப்பி, அடைத்து விடலாம். விரைவில் கூவம் - ஒரு 'நதி'யாக இல்லாமல் அருங்காட்சியகமாகி விடும்! கூவம் இல்லையேல் கொசு இல்லை. கொசு இல்லையேல் நோய் இல்லை! என்ன சொல்கிறீர்கள்?

எங்கு நோக்கினும் ஒயர்கள்!

கேபிள் டீ.வி., எலக்ட்ரிஸிட்டி, டெலிபோன் இம்மூன்று துறையினரும் நகரை ஒயர்கேபிள்களால் ஒப்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். என்ன வளர்ச்சியடைந்து என்ன? தீபாவளி சமயம், ஒரு ராக்கெட் விட முடியவில்லை! இப்பிரச்னை தீர ஒரு வழி இருக்கிறது. மேற்படி மூன்று ஒயர் உபயோகத்துறையினரும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வந்து மூன்றும் ஒரே கேபிளில் செயல்படுவது போல நிபுணர்களைக் கொண்டு மாற்றி அமைக்க வேண்டும். இதன் மூலம் வேறு சில வசதிகளும் உண்டு. டெலிபோனை டயல் செய்து 'ஹலோ' சொன்னால் சினிமாப் பாட்டு கேட்கலாம். லைட் எரியும் போது ஒலியும் ஒளியும் பார்க்கலாம். டெலிபோனில் பேசுகிறவரை டீ.வியில் காணலாம்! எப்பேர்ப்பட்ட உன்னத யோசனை இது? உடனே செயல்படுவார்களாக!

தொகுப்பு : பா. ராகவன்.
மேலட்டை வண்ணப்படம், புகைப் படங்கள் : கோபிநாத்.
கார்ட்டூன்கள் : மதிகுமார்.

அண்ணா சாலையில் 'ஜெ' மாளிகை!



* ஸஃபையர் தியேட்டர் வளாகம்.

தி.மு.க.வின் பெருமையைச் சொல்லிக் கொண்டு அண்ணாசாலையில் எழும்பியுள்ள அண்ணா அறிவாலயத்துக்குப் போட்டியாக அ.தி.மு.க.வின் தலைமைச் செயலகக் கட்டடம் ஒன்றும் அண்ணா சாலையில் உருவாக வேண்டும் என்று 'ஜெ'க்குத் தோன்றி விட்டது. அப்புறமென்ன? தூக்கம் வருமா? மவுண்ட்ரோடு (அண்ணா சாலை) பக்கம் வலைவீச ஆரம்பித்ததில் முதலில் ஆர்ட்ஸ் காலேஜ் எதிரே ஸ்டாண்டர்டு மோட்டார்ஸுக்குச் சொந்தமான இடம்தான் பார்க்கப்பட்டது. ஆனால் போக்குவரத்து நெருக்கடி, பாதுகாப்புப் பிரச்னைகள் கருதி இப்போது ஸஃபையர் தியேட்டர் வளாகத்தின் மீது கருணா கடாட்சம் விழுந்திருக்கிறது.

ஸஃபையர் தியேட்டர் வளாகத்துக்கு வயது 30. அந்த இடம் முதலில் மெட்ராஸ் கிளப்புக்குச் சொந்தமானதாக இருந்தது. பின்னர் கிவ்ராஜ் நிறுவனத்தினர் அதை வாங்கினார்கள். தங்க, வைர வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்த விகம்ஸி நிறுவனத்தினர் 1960களில், தங்கக் கட்டுப்பாடு சட்டம் வந்த போது, தொழிலை மாற்ற நினைத்தனர். நிறுவனத்தின் ஹெச்.வி.ஷா தமது மகன் யெஷ்வந்த் ஷாவின் தூண்டுதலின் பேரில், கிவ்ராஜிடம் இடத்தை வாங்கி, சென்னை நகருக்கே பெருமை சேர்க்கும்விதமாக மூன்று தியேட்டர்களை உள்ளடக்கிய வளாகத்தை உருவாக்கினார். முதன் முதலாகப் பல தியேட்டர்களை உள்ளடக்கிய கட்டடம் உருவானது இங்கேதான். மொத்தம் 17 கிரவுண்டுகள். காலப்போக்கில் பெரியவர் ஷா இறந்துவிடவே, மற்ற பாகஸ்தர்களுக்குள் சொத்துத் தகராறு ஏற்பட, இப்போது வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. 19 பாகஸ்தர்களில் ஒருவரையே Receiver ஆக நியமித்திருக்கிறது உச்சநீதிமன்றம். தியேட்டர்

களின் அன்றாட வேலைகளை கவனித்து வருகிறார் இந்த 'ரிஸீவர்'.

தியேட்டர் பிரச்னையைத் தெரிந்து கொண்ட ஜெ., இப்போது அதை வளைத்துப் போட முயற்சி செய்து கொண்டிருக்கிறார். அ.இ.அ.தி.மு.க. சார்பாக முதல்வருக்கு வேண்டிய ஒருவர் பாகஸ்தர்களில் ஒருவரை அணுகி, ''முதலில் கோர்ட்டிலிருந்து வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள். பின்னர் நாம் பேசி விலையைப் பற்றி முடிவு செய்வோம்'' என்று சொல்லியிருக்கிறார்.

''இந்த விஷயம், எல்லா பாகஸ்தர்களுக்கும் தெரியுமா என்பது சந்தேகமே! ஆனால் இப்போது எங்களைப் பார்ப்பவர்களெல்லாம் துக்கம் விசாரிப்பது போல் விசாரிக்கிறார்கள்!'' என்றார் தியேட்டரில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர்.


ஆயிரம் விளக்குப் பகுதியில் நிலத்தின் மதிப்பு, கற்பனைக்கெட்டாத வகையில் உயர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த ஒன்றரை வருடங்களாக இந்தப் பகுதியில் - குறிப்பாக சஃபையர் தியேட்டர் அருகில் - நிலம் கைமாற்றம் ஏதும் இல்லாததால், அரசின் வழிகாட்டும் மதிப்பு (guideline value) மாறாமலேயே இருக்கிறது. தியேட்டருக்கு 500 அடி தள்ளி இருக்கும் ஒரு தெருவில் கால் கிரவுண்ட் நிலம், மூன்று லட்ச ரூபாய் என்று மதிப்புக் காட்டப்பட்டு ஸ்டாம்பு கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறது. என்றாலும் கறுப்பில் கை மாறிய பணம் ஏழு லட்ச ரூபாய் என்றும் சொல்கிறார்கள். இதுவும் இரண்டு வருஷத்துக்கு முன்பு. ஆக, ஒரு கிரவுண்ட் நிலம் கறுப்பும் வெளுப்புமாக 40 லட்சம் வரை மதிப்பிடலாம் என்று உத்தேசமாகச் சொல்கிறார்கள் தரகர்கள். இந்த நிலையில் தியேட்டர் வளாகத்தின் 17 கிரவுண்டும் கை மாற, கிட்டத்தட்ட ஏழு கோடி ரூபாய் தேவைப்படும். தவிர, கட்டடத்தின் மதிப்பையும் சேர்த்தால் பத்துக் கோடியை எட்டும்!


''அறிவாலயத்தை விட மிகச் சிறப்பான வகையில், எங்கள் கட்சித் தலைமையகம் அமையும். புரட்சித் தலைவியின் காலத்துக்குப் பிறகும் அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு கம்பீரமாக நிற்கும் அந்தக் கட்டடம். இதற்காக எவ்வளவு பணம் செலவானாலும், புரட்சித் தலைவி கவலைப்படப் போவதில்லை!'' என்று பெருமைப்படுகிறார் தலைவியின் தொண்டர் ஒருவர்.

உண்மைதான்; ஆளுங்கட்சியாக இருக்கும் வரை பணத்துக்கென்ன கவலை? அமைச்சர்களெல்லாம் தான் லட்ச லட்சமாக வாரிக் கொண்டு வந்து தருகிறார்களே!

- ப்ரியன்

படம் : ராஜன்









வாருங்கள், மாதருக்கு மாதர் என்ற முறையில் என்னுடைய ரகசியத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். சுரண்டுவதை நிறுத்துங்கள். எரிந்து போவதை நிறுத்துங்கள். மேலும், பருமனை மற்றும் கொலெஸ்ட்ராலை விரும்பி அழைத்திடும் எண்ணெய்யினை ஊற்ற வேண்டாம். என்னைப் போல், சுவைமிக்க மற்றும் மொறு மொறு வென்ற நிர்லெப் தோசைகளை தவ்வாவிலிருந்து எளிதாக எடுங்கள். நிர்லெப் அளித்திடும் வசதியினை நீங்களாகவே அனுபவியுங்கள்.

நிர்லெப் உபயோகிப்பதன் மூலம், அதே எடையுள்ள வெண்ணெய்க்கு அதிக நெய் கிடைப்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள் — தொல்லை கொடுக்கும் எந்த வித பிசுக்கும் தவ்வாவில் ஒட்டிக் கொள்ளாது.

மேலும் என்ன, நிர்லெப் உபயோகிப்பதினால் உங்களுடைய தினசரி சமையலும் மிக எளிதாவதைக் காண்பீர்கள். அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்களை நிலைக்கச் செய்வதாலும் (எனெனில் உணவுப் பொருட்கள் எரிந்து போவதில்லை) மற்றும் கடைசியில் சுத்தப் படுத்துவது எளிதாக அமைவதாலும், இது ஒரு உண்மையான சமயலறைத் தோழன் — 20 வருடத்திற்கு மேலாக பொறுப்புடன் உங்களுடன் ஊழியம் செய்து கொண்டிருப்பவனாவான்.


அதனால் தான் என்னுடைய குடும்பம் ஒரு நிர்லெப் குடும்பம்.
உங்களுடையதோ ?
இல்லையென்றால், இதைப்பற்றி சிந்திக்கவும் மிகத்தீவிரமாக.



NIRLEP


ஒரு வசதியான படைபபு

சென்னை நகரம், செங்கல்பட்டு, வடார்காடு, தென்னார்காடு மற்றும் பாண்டிச்சேரி விநியோகஸ்தர்கள் :
தி அலுமினியம் & கிளாஸ்வேர் எம்போரியம், போன் : 6411811, 6412800, 6412801, 581604.


வாரி விட்டேன்னா, பாரு... ஆளு அவமானப்பட்டு அம்பேலாயிடுவாரு!
ஜெ.
நேரே இழுப்பு... அம்மா காலி!
கவர்னர் உரை இல்லாமலேயே பட்ஜெட் சொன்னார்
வழக்குப் போட அனுமதி
சென்னா ரெட்டி
இந்தியன் எக்ஸ்பிரஸ்
ஊழல்...
டாவர் ஊழல்...
பயங்கர டாவர் ஊழல்
ஊழல்...
மார்கழி மாசந்தான்... அதுக்காக இப்படியா அலறணும்?...
சதீஷ் சர்மா
யாரை வெச்சிக்கறது, யாருக்கு சீட்டு கிழிக்கறது?...
நரசிம்ம ராவ்
போச்சு, நாமும் அவுட்டுதான்...
சங்கரானந்த்
தொழில் அதிபர்
ஐயோ, மறுபடி பர்மிட் லைசன்ஸ் வாங்கிடுவோமா?
மறுபடி மந்திரி ஆகலைனா, இல்ல...
சிதம்பரம்
மன்மோகன் சிங்
தூக்கத்தை இழக்க விரும்பலேன்னு சொல்லப் போக யாருக்குமே தூக்கமில்லாமே பண்ணிட்டேனே!
ராம் நிவாஸ் மிர்தா
என் வேலை முடிஞ்சது... இனிமே நான் நிம்மதியா தூங்குவேன்!



கல்கி



1994
ஜனவரி 2
மலர் : 52
இதழ் : 23
ஸ்ரீமுக
மார்கழி 18

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

மிலியன் டாலர் கேள்வி!

"ஆபரேஷன் வெற்றி; ஆனால் நோயாளிதான் இறந்து போனான்" என்பது போல நாடாளுமன்றக் கூட்டுக் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. பங்கு மார்க்கெட் ஊழலில் யார் யாருக்குத் தார்மீகப் பொறுப்பு; யார் யார் குற்றம் இழைத்ததாகவே கருதலாம்; நேரடியாகவே ஈடுபட்டவர்கள் யார் என்றெல்லாம் பட்டியலிட்டு விட்டு, கடைசியில், "இந்த ஊழலில் சம்பாதிக்கப்பட்ட பணம் என்னவாயிற்று என்பதுதான் தெரியவில்லை" என்று குழு கையை விரித்து விட்டது! எனவே பிரச்னை முடிந்து போனதாகக் கருத முடியாது; இனிதான் ஆரம்பமே! இதை வி.பி.ஐ. வெற்றிகரமாக நடத்திக் காட்ட வேண்டும். ஆனால், 'அவ்வாறு செயல்பட வி.பி.ஐ. அனுமதிக்கப்படுமா; சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பார்களா?' என்பது, உருவகமாக அல்ல, நிஜமாகவே ஒரு "மிலியன் டாலர்" கேள்விதான்!

இது ஒருபுறமிருந்தாலும், 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்பது போல, பிரதமர் நரசிம்மராவ் தன்னிடம் ஒரு கோடி லஞ்சம் பெற்றதாக ஹர்ஷத் மேத்தா சுமத்திய குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை என்று நா.கூ.கு. தீர்ப்பளித்து விட்டதில் ராவ் மட்டுமல்ல, மத்திய ஆட்சியும் தப்பிப் பிழைத்தது. அந்தமட்டில், ஒரு நிலையற்ற தன்மை மத்திய ஆட்சியில் தோன்றாதிருக்க நா.கூ.கு. உதவியுள்ளது. இது உண்மையை உரைக்கும் காரியம்தான் என்றும் மறைக்கும் வேலையாக இராது என்றும் நம்புகிறோம்! இப்படி சந்தேகப்பட இடமளிப்பது, 'பிரதமரின் மகன் பிரபாகரராவ் டைரக்டராக உள்ள கோல்ட் ஸ்டார் நிறுவனத்துக்கு ஹிதேன் தலால் அளித்த இரண்டு கோடி கடன் மீது பல்முனை விசாரணை தேவை' என்று நா.கூ.கு. வலியுறுத்தியிருப்பதாகும். மகனின் விகாரமான கருநிழல், தந்தை மீதும் படரவே செய்யும். நரசிம்மராவுக்கு அக்னிப் பரீட்சைகள் இன்னும் சில பாக்கியிருக்கவே செய்கின்றன.

நா.கூ.கு.வின் அறிக்கையை மறுத்தும் எதிர்த்தும் என்னதான் அமைச்சர் சங்கரானந்த் பேசி, தம்மைத் தற்காத்துக் கொள்ள முயன்றாலும், குழுவின் பலமான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் அவர், இனியும் பதவியில் நீடிப்பது அவருக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே அவமானம். அவரை மட்டுமின்றி, குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள மற்றொரு அமைச்சரான ராமேஷ்வர் தாக்குரையும் முதல் சந்தர்ப்பத்திலேயே பிரதமர் கழற்றி விட்டு விட வேண்டியதுதான். இவர்களுடன் வேறு பல அதிகாரிகளும் வீடு போய்ச் சேர வேண்டும்தான்.

மறுபுறமாக ப. சிதம்பரம் மீது குற்றம் சுமத்தும்படி ஏதொன்றுமில்லை என்பதால் அவரைப் பற்றி ஏதும் கூறாமலே விட்டிருக்கிறது, நா.கூ.கு. அமைச்சராக, அதுவும் பங்குகளின் விலைகளைக் கூட்டவோ குறைக்கவோ முடிகிற நிலையில் இருந்து கொண்டு சிதம்பரம், ஃபேர் குரோத் பங்குகளையும் இதர பங்குகளையும் வாங்கி - விற்கும் வியாபாரத்தில் இறங்கியிருக்க வேண்டியதில்லைதான். இதனால்தான் தார்மிகப் பொறுப்பேற்று அவர் ராஜினாமா செய்ய நேர்ந்தது. எனினும் கறை படியாமல் அவர் காட்சியளிப்பதால் அவரைத் திரும்பவும் அமைச்சரவையில் பிரதமர் ஏற்று, முக்கியப் பொறுப்பு வழங்கலாம்; வழங்க வேண்டும். தொழில் வர்த்தகத் துறையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, சுதந்திரப் பொருளாதாரத்துக்கு நிதி அமைச்சருடன் சேர்ந்து அடித்தளம் அமைத்தவர் சிதம்பரம் என்பதை மறக்க முடியாது.

பங்கு மார்க்கெட்டில் பங்குகளின் விலை உயர்வு குறித்துத் தாம் தூக்கமிழக்க முடியாது என்று மன்மோகன் சிங் கூறியது, அவருடைய ஓர் அலட்சியப் போக்கின் பிரதிபலிப்பே. இது தவறு எனினும், அதிகார துஷ்பிரயோகம், மெத்தனம் அல்லது லஞ்ச ஊழல் போன்ற பெருங்குற்றமாகாது. மத்திய ஆட்சி மைனாரிட்டி நிலையில் இருந்தபோதே துணிச்சலுடன் பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொணர்ந்த அவரை, இப்போது - மத்திய அரசு நன்கு ஸ்திரப்பட்டிருக்கும் நிலையில் - கழற்றி விட்டு வேறு ஒருவரை ஏற்பது, வெள்ளப் பெருக்கெடுக்கும் நட்டாற்றில் குதிரை மாறுவதற்கு ஒப்பாகும். அந்தத் தவறைப் பிரதமர் செய்து விட வேண்டாம். அதிகார வர்க்கத்தில் இருந்த சிங்குக்கு அரசியல் சூழ்ச்சிகள் தெரியாது! இப்போது பாடம் கற்றுப் புரிந்து கொண்டிருப்பதால், எதிர்காலத்தில் எச்சரிக்கையாக இருப்பார்.

● ந. சிங்காரவேலு, உடுமலைப்பேட்டை.
? "கல்கி என்பதன் பொருள் என்ன?" என்பதற்கு நீங்கள் தந்துள்ள விளக்கத்துடன் (12.12.93 இதழ்), கல்யாணி என்ற தமது மனைவியின் பெயரிலிருந்து முதல் இரண்டு எழுத்துக்களான 'கல்'லையும், தமது பெயரில் முதல் எழுத்தான 'கி'யையும் இணைத்துக் 'கல்கி'யானார் என்றும் கூறலாமா?
! "இப்படிக் கூறுகிறவர் தலையில் 'கல்'லைத் தூக்கியும் போடலாம்" என்றே எழுதியிருக்கிறார் "கல்கி", தமக்கே உரிய தமாஷ் நடையில்!

● எஸ். ஜான் ரவி, கோவில்பட்டி.
? தாம் வறுமையில் வாழ்வதால் வெளிநாட்டுப் பயணம் செல்ல ரூ. 80 ஆயிரம் கட்ட முடியாது என எம்.எல்.ஏ. பாண்டியம்மாள் முதல்வரிடம் மனு கொடுத்திருப்பது பற்றி?
! அமைச்சர்கள், லட்சங்களையெல்லாம் வெறும் நயா பைசாக்கள் மாதிரி வசூலித்து முதல்வரிடம் வழங்குகிற இந்நாளில், இது பேராச்சர்யம்தான்.

● எம். கே. என்., சென்னை - 54.
? இ. காங்கிரஸ் - அ.தி.மு.க. உறவு புதுப்பிக்கப்படுமா?
! சில பத்திரிகைகள் ஆவலோடு எதிர்பார்ப்பது போல் ஒரு பொன்னாடையால் இதைச் சாதித்து விட முடியாது. தமிழக ஆளுனரையும் தமிழக காங்கிரஸையும் பகைத்துக் கொண்டு, தில்லியில் பிரமாதமாக எதையும் செய்து விட முடியாது. இன்னும் அனுசரணையான போக்கும் விட்டுக் கொடுக்கும் மனோபாவமும் தேவை.

● த. சங்கர், திண்டுக்கல்.
? ராஜஸ்தானில் சுயேச்சைகளுக்கு வந்த வாழ்வைப் பார்த்தீர்களா?
! "ஹூம், எம்.எல்.ஏன்னா ராஜஸ்தானில் எம்.எல்.ஏவா இருக்கணும்; அதுவும் சுயேச்சையா" என்று நாடெங்கிலும் உள்ள எம்.எல்.ஏக்கள் விடும் பெருமூச்சுத்தான் புயலாக உருவெடுத்ததாக ஒரு வதந்தி!

● சி. கொ.தி. முருகேசன், கோபி.
? சிறு சேமிப்பில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது பற்றி...?
! வேறுவித வசூல்களில் தீவிரம் காட்டாதிருந்தால் சிறு சேமிப்பில் முதலிடத்தையே நமது அரசு அடைந்திருக்கலாம்.



* இருவருக்கும்... * ...இடம்!

● ப. இராம் முருகன், சிவகங்கை.
? தமிழ்நாட்டில் தபால்கார்டுகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பது எதைக் காட்டுகிறது?
! பதினைந்து பைசாவில் முடிய வேண்டிய விஷயத்துக்கு ஒரு ரூபாய் செலவழித்து நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்க நேர்ந்திருக்கும் துர்பாக்கிய நிலையைத்தான்.

● எம். ரேவதி, மன்னார்குடி.
? 1993-ம் ஆண்டின் சூப்பர் அரசியல்வாதி?
! நிச்சயம் வை.கோ. இல்லை... பண்ருட்டி? இல்லவே இல்லை... வாழப்பாடி? ஊஹூம்... ராவ்? ப்ச்... மனோகரன்? பச்சோந்திகள் நம் அரசியலுக்குப் புதுசு இல்லை... ஆ! பல கோடி ரூபாய்க்கு டாலர் ஊழலில் சிக்கியும் அமுக்கராங் கிழங்காக அமைச்சர் பதவியில் அமர்ந்திருக்கும் சத்தீஷ் சர்மா!

1993-ம் ஆண்டின் சூப்பர் அரசியல்வாதி?

● பிரசன்ன குமார், குடந்தை.
? "அண்ணா, கலைஞர் சிறுகதைகள் - நாவல்கள் ஆபாசக் களஞ்சியங்கள்" என்கிறாரே நா. காமராசன்?
! முழுக்க முழுக்க அப்படி என்று சொல்லி விட முடியாது என்றாலும், ஒரேயடியாக இல்லவே இல்லை என்று மறுத்து விடவும் முடியாது. இப்படிப் பலர் வழிகாட்டப் போய்த்தான் வடக்கே இருந்து வந்த விமர்சனப் புயலே, இப்போது சங்கீத - நடன விமர்சனத்தில் கூட ஆபாசத்தைப் புகுத்திக் கிளுகிளுக்க வைக்க நினைக்கிறது!

● கே. ஆர். சுந்தரராஜன், கும்பகோணம்.
? ரகுமானின் வருகையால் இளையராஜா பின்னுக்குத் தள்ளப்பட்டு உள்ளாரா?
! இருவருமே முன்னணியில் இடம் பிடிக்கும் அளவுக்கு இங்கு சினிமாத் துறையில் வாய்ப்பிருக்கிறது! (வம்பில் மாட்டாமல் நழுவிவிட்டேன் பார்த்தீர்களா?)

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.
? ஜோசியப்படி ரஜினிகாந்த், அரசியலில் குதிக்கப் போகிறாராமே?
! போங்க சார், புலி வருகிற நம்பிக்கை போயே போச்சு!

● வெ. தம்பையா, திருச்சேறை.
? எந்த சிறிய வேலையா இருந்தாலும் லஞ்சம் கேட்கும் வி.ஏ.ஓக்களின் கொட்டம் அதிகரித்து விட்டதே?
! நாடு தழுவிய வளர்ச்சி அவர்களை மட்டும் விட்டு வைக்குமா என்ன?

● டி.பி. உமா, மைசூர்.
? மழை வரும் போது நீரைத் தேக்காமல் வீணடித்து விட்டுப் பிறகு அடுத்த மாநிலத்தாரை நீர் கேட்பது சரியாகுமா?
! தப்புத்தாங்க. ஆனா கிருஷ்ணா நீர் கேட்டாலாவது எங்க டெய்ல் எண்ட் ஏரியாவுல தோள் வலிக்கப் பம்ப் அடிக்காம குழாயைத் திறந்தா தண்ணி வராதா என்கிற நப்பாசைதான். காவேரிப் பிரச்னை வேறேங்க. அது உரிமைங்க.


● ஜோசியப்படி...
● மூன்று யோசனைகள்
● குட் லக்!
● விமர்சனத் தாக்குதல்
● சூப்பர் அரசியல்வாதி

● ரா. நாச்சிமுத்து, போடிநாயக்கனூர்.
? நம் மக்களைப் பழமைவாதத்திலிருந்து மீட்க முடியாதா?
! சமீபத்தில் ஜனநாயக மாதர் சங்கம், ''சினிமாவில் பெண்கள்'' என்ற ஆய்வு சமர்ப்பிக்க பாரதிராஜா, சென்ஸார் போர்டு எஸ்தர் பாண்டியன், நடிகை கஸ்தூரி, விசாலி கண்ணதாசன் ஆகியோர் பதில் சொன்னார்கள். நிகழ்ச்சி கலகலப்புத்தான். ஆனால் 'மரபு ரீதியான சித்திரிப்பிலிருந்து பெண்களை ஒருவழியாக மீட்டு வரும் காலத்தில் நாமெல்லாம் உயிரோடு இருப்போமா?' என்கிற எண்ணமே மேலோங்கியது! அத்தனை ஏமாற்றம் அளித்த பதில்கள்!

● எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.
? காங்கிரஸ் விழா ஒன்றில் கேக் வடிவிலான இந்தியாவை ஆந்திர அமைச்சர்கள் மூவர் துண்டாடி மகிழ்ந்தனராமே?
! நடைமுறையில் செய்ததை (மொழிவாரி ராஜ்யப் பிரிவினை) சிம்பாலிக்காகவும் காட்டியிருக்கிறார்கள். அதானே!

● கே. மணிகண்டன், ராஜாக்கமங்கலம்.
? ஆன்மீக உணர்வுகள் வளர்ந்து வருகிறதா? மெலிந்து வருகிறதா?
! மார்கழி பிறந்ததும் அதிகாலையில் அலறும் மைக்குகள் ஆன்மீக வளர்ச்சியை உணர்த்தினாலும், 'இந்தச் சத்தத்தை சாமி எப்படி சகிக்கிறார்?' என்ற கோபமானது வளர்ச்சியை உள்ளடக்கி அமுக்கி விடுகிறதே!


● எல். ஆர். விஜயகுமார், சென்னை.
? அ.இ.அ.தி.மு.க. சார்பில் மாணிக்கவேலருக்கு 3 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறதே?
! அந்த நூறு வயதுக்காரர் கொடுத்த மூன்று யோசனைகள் மூன்று லட்சமென்ன; அட்சர லட்சம் பெறும். அவை : பூரண மதுவிலக்கு, அனைவருக்கும் கல்வி, அளவான குடும்பம். இதற்கு முக்கியத்துவம் தராமல் மூன்று லட்சம் தந்து யாருக்கு என்ன பயன்!

● சூர்யநிலா, சேலம்.
? எழுத்தாளர் ம.வே. சிவகுமாரின் திரை உலகப் பிரவேசம் குறித்து?
! பெஸ்ட் ஆஃப் லக்!

● பால. கிருஷ்ணமூர்த்தி, மருங்கூர்.
? உ.பி. சட்டமன்றத்தில் சமீபத்தில் நடந்த அடிதடி, நல்ல அறிகுறியாகத் தெரியவில்லையே?
! அதுமட்டுமா? பி.ஜே.பி. தலைவர்களை நீதிமன்றத்துக்குக் கொண்டு வராமலிருந்து, ''அவர்களை விடுவிப்பது தவிர வேறு வழியில்லை'' என்ற நிலைக்கு நீதிபதியைத் தள்ளிய செயலும் நல்ல அறிகுறி இல்லைதான். உ.பி. அரசின் செயல்பாடு, 'முதல் கோணல் முற்றும் கோணல்' என்றாகி விடாமல், இனியேனும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது. இல்லையேல் பி.ஜே.பி. ஆட்சிக்குத் திரும்ப அதிக நாளாகாது!

● கே. ரமேஷ் பாபு, சேலம்.
? அழகும் அறிவும் ஏன் பெரும்பாலும் சேர்ந்தே உள்ளன?
! சென்னை கிரீன்வேஸ் சாலையில் ஓர் அழகிய நீர்த்தேக்கம் இருந்தது. அதைப் பறவைகள் இயற்கையான சரணாலயமாக்கிக் கொண்டன. அழகாயிருந்தது. அம்பேத்கார் பேரைச் சொல்லி, அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதாகக் கூறி, இதைத் தூர்த்து வருகிறது அரசு. வேறு இடமா இல்லை? அழகும் அறிவும் சேர்ந்திருப்பதாகத் தோன்றவில்லை அன்பரே!

❒ ரூ 25 பரிசு பெறுபவர் :
எம்.கே.என்.,
94, பிள்ளையார் கோயில் தெரு,
ஆவடி, சென்னை - 54.


COCK BRAND FILE
MUTHUVEL
TRADE MARK
46 வருடங்களாக உங்கள் பத்திரங்களை
பாதுகாப்பாக கோர்த்து வைக்க
கோப்புகளாக நாங்கள் பயன்பட்டோம்....
இப்போது உங்கள் பணத்தை பத்திரமாக
சேர்த்துத் தரவும் காத்திருக்கிறோம்!
பணம் சம்பாதிப்பதைவிடவும் உங்களின் அபிமானத்தை சம்பாதிப்பதே எங்களது 46 வருட குறிக்கோள். அதனால்தான் 46 வருடங்களாக நீங்கள் தந்த பணத்திற்கு தரமான கோப்புகளை அளித்த நாங்கள் இன்று நீங்கள் தரப்போகும் முதலீட்டிற்கு கணிசமான வட்டியும், அதிக முதிர்வுத்தொகையும் மனமுவந்து தருகின்றோம்.
உங்கள் டெபாசிட்டிற்கு ஆண்டுக்கு 24% வீதம் மாதா மாதம் வட்டி அனுப்பி வைக்கப்படும்.
குமுலேட்டிவ் டெபாசிட் 3 ஆண்டுகளில் இருமடங்காகும்.
24%
PER ANNUM
குறைந்தபட்ச டெபாசிட்
FIXED DEPOSIT
ரூ.3,000/-
CUMULATIVE DEPOSIT
ரூ.1,000/-
MUTHUVEL INDUSTRIES
Mfrs. of COCK BRAND OFFICE FILES,
Angappa Chettiar Industrial Complex, 20-A, Round Road,
P.B. No.32, DINDIGUL - 624 001, TAMIL NADU.
✆: OFF: 23316, 25260 & 27637 RES: 25643 & 23726
உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி.

பாண்டியன் மகள்



51. வரதன் அளித்த வரம்

போர்களால் நாட்டை விஸ்தரிப்பது மட்டுமல்ல, மக்களின் நலன்தான் அரச குலத்துக்குப் பிரதானமாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்த குலோத்துங்கனின் கனவு, மக்களின் நிம்மதியான வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

''ஸ்ரீ வல்லபரே! காலிங்கராயா! இந்தச் சித்திரங்கள் கூறும் கதை இதுதான்: ஆண்டாண்டு காலமாகப் பாண்டியர் நமக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்தியே வந்திருக்கிறார்கள். இந்நிலையை மாற்ற வேண்டும் என்பது என் விருப்பம். இம்முறை பாண்டியர் பகை பாராட்டுவதைத் தவிர்க்கவும் நிரந்தர உறவு ஏற்படவும் பாண்டிய இளவரசியை விக்கிரமனுக்கு மணமுடித்தோம். ஆனால் மார்த்தாண்டனைச் சேர்ந்தவர்களும் ஈழத்திற்குத் தப்பி விட்ட குலசேகரனும் இருக்கிறார்கள். சேரலாதன் பலம் பெற்றதும் நம்மை எதிர்க்கப் போவதாக நேரிடையாகவே தெரிவித்திருக்கிறான். மீண்டும் போர் ஏற்படுவதைத் தடுக்கவும் ஏற்கெனவே புண்பட்டிருக்கும் பாண்டிய மக்களுக்கு அமைதியளிக்கவும் ஒரு நிரந்தர திட்டம் வகுத்திருக்கிறேன். அதற்கு மதுராந்தகனைப் பயன்படுத்திக் கொள்ளவும் தீர்மானித்திருக்கிறேன்'' என்றான் மன்னன்.

ஸ்ரீ வல்லபர் வினவினார்: ''மன்னவா, காஞ்சிக்கு வந்து நான் விழாவில் கலந்து கொண்ட பின் மதுரைக்கு வந்து பொறுப் பேற்கலாமல்லவா?''

''விழாவா? என்ன விழா?'' - மன்னன் கேள்வியில் வியப்பு இருந்தது.

''மன்னவா, சாளுக்கியரையும் சேரரையும் பாண்டியரையும் வென்றிருக்கிறீர்கள்.''

''ஆம். உங்கள் திறமையாலும் ஒத்துழைப்பாலும்.''

''தாங்கள் சக்கரவர்த்தியாக முடிசூட, பட்டர் அனைத்து ஏற்பாடுகளும் செய்திருக்கிறார் காஞ்சியில்.''

பதிலுக்கு நகைத்தான் மன்னன். ''பட்டர் என்மீது கொண்டிருக்கும் அன்புக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் தற்போது நான் சக்கரவர்த்தியாக முடிசூடப் போவதில்லை'' என்று திட்டவட்டமாக அறிவித்தான்.

விஷ்வக்சேனன்

"புஷ்பேஷு ஜாதி, புருஷேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா, நகரேஷு காஞ்சி."

என்று நகரங்களிலேயே சிறந்ததாகக் கருதப்பட்ட காஞ்சி மாநகரில், அந்த அதி காலை நேரத்தில், கதிரவன் கூடச் சற்றே தனது கடு கதிர்களை அடக்கிக் கொண்டு அச்சத்துடனே பிரவேசித்தான். சிவகாஞ்சி, புத்தகாஞ்சி, வைணவக் காஞ்சி, ஜைன காஞ்சியென்று நான்கு பெரும் கோட்டங்களை உள்ளடக்கி, பல்லவ காஞ்சியென்ற பெயரும் மறைந்து, சோழ காஞ்சியென்றே வழங்கிய அந்த நகரில், காலை வேளையில் ஒருபுறம் ஆழ்வார்களின் பாசுரங்களும் நாயன்மார்களின் பதிகங்களும் புத்த, ஜைன சங்கத்தாரின் கோஷங்களும் எழுந்து காற்றையும் அதை சுவாசித்த மக்கள் மனங்களையும் சுத்தமாக்கிக் கொண்டிருந்தன.

சகல கலைகளுக்கும் இருப்பிடமாக விளங்கியதால் பெருமிதமுற்றுக் கம்பீரமாக வானைத் தொட்டுவிட உயர்ந்து நின்ற மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் கண்களைக் கூசச் செய்தன.

வரங்களை அள்ளித் தருவதாலேயே வரதராஜன் என்றும் பக்தருக்கு ஏற்படும் சங்கடங்களை நீக்க விரைந்து செல்ல, காற்றையே வாகனமாகக் கொண்டதால் "வரதோ வாயு வாஹன" என்றும் பெயர் பெற்றுவிட்ட வரதராஜப் பெருமாளின் சன்னிதியில் நின்றிருந்த அரையனின் மனம், காஞ்சியை அணைத்து ஓடிய வேகவதி ஆற்றின் நீரைவிடக் குளிர்ந்திருந்தது. நீண்ட நேரமாக அப்படியே நின்றிருந்த அரையனை நோக்கி ஆறுதலையும் நிம்மதியையும் உயர்வையும் பூரணமாக அளிக்க வல்ல வரதனின் ஹஸ்தம் உயர்ந்திருந்தது. வைத்த கண் வாங்காது வரதனையே நோக்கிய அரையன், குறுகிய காலத்தில் தன்னை அந்த வரதன் எந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறான் என்பதை எண்ணி, விழிகளில் ஆனந்தக் கண்ணீர் தளும்ப நின்றான்.

அவன் எண்ணத்தை ஆமோதிப்பது போல் வெளிப் பிரகாரத்தில் நின்றிருந்த ஆலயத்து யானையொன்று பிளிறியது. அந்த சுப சகுனத்தைக் கேட்டுத் தலை வணங்கிய அரையனின் தோளில் யானையின் துதிக்கையை விடப் பலமான கரமொன்று விழுந்தது.

"இங்கே இருக்கிறாயா மதுராந்தகா? மன்னர் உன்னை அழைத்து வரப் பணித்தார்" என்று தமது வெண்கலக் குரலில் அறிவித்த ஸ்ரீ வல்லபர், தானும் திருத்துழாயும், தீர்த்தமும் பெற்றுக் கொண்டு அரையனையும் அழைத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். தான் வரதன் சன்னிதியில் நெடு நேரம் நின்று விட்டதால் தாமதமாகி விட்டதை உணர்ந்து கொண்ட அரையன், ஸ்ரீ வல்லபரின் வேக நடைக்கு ஈடு கொடுத்தான்.

அருள்வாக்கு

ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொன்றுக்குப் போனவர்களை அந்தப் பிரதேசப் பேரை வைத்தே குறிப்பிடுவார்கள். மஹாராஷ்டிரத்தில் இப்போது பலருக்கு 'டிலாங்' என்று (இயற்) பெயருக்குப் பின்னால் வருகிறதைப் பார்க்கிறோம். இவர்களுடைய முன்னோர்கள் தெலுங்கு தேசத்திலிருந்து மஹாராஷ்டிராவுக்குப் போய் அங்கேயே 'ஸெட்டில்' ஆகி விட்டார்கள். 'தெலுங்கு' என்பதன் திரிபுதான் 'டிலாங்'. இதே மாதிரி, காசி முதலான அநேக உத்தரதேச

தாமதத்திற்கு வருந்தி மன்னிப்புக் கேட்டபடியே உள்ளே நுழைந்து மன்னனை வணங்கிய அரையன், தனக்களிக்கப்பட்ட இருக்கை, ஸ்ரீ வல்லபருக்கு அடுத்தபடி இருந்ததைக் கவனித்தான். படைத் தலைவனுக்குரிய அந்தஸ்தை தனக்களிக்க மன்னன் தீர்மானித்திருப்பதைப் புரிந்து கொண்டான். மண்டலத் தலைவர்களின் விழிகளும் மக்களின் விழிகளும் தன் மீது சற்று வியப்புடனே பதிந்திருப்பதைக் கண்டு, இருக்கையில் சற்று அசைந்தான். சபையில் மெலிதான சலசலப்பு எழுந்தது.

மன்னனது சமிக்ஞையைத் தொடர்ந்து எழுந்து வணங்கிய பேரமைச்சர், குரலைச் செருமிக் கொண்டார். அவையில் நிசப்தம் நிலவியது. அமைச்சரின் குரல் அவையை ஊடுருவியது.

"சோழப் பெரு மக்களே, மண்டலத் தலைவர்களே, இதோ அமர்ந்திருக்கும் வாலிபன், திருநாராயண பட்டரின் சீடன்; சாளுக்கியப் போரில் வீரமரணமடைந்த நம் யானைப் படைத்தலைவரின் மகன் அரையன் மதுராந்தகன்" என்று விஸ்தாரமாக அறிமுகம் செய்த பல்லவராயர், தொடர்ந்து மேலைமங்கலப் போரைப் பற்றியும், பொதிகைக் கூற்றத்திலிருந்து பாண்டிய இளவரசியை அவன் மீட்டதையும் சுருக்கமாகக் கூறினார். பின் சமுத்திரபந்தனாக



ஸ்தலங்களில் இருக்கிற சில பிராம்மணர்களுக்கு 'த்ருவிட்' என்று வம்சப் பெயர் இருக்கிறது. ஆதிகாலத்தில் தமிழ் தேசத்திலிருந்து அங்கே போய்க் குடியேறினவர்களின் வம்சத்தில் வந்தவர்களே இந்த 'த்ரவிட்'கள். இப்படி 'திராவிடர்' என்று பெயர் கொண்ட வடக்கத்தியார் எல்லாரும் பிராமணர்களே என்பதைக் கவனிக்க வேண்டும். ரேஸ் தியரிப்படி, பிராமணர்கள் திராவிடர்களுக்கு மாறானவர்கள், விரோதிகள், எதிரிகள் என்று கூடச் சொல்கிறார்கள். ஆனால் வாஸ்தவத்திலோ இன்றைக்கு வட தேசத்தில் தமிழ் நாட்டுப் பிராமண வம்சத்தவர்களுக்கேதான் 'த்ரவிட' அடைமொழி இருக்கிறது. இதிலிருந்தே 'திராவிட' என்பது பிரதேசத்தைக் குறிப்பதேயன்றி, இனத்தைக் குறிக்கவேயில்லை என்று தெரிகிறதல்லவா?

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சேரநாடு சென்று புரிந்த செயல்களையும், சாளுக்கிய எல்லையில், நவிலைக் கோட்டையில் வாட்போரில் வெல்ல இயலாதவன் என்று பெயரெடுத்திருந்த கொடியவன் ஜெயதுங்கனை வென்று, சோழ இளவலை மீட்டதையும் கூறினார். கோட்டாற்றுப் போர்த்திட்டத்தை சாளுக்கிய எல்லையிலேயே அரையன் வகுத்ததையும் தெரிவித்தார்.

அவையில் அசாதாரண அமைதி நிலவியது. குலோத்துங்கன் பெருமிதப் புன்னகையுடன் அரையனின் சாகசங்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். திருநாராயண பட்டரின் சாந்தமான சலனமற்ற முகத்தில் கூட புன்னகை மலர்ந்திருந்தது. பல்லவராயர் தொடர்ந்தார்.

சேரநாட்டு கடற்படைத் தளமான விழிஞத்தைக் கைப்பற்றியதையும் மாறவர் மனை மலைக் கணவாயில் மடக்கியதையும் மார்த்தாண்டனைத் தொடர்ந்து மதுரைக்கு வந்து அவன் சதியைக் கண்டறிந்ததையும் கூறி முடித்தார்.

பிரமிப்பில் சிலைகளாகிவிட்ட அவையினர் திடீரென விழித்துக் கொண்டு, அரையனை வாழ்த்திக் கோஷமிடத் தொடங்கினர். அவையைக் கையமர்த்திய அமைச்சர், கையிலிருந்த செப்புப் பட்டையத்தைப் படிக்க ஆரம்பித்தார்:

''சேரநாட்டை வெல்லத் திட்டம் வகுத்ததுடன் அதைச் செயல்படுத்தி வெற்றியும் தேடித் தந்ததால் ''குலோத்துங்க சோழ கேரளராஜன்''★ என்ற பட்டத்தை அரையன் மதுராந்தகன் பெறுகிறான். சோழ நாட்டுக்கு ஒப்பற்ற சேவை செய்த அவனுக்கு, அவன் பிறந்த ஊரான முறையூரையும், அது அமைந்த மண்ணியூர் கோட்டத்தையும் பெரு மகிழ்வுடன் பரிசாக அளிக்கிறார் மன்னர். இது சோழ குலோத்துங்கரின் ஆக்ஞாபத்திரமும் பட்டயமும் ஆகும் என்று அமைச்சர் படித்து முடித்ததும் அவையில் எழுந்த வாழ்த்தொலி அடங்க வெகு நேரமாகியது.

அரையன் கனவுலகில் மிதந்தான். சாதாரண வீரனாக இருந்த அவனை அந்தப் பட்டயம் வெகுவாக உயர்த்திவிட்டதையும் இனி படைத்தலைவர்களுக்கும் கோட்டத் தலைவர்களுக்கும் சமமாக மதிக்கப்படுவோம் என்பதையும் எண்ணிய அவனுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. அருகில் அமர்ந்து அவை அதிர நகைத்த ஸ்ரீ வல்லபர், ''ஆகா ஆகா'' என்று அறைந்த அறை கூட அவனுக்கு உறைக்கவில்லை!

ஏதோ கனவில் நடப்பவனைப் போல் நடந்தவன், பட்டயத்தைப் பெற்றுக் கொண்டு ஆசானையும் மன்னனையும் தலைதாழ்த்தி வணங்கினான்.

மன்னன் ஆணையை ஏற்று அவை கலைந்து சென்ற பின்னரும் கூட அவன் திகைப்பு மாறவில்லை. இருக்கையிலிருந்து எழுந்த மன்னன் அரையனை நெருங்கி, அவன் தோள் மீது தன் வலிய கரத்தை வைத்தான். அரையன் உடல் சிலிர்த்தது.

''மதுராந்தகா, உன்னிடம் மற்றொரு

★ முதல்குலோத்துங்க சோழன் - பக் 73
- சதாசிவ பண்டாரத்தார்.



செந்தூரப் பாண்டி

'நான் செந்தூரப்பாண்டியின் தம்பி' என்று அவ்வப்போது காலர் தூக்குகிறார் விஜய். நடிப்பில் தூக்க வேண்டுமே! விஜயகாந்த், விஜய் இருவரும் அண்ணன், தம்பி.

விஜய்க்கு வாலிபப் முகம் என்றால், ஜோடி குச்சி ஜல் யுவராணி. கவர்ச்சி நடிகையின் வேலையையும் சேர்த்துச் செய்கிறார்.

ஷோபாவின் கதை. பல இடங்களில் ஜகா வாங்குகிறது. உயிரோடு சமாதி, பிணத்தை வைத்துப் பாதபூஜை, அதன் கையால் ஆசீர்வாதம்! செண்ட்டிமெண்டுக்கும் ஒரு எல்லை வேண்டாமா?

துரத்தித் துரத்தி விஜயகாந்த் வெட்டுகிறார். ரத்தம் முகத்தில் தெறிக்க, தலை அலக்காய்த் தனியே விழுகிறது. சென்ஸாரில் பல் குத்திக் கொண்டிருந்தார்களா? இவருக்கு ஜோடி கௌதமி. ஒரே பாட்டோடு மூட்டை கட்டிக் கொள்கிறார்.

விஜயகுமாரும் மனோரமாவும் அப்பா அம்மா. செண்ட்டிமெண்டின் மொத்த குத்தகை. ஒத்து ஊத எஸ்.எஸ். சந்திரன். ஒட்டாத நடிப்பு.

போதாக்குறைக்கு டைரக்டரே வேறு நடிக்கிறார். இரண்டு மூன்று காட்சிக்கு ஒருமுறை எவர்சில்வர் பாத்திரம் விற்பவன் போல் பாடுகிறார். கையில் கடப்பாறையோடு அலைகிறார். விஜயகாந்த் அதைக் கொண்டு கடைசியில் வில்லனைக் கொல்கிறார். அதற்காக நம்மையும் கொல்ல வேண்டுமா?

புகுந்து விளையாடுவது காமிரா. பல அழகான லொகேஷன்கள். பாடல் காட்சிகளும் இசையும் தெம்பு. முணுமுணுக்க வைப்பது 'செந்தூரப் பாண்டி' பாடல்.

காதல், கல்யாணம், வன்முறை, இது மூன்றும்தானா எப்போதும் பிரச்னைகள்? கொஞ்சம் காலை பேப்பர் படியுங்கள் சார். உண்மைப் பிரச்னைகள் கண்ணில் படும்.

- துளசி

பெரும் பொறுப்பை ஒப்படைக்கப் போகிறேன்'' என்றான் மன்னன்.

''உத்தரவிடுங்கள் மன்னா!''

''மாறவர்மனும் அவனைச் சேர்ந்தவர்களும் இன்னுமிருக்கிறார்கள். குலசேகரனோ, ஈழத்திற்குத் தப்பி விட்டான். சேரலாதன் வலிமை பெற்றதும் நம்மை களத்தில் சந்திப்பதாக நேரிடையாகவே கூறியிருக்கிறான். இந்தப் போர்கள் சற்று ஓய்ந்து மக்களுக்கு சிலகாலம் அமைதி கிட்ட வேண்டுமென விரும்புகிறேன். நாட்டை வளப்படுத்தவும் மற்றத் திட்டங்களைச் செயல்படுத்தவும் அப்போதுதான் இயலும்'' - மன்னன் முகத்தில் சிந்தனை படர்ந்திருந்தது.

''மன்னர் உத்தரவிட்டால் இதற்கு வழியொன்றைக் கூறுகிறேன்.''

''சொல், மதுராந்தகா!''

''இளவரசர் மதுரையிலிருக்கிறார்.''

''ஆம்.''

''அங்கு எந்தக் கலகமும் எழ வாய்ப்பில்லை.''

''சரி.''

''பாண்டியரையும் சேரனையும் ஏன், ஈழத்தையும் கூட கண்காணிக்கச் சிறந்த இடம் கோட்டாறுதான். அங்கு நமது நிலைப்படையொன்றை நிறுவினால் கண்காணிப்பிற்கும் கலகத்திற்கான எந்த முயற்சியையும் முளையிலேயே கிள்ளி எறிவதற்கும் சாதகமாக இருக்கும்.'' - மன்னன் முகத்தில் வியப்பு மலர்ந்தது. ''நானும் ஏறக்குறைய இப்படித்தான் திட்டமிட்டிருந்தேன்'' என்றவன், அமைச்சரின் பக்கம் திரும்பினான்.

''பல்லவராயரே, ஏற்கெனவே நான் கூறியபடி கோட்டாற்று நிலைப் படைக்கு மதுராந்தகனைத் தலைவனாக நியமித்து, பட்டயமெழுதி விடுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

மன்னன் பார்வை திருநாராயண பட்டரின் சலனமற்ற முகத்தை நோக்கித் திரும்பியது.

''குரு தேவர் நான் சக்கரவர்த்தியென்று பட்டம் சூடிக் கொள்ள இணங்கவில்லையென வருந்துகிறார். பாண்டிய நாட்டிலும் சேர நாட்டிலும் நமது ஆட்சியில் பூரண அமைதி நிலவுகிறது என்றும் மக்கள் எந்தக் குறையுமின்றி நிம்மதியான வாழ்வு நடத்துகிறார்கள் என்றும் மதுராந்தகன் மனதார அறிவிக்கும் வரை, சக்கரவர்த்தியென பட்டம் சூட்டிக் கொள்ள எனக்குத் தகுதியிருப்பதாக நான் நினைக்கவில்லை. எனவே குருதேவர் ஆசையைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு மதுராந்தகன் கரங்களில்தான் இருக்கிறது!''

திருநாராயணபட்டர் மன்னனை நெருங்கி வந்தார். அவர் முகத்தில் நிலவிய

உங்கள் குழந்தை நன்றாக எடை போடுவதற்கு சமவிகித ஊட்டச் சத்து அத்தியாவசியமானது.

குழந்தைகள் சும்மா எடை போட்டால் மட்டும் போதாது. அவர்கள் 'சரியான' முறையிலே எடை போட வேண்டும். குறைவாகவும் கூடாது, மிகவும் அதிகமாகவும் கூடாது. குழந்தைகள் 'சரியான' அளவில் எடை போட வேண்டுமானால் தசைகளையும், திசுக்களையும் வளர்ப்பதற்கும் ரத்த விருத்திக்கும் உதவக் கூடிய **புரோட்டீன்கள்** தேவை.

இந்த புரோட்டீன்களைப் பெறுவதற்குச் சிறந்த வழி **ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைத் தர** வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு **4 மாதங்கள் ஆன பிறகு** பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு உங்கள் குழந்தைக்குத் தேவைப்படுகிறது.

எனவேதான் தாய்மார்கள் **செரிலாக்கைத்** தேர்ந்தெடுக்கின்றனர். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவான செரிலாக்கில் புரோட்டீன்கள் செறிந்துள்ள இரண்டு முக்கிய பொருட்களான பாலும் கோதுமையும் உள்ளன. கொழுப்புச் சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்களும் சம அளவில் கலந்துள்ளன. மேலும் இதற்கு வைட்டமின்கள் A, D, E, B-காம்ப்ளெக்ஸ் மற்றும் C பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்போது நெஸ்லேயின் **புரட்சிகரமான புதிய Z-லைன் என்ஸைமேட்டிக் முறைப்படி** தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகிறது. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகிவிடுகிறது.

மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு புரோட்டீன்கள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை 'சரியான' முறையிலே எடை போடுவதற்குத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு இது.






Mudra:NES:01 42 TML

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

இலவசம். செரிலாக் பேபி கேர் புத்தகம்

உங்கள் குழந்தையின் வயது/பிறக்கப் போகும் தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை எமக்கு எழுதுக: செரிலாக், தபால் பை எண் 21, புது தில்லி - 110 025.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.



“இந்த வாரம் உங்க பத்திரிகையோட ‘உப்புப் பாக்கெட்’ ஒன்று இலவசமா தருகிறீர்களே... ஏன்?”


“இந்த வாரம் சிறுகதை ஸ்பெஷல்! கதைகளைப் படிச்சுட்டு யாரும் ‘உப்புச் சப்பில்லாம இருக்கு’ன்னு புகார் சொல்லிடக் கூடாது பாருங்க!”

- கோவில்பட்டி ஜான் ரவி.



“எவன்டா அவன்... கண்ணாடியைத் தலைகீழா மாட்டித் தொலைச்சது?”

- ஜுனியர் தேஜ்.



“வயல்லே என்ன போடறீங்க?”

“நெல்லு போடுவோம்.... கரும்பு போடுவோம்... சில சமயம் ஏரோப்பிளேன் போடுவாங்க..!”

- கார்த்திக் ராஜா.

லேசான வருத்தக்குறி மறைந்திருந்தது.

''மன்னா, மக்களின் அமைதிக்கும் நிம்மதியான வாழ்வுக்குமே முதலிடமளிக்கும் நீதான் சக்கரவர்த்தியென்று பட்டம் பெற முற்றிலும் தகுந்தவன். எனினும் எனது சேடன் நீ கூறியவற்றை விரைவில் சாதித்துக் காட்டுவான்'' என்றார்.

(கவி வாக்குப் பொய்ப்பதில்லையென்பதைக் காலம் நிரூபித்தது. நிலைப்படையின் தலைமையை ஏற்ற அரையன், பாண்டியர் விளைவித்த சிறு பூசல்களையும் சேரலாதனின் படை திரட்டும் முயற்சியையும் பூண்டோடு ஒழித்து, பூரண அமைதியை நிலைநாட்டினான். மூன்றாவது ஆண்டின் துவக்கத்திலே குலோத்துங்கன் சக்கரவர்த்தியென்று பட்டம் புனைய வழி வகுத்தான்.)★

அவை கலைந்தபின் மற்றொரு முக்கியப் பணியை நிறைவேற்றத் திரும்பிய மன்னன், அரண்மனை அந்தப்புரத்தை அடைந்தபோது அங்கு அவனுக்காக ஒரு போர் காத்திருந்தது!

கோபம் பொங்கி வழிந்த விழிகளோடு புவனமாதேவி தொடுத்த கேள்விக் கணைகளைச் சமாளிக்க இயலாது திணறியே போனான் குலோத்துங்கன்.

''மன்னர், சக்கரவர்த்திப் பட்டம் சூடுவதைத் தள்ளிப் போட்டு விட்டதாகத் தெரிகிறது?''

''ஆம் தேவி. நமது ஆட்சியில் பாண்டிய நாடு பூரண அமைதி பெறும் வரை எனக்கு அப்பட்டம் பெறத் தகுதியில்லை எனக் கருதுகிறேன்.''

''மதுராந்தகனுக்கு ஏதோ பட்டங்கள் அளித்ததாகத் தெரிகிறது.''

''ஆம். அளித்தேன்.''

''கோட்டாற்றுக்கு அவனைப் படைத் தலைவனாக அனுப்புவதாக அறிந்தேன்.''

''உண்மைதான். இதில் நீ வருத்தமடையும்படி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே தேவி?''

மகாராணியின் விழிகள் கோபத்தில் மேலும் விரிந்தன.

''வருந்துவது நானல்ல.''

''பின் யார்?''

மன்னனது கேள்விக்குப் பதிலேதும் கூறாத புவனமாதேவி, அவனது வலிய கரங்களைப் பற்றித் தரதரவென இழுக்காத குறையாக அழைத்துச் சென்றவள், சாளரத்தின் வழியே கீழே சுட்டிக் காட்டினாள்.

அந்தப்புரத்தின் பின் பகுதியில் நந்தவனத்திற்குச் செல்லும் பாதையில், மேடையொன்றின் மீது சோகமே உருவாக, செதுக்கி வைத்த சிலையாக அமர்ந்திருந்தாள் சோழ இளவரசி அம்மங்கைத் தேவி.

(தொடரும்)

★ முதல் குலோத்துங்க சோழன் - சதாசிவப் பண்டாரத்தார்.


வொர்ஸ்டட்
சூட்டிங்ஸ்
அளிக்கும்
சொகுசான ஃபால்.
மற்றும் உணர்வு.
இப்போது
சேஸாரி ப்ரிமீயம்
வொர்ஸ்டட் சூட்டிங்ஸ்
பறைசாற்றும் இந்த
வித்தியாசத்தை.
மிருதுவான மற்றும்
மென்மையான
உணர்வை வழங்கும்
சூட்டிங்ஸ். அணிய
லேசானது. மிகச் சிறந்த
பகட்டு மற்றும் நேர்த்-
தியான ஃபினிஷ்.
சேஸாரி ப்ரிமீயம்
வொர்ஸ்டட் சூட்-
டிங்ஸ் நேர்த்தியான
உல் மற்றும் தரமான
பாலியெஸ்டர்
இணைந்தது. ஃபால்
மற்றும் அணியும்
உணர்வில்
நிகரற்றது.
அறிமுகம்
ப்ரிமீயம்
சேஸாரி
வொர்ஸ்டட் சூட்டிங்ஸ்
பாம்பே டையிங்

மரியாதை

என் மனைவியின் சித்தி பையன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தோம், ஸ்கூட்டரில்.

வழியில், பெட்ரோல் பங்க்கில் ஸ்கூட்டரை நிறுத்தினேன். ரிசர்வ் விழுந்து விட்டது.

''வணக்கம் சார். வணக்கம்மா!'' என்று சலாமடித்தபடி வந்தான் ஒரு இளைஞன்.

''அட, நீ எங்கேப்பா இங்கே?'' என்றேன் வியப்புடன்.

எங்கள் தெருவிலே குடியிருக்கிறான். ஒரு முறை திடீர் பஸ் ஸ்டிரைக் நடந்த போது, அவனை என் ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு வீட்டில் விட்டிருக்கிறேன். அந்த நன்றி எப்போதும் அவன் கண்களில். இப்போதெல்லாம் மிகவும் பவ்யமாய் நடந்து கொள்கிறான்.

''வரோம் தம்பி'' என்றபடி ஸ்கூட்டரைக் கிளப்பினேன்.

''அம்மா படற கஷ்டம் உணர்ந்து, பையனும் கிடைச்ச வேலையில இருக்கான். நல்ல பையன்!'' என்று பானு அவனுக்கு நன்னடத்தைச் சான்றிதழ் கொடுத்தாள், போகும்போது.

அவன் அப்பா நான்கு வருடம் முன்பு இறந்து போனதால் சிரமப்படுகிறதாம் குடும்பம். பானு அளித்த உபரித் தகவல் இது.

பானுவின் சித்தி பையன் வீட்டின் முன் ஸ்கூட்டரை நிறுத்தினோம். அவர்கள் மகளுக்கு இன்று பிறந்த நாள். கட்டாயம் வரவேண்டும் என்று வற்புறுத்தி அழைத்ததால், வந்திருக்கிறோம். இத்தனைக்கும் இருபதாவது பிறந்த நாள்!

''வாங்க, வாங்க'' என்று அகமும் முகமும் மலர வரவேற்றனர்.

நான் அதிகம் இங்கு வந்ததில்லை. இரண்டு குடும்பங்களுக்கும் நடுவே தொடர்பு கூடக் கொஞ்சம் கொஞ்சம்தான்.

''உட்காருங்க'' என்று மரியாதையுடன் சோபாவை சுட்டிக்காட்டினார் ரகு - சித்தியின் பையன்.

''குழந்தைகளைக் கூட்டிக்கிட்டு வரலியா பானு?'' என்று உரிமையுடன் அதட்டினார். இருவருக்கும் வயது வித்தியாசம் அதிகம்.

''ராகவி எங்கே? பிறந்த நாள் வாழ்த்துக்கள்!'' என்றபடி பக்கத்து அறைக்குள் நுழைந்து, மறைந்தாள் பானு. குரல் மட்டும் சளசளத்துக் கொண்டிருந்தது.

ரஸ்னா ஜூஸ் 'ஜில்'லென வந்தது. தொண்டைக்கு இதமாய் இருந்தது.

அதுவரை ஓடிக் கொண்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டியை ரகு அணைத்தார்.

'டீ.வியை விட நீ முக்கியம்' என்று குறிப்பால் உணர்த்தியது பெருமையாய் இருந்தது.

''சொல்லுங்க'' என்று எனது எதிரே சேரில் அமர்ந்தார் ரகு.

ராகவி அறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''அங்கிள், இந்தாங்க ஸ்வீட்!'' என்று தட்டை நீட்டினாள். மைசூர்பாகு அழகாக சதுரம், சதுரமாய் வெட்டப்பட்டிருந்தது.

''என் பர்த்டே ட்ரஸ் நல்லாயிருக்கா?'' என்றாள் கண்கள் விரிய.

நீலக்கலர் டாப்ஸ். சூரிதார் உடை அவளுக்குப் பொருத்தமாய் இருந்தது. அதை விட எனது அபிப்ராயம் மிகவும் அவசியம் என்பது போன்ற குரலில் அவள் பேசியது பிடித்திருந்தது.

''அமர்க்களமாயிருக்கு'' என்று நான் சொன்னதும் குதித்துக் கொண்டு உள்ளே ஓடினாள்.

''நீங்க சொன்னதும் எவ்வளவு பூரிப்பு பாருங்க!'' என்றார் ரகு. என் முகத்தில் பெருமையாய் விரிந்தது மலர்ச்சி.

இங்கு நான் மட்டுமே முக்கியம் என்பதாய் இருந்தன அவர்களின் பேச்சு.

எவ்வளவு நல்ல மனிதர்கள்! இத்தனை நாள் பழகாமல் இருந்து விட்டோமே என்று வருத்தப்பட்டேன்.

''ஒரே ஊரிலிருந்தும், நாம நெருங்கிப் பழகாமல் போனது வருத்தமாயிருக்கு'' என்று ரகு சொன்னதும் வியந்து போனேன்.

ஒத்த எண்ண ஓட்டம்!

''ரகுவுக்கு அவன் சொந்தத் தங்கையை

கிருஷ்ணா

விட, நான் என்றால் தனி பிரியம்!'' என்றாள் பானு, ஸ்கூட்டரில் திரும்பும் போது.

''எப்ப ராகவியைக் கூட்டிட்டுப் போகப் போறீங்க உங்க நண்பர் வீட்டுக்கு?''

''இன்னிக்கு புதன் கிழமையா? வெள்ளிக்கிழமை போகலாம்னு இருக்கேன்'' என்று பதிலளித்தேன்.

எனது நண்பன் மோகன் மூன்று மாதம் முன்புதான் இந்த ஊருக்கு வேலை மாற்றம் பெற்று வந்திருக்கிறான்.

'நிர்மல் ஃபைபர்ஸ்' ஆலையின் பர்சனல் மானேஜர். தென்னிந்தியா முழுதும் கிளைகள் உள்ள பெரிய நிறுவனம்.

நாங்கள் இருவரும் பள்ளி முதல் கல்லூரி வரை ஒன்றாய்ப் படித்துத் தேறியவர்கள். அதைவிட அவனது ஏழ்மையின் காரணமாய் அவனது ஸ்கூல் ஃபீஸ், தேர்வுக் கட்டணம் எல்லாவற்றையும் என் அப்பாவே கட்டியிருக்கிறார். அதனால் ஓரளவு நன்றிக்கடன் பட்டவனும் கூட.

இந்த ஊருக்கு வந்ததும் நேரே என் வீடு தேடி வந்து சொல்லிவிட்டுப்போகுமளவு இன்னமும் நன்றி மறக்காத நண்பன்.

அவன் மூலம் ராகவிக்கு வேலை ஏற்பாடு செய்ய வேண்டும்.

எப்படியோ செய்தி கேள்விப்பட்டு ரகு எங்கள் வீட்டுப் படியேறி உறவைப் புதுப்பித்துக் கொண்டார்.

நானும் உதவுவதாய்ச் சொல்லி விட்டேன், பானுவின் வற்புறுத்தலை மீற முடியாமல்.

வெள்ளிக் கிழமை காலை ராகவி எங்கள் வீட்டுக்கு வர, ராகு காலம் முடிந்த பிறகு அவளை அழைத்துக் கொண்டு கிளம்



பினேன்.

'நிர்மல் ஃபைபர்ஸ்' ஆபீஸ் எங்களை வரவேற்றது.

ரிஸப்ஷனில் விவரம் சொல்லிக் காத்திருந்தோம். ஹெட் ஆபீஸிலிருந்து எம்.டி. வந்திருப்பதாகவும், மோகன் அவருடன் மீட்டிங்கில் இருப்பதாகவும், இன்று யாரையும் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டதாகவும் ரிசப்ஷனிஸ்ட் சொன்னாள்.

''என் பெயரைச் சொன்னீங்களா?'' என்றேன் ராகவியின் ஏமாற்றமடைந்த முகத்தை கவனித்தபடி.

''ஓ எஸ்! நோ விசிட்டர்ஸ்னு சொல் விட்டார்.''

ஏமாற்றத்துடன் திரும்பினோம்.

அடுத்த நாள் மாலை என் அலுவலகம் முடிந்து நேரே மோகன் வீடு தேடிச் சென்றேன், ராகவியுடன்.

அங்கும் பார்க்க முடியவில்லை.

அந்த வாரம் முழுதும் முயற்சித்தேன்.

எம்.டி. வருகை, ஃபாரின் டெலிகேட்ஸ் விசிட், மினிஸ்டர் வருகை, லேபர் பிரச்னை... ஏதேதோ காரணங்கள்.

மோகன் வேண்டுமென்றே என்னைத் தவிர்க்கிறானோ....!

எனக்குள் கூட சந்தேகம் முளைவிட்டது.

போகப்போக ராகவியின் உற்சாகம் கூட வடிந்து விட்டது.

பத்து நாள் கழித்து நான் மட்டும் தனியாய் ஆபீஸ் முடிந்ததும் ரகு வீடு தேடிச் சென்றேன்.

''வாங்க'' என்று வரவேற்ற ரகுவின் குரலில் உணர்ச்சியில்லை.

அவர் சொல்லாமலே சோபாவில் அமர்ந்தேன். டீ.வி ஓடிக் கொண்டிருந்தது. ஏதோ டிராமா.

வீடே டீ.வியின் பால் ஈர்க்கப்பட்டிருப்பதை உணர்ந்தேன்.

ரகு, அவர் மனைவி, ராகவி, அவள் தம்பி அனைவரும் நாடகத்தின் அறுவை ஜோக் ஒன்றுக்கு சிரித்துக் கொண்டிருந்தனர்.

ஒருவர் கூட என்னிடம் பேச முயலாதது சங்கடமாய் இருந்தது.

''அப்ப, நான் வரேன்'' என்று கிளம்பினேன்.

''காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாமே'' என்ற ரகுவின் குரலில் பழைய விருந்தோம்பல் இல்லை. இயந்திரத்தனமான குரல்! அப்பப்பா! மனிதர்கள்தான் எப்படி மாற்றிக் கொள்கிறார்கள் தம் இயல்பை! எப்படி எல்லாம் வெளிப்படுத்துகிறார்கள் தங்கள் மனதை, குரல் மூலம்!

காப்பியை மறுத்துவிட்டுக் கிளம்பினேன்.

சம்பிரதாயமாக வாசல்வரை வந்தவர், நான் ஸ்கூட்டரைக் கிளப்புவதற்கு முன்பே வாசலைத் தாழிட்டு விட்டார்.

வழியில் பெட்ரோல் பங்க். சட்டைப் பையைப் பார்த்தேன். பெட்ரோலுக்குப் பணமிருந்தது.

''வாங்க சார்'' என்றான் எங்கள் தெரு இளைஞன் பவ்யமாய்.

''எத்தனை லிட்டர் சார்?''

பணத்தைக் கொடுத்தேன். அவன் பில் போட ஓடினான், என்னைக் காக்க வைக்க மனமில்லாமல்.

மோகன் இன்று என் ஆபீசுக்குப் போன் செய்தான்.

எதிர்பாராத வேலைப் பளுவில், ஒரு வாரமாய் நான் அலைந்தும் சந்திக்க இயலாமல் போய்விட்டதற்கு மன்னிப்புக் கேட்டான். வார்த்தைக்கு நூறு மன்னிப்பு சொன்னான்.

பெரிய பதவியில் இருப்பதால் இது மாதிரியான சங்கடமான நிலை என்று விளக்கினான்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரிந்தவருக்கு வேலை வேண்டும்'' என்றேன்.

நாளை காலை அலுவலகத்துக்கு வந்து பார்க்கும்படிச் சொன்னான். வேலைக்கு சேர்க்க விரும்பும் ஆளையும் கூட்டி வரச் சொன்னான். நிச்சயம் வேலை கிடைக்கும், ஏற்பாடு செய்கிறேன் என்று உறுதியளித்தான்.

அதைச் சொல்லத்தான் ரகுவின் வீடு தேடிச் சென்றேன். ப்ச், அவர்களுக்குக் கொடுப்பினை இல்லை.

பெட்ரோல் பங்க் இளைஞன் பணிவாய் மீதி சில்லரையை நீட்டினான்.

''தம்பி, நீ என்ன படிச்சிருக்கே?''


''பி.ஏ. எகனாமிக்ஸ் சார்!'' என்றவனை ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

''படிப்புக்கு ஏத்த வேலை கிடைக்கலேன்னு வீட்டுல பாரமா இருக்கறதைவிட ஏதோ ஒரு வேலை கிடைச்சா போதுங்கறது என் வீட்டு நிலைமை சார்!'' என்றான் என் பார்வையைப் படித்தவனாய்.

உழைப்புக்கு அஞ்சாத இளைஞன்! வீட்டுச் சுமையைத் தாங்கத் தயாராய் உழைக்கும் இளைஞன்! என்றோ ஸ்கூட்டரில் ஏற்றிச் சென்ற உதவிக்கு இன்னும் மரியாதை கொடுக்கும் இளைஞன்!

''தம்பி, நாளைக்குக் காலையிலே என்னோட நீ வர முடியுமா, ஒருத்தரைப் பார்க்க?'' என்றேன்.

பாலம் பதிகு!



இன்னும் இரண்டு வருடங்கள் கழித்து சென்னையிலிருந்து பெங்களூருக்குக் காரில் வருகிறவர்களுக்குக் கிருஷ்ணராஜபுரம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் ஓர் இனிய ஆச்சரியம் காத்திருக்கிறது. அது தான் கேபிள் பிரிட்ஜ். தென்னிந்தியாவின் முதல் கேபிள் பிரிட்ஜ் இது. ஏறக்குறைய தொங்கு பாலம் மாதிரிதான். ஏற்கெனவே இந்தியாவில் மூன்று இடங்களில் இதுபோன்ற பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. முதலாவது, கல்கத்தாவில் ஹுக்ளி நதியின் குறுக்கே. இரண்டாவது ஹரித்துவாரில். மூன்றாவது சிக்கிமில் அக்கர் என்ற இடத்தில். இவையெல்லாம் நதிக்குக் குறுக்கே கட்டப்பட்ட பாலங்கள். நகருக்குள் அதுவும் தேசிய நெடுஞ்சாலையில் கட்டப்படும் முதல் பாலம் இதுதான். இதற்கு ''ஸ்விஸ்'' நாட்டின் அதிநவீன தொழில் நுட்பம் கிடைத்திருக்கிறது.

''போக்குவரத்தைச் சமாளிக்க மட்டுமல்லாமல் டூரிஸ்டுகள் வந்து பார்த்து அதிசயிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் இதனைக் கட்டவிருக்கிறோம்'' என்கிறார் கர்நாடக தோட்டக் கலை அமைச்சர் கிருஷ்ணப்பா. அவருடைய தொகுதியில் அவரது வீட்டிற்கு அருகாமையிலேயே இந்தப் பாலம் வரப் போகிறது என்பதில் மனிதருக்கு ஏகப்பட்ட சந்தோஷம். இந்தப் பாலத்தை இங்கே கொண்டு வருவதில் இவரின் பங்கு பிரதானமானது.

''கடந்த எட்டு ஒன்பது மாதங்களாக மத்திய அரசின் சம்மதம் வாங்க டெல்லிக்கு ஒரு இருபது தடவையாவது சென்று வந்திருப்பேன். மத்திய ரயில்வே அமைச்சர் ஜாபர் ஷெரீஃபின் தொகுதியும் இதுதான் என்பதால், ஷெரீஃப் இந்த நூதன பாலம் அமைப்பதில் பிடிவாதமாக இருந்தார். பெங்களூரை அழகுபடுத்தும் விஷயம் என்பதால் முதல்வர் மொய்லியும் வேண்டிய அத்தனை உதவிகளையும் செய்து தந்தார்'' என்கிறார் அமைச்சர்.

தற்சமயம் இருபத்து நான்கு கோடி ரூபாய் செலவில் இரண்டு வருடங்களுக்குள் கட்டி முடிப்பது என்று திட்டமாம். பாலத்தின் மொத்த நீளம் 500 மீட்டர். அகலம் 200 மீட்டர். நான்கு வழிப்பாதைகள் இருக்கப் போகின்றன. மத்திய அரசாங்கத்தின் சர்ஃபேஸ் டிரான்ஸ்போர்ட், ரயில்வே மற்றும் கர்நாடக அரசின் பொதுப் பணித்துறை மூவரும் செலவைப் பங்கிட்டுக் கொள்ளப் போகிறார்கள்.

இத்தனை அரசுத் துறைகள் சம்பந்தப்பட்டிருப்பதால், சொன்ன காலக்கெடுவில் பாலம் கட்டி முடிக்கப்பட வேண்டுமே என்றுதான் கவலையாக இருக்கிறது!

– அமுதவன்

மோனத் திரு உருவம்...

புராணப் பிரகாரம், இன்றைய கேரள மாநிலத்தின் அன்றைய சிற்றரசுகளுள் ஒன்றான பந்தள ராஜ்ஜியத்தின் மன்னன் கண்டெடுத்த ஞானக்குழந்தை - சபரிமலை ஐயப்பன்.


ஐயப்பனின் அவதார நோக்கம் - மகிஷியை அழிப்பது. அது நிறைவேறியதும், அரச குமார உருவம் களைந்து, தர்ம சாஸ்தாவாகக் காட்சி தருகிறார்.

எங்கே, தான் இத்தனை நாள் அன்போடு வளர்த்த குழந்தை மறைந்து விடுமோ என்கிற அச்சத்தில், பந்தள ராஜன், அதைத் தன்னோடு இருத்திக் கொள்ள நினைத்து, தன் அங்க வஸ்திரத்தை எடுத்து ஐயப்பனின் காலில் இறுக்கக் கட்டி விடுகிறார்.

மேலும், 'இந்த இடத்தை விட்டு நீ போய் விடக் கூடாது' என்று அன்புக் கட்டளையும் இடுகிறார்.

வேறு வழி?

ஐயப்பன் அந்த இடத்திலேயே, அதே கட்டுண்ட நிலையிலேயே கோவில் கொள்கிறார். இது யோக நிலை. இந்த அமைப்புக்கு யோகபட்டம் என்றே பெயர். யோக சாஸ்தா என்றும் அழைக்கப்படுவதற்குக் காரணம் இதுவே. பீடமும் தாமரை மலர் வடிவில் அமையும். மேலும், ஞானத்தின் அடையாளமான சின் முத்திரையோடு கூடிய வலக்கரம். பெருவிரலின் அடிப்பாகத்தைத் தொட்டு நிற்கும் சுட்டுவிரல். மற்ற மூன்று விரல்கள் விலகி நிமிர்ந்து நிற்கும். ஞான முத்திரை இது. சுட்டு விரலை ஜீவாத்மா என்றும் பெரு விரலைப் பரமாத்மா என்றும் சொல்வார்கள்.



இடக்கரம் கீழ்நோக்கித் தன் பாதங்களைச் சரணடைய வருவோர்க்கு வழிகாட்டுவதாக அமையும்.

தர்மசாஸ்தா, மணிகண்டன், சுவாமி ஐயப்பன் என்று மூன்று திருநாமங்களில் அருள்பாலிப்பவர் இவர். மற்ற தெய்வங்களைப் பிரார்த்தனை செய்யும்போது அதுவேண்டும், இது வேண்டும் என்றெல்லாம் கேட்கலாம். ஆனால் யோக நிலையில் உள்ள சுவாமியிடம் எதைக் கேட்பது? எல்லாவற்றையும் துறந்தால் அல்லவா ஐயனின் அருள் கிட்டும்? எல்லா உலக இன்பங்களையும் துச்சமெனத் துறந்து முக்தி நிலை பெறுவதில்தான் ஐயப்பன் வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது. நாற்பத்தோரு நாட்கள் கடும் நோன்பு. உறங்குவது வெறும் தரையில். இல்லறம் மறந்த வாழ்க்கை, பாத அணிகளைக் கூட ஒதுக்கியாக வேண்டும். ஸ்நான சுகம் கூடக் கிடையாது. நடுக்கும் குளிராயினும், குளிர் நீரிலேயே நீராட வேண்டும். மதுபானம் போன்ற லாகிரிகளை விலக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் துறவு நிலை போன்றதுதானே! முருகப் பெருமானை 'ஞான பண்டிதன்' என்று சொல்கிறோம். அவ்வாறே, உலக இன்பங்கள் அனைத்தையும் துறந்த யோக நிலைக்கு வழிகாட்டும் சுவாமி ஐயப்பனை 'மோனத் திருஉரு' என்று கொள்ளலாம்.

- ஆர். ஜெயந்திநாதனுடன்
உரையாடித் தொகுத்தவர் :
கலைசைக்கிழார்



ஏர்போர்ட்

சமீபகால சினிமாக்களில் நிறைய தீவிரவாதிகள் எல்லைப்புறங்களிலிருந்து ஊடுருவுகிறார்கள். யாரையாவது கடத்திப் போய்ப் பணம் கேட்கிறார்கள். அல்லது யாரையாவது சகட்டுமேனிக்குச் சுட்டு வீழ்த்துகிறார்கள். இறுதியில் மறக்காமல் ஹீரோ கையால் அடிபட்டுச் சாகிறார்கள். ''ஏர்போர்ட்''டிலும் பிரதானம் இதுவே. இந்த ஃபார்முலாவை மறுபடி மறுபடி பயன்படுத்தி, கதற வைக்கிறவர்களை யாரும் கடத்திப் போக மாட்டார்களா என்று ஏங்குகிறவர்கள் எம் கட்சி.

ஆரம்பக் காட்சி ஏர்போர்ட்டில் இடம் பெறுவது தவிர டைட்டிலுக்கு வேறு முகாந்திரம் இல்லை. ஹெலிகாப்டர் ஓட்டும் சத்யராஜுக்கு விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சரால் நேரும் சங்கடங்களும், அதன் விளைவாகப் படம் பார்க்கும் நாம் அனுபவிக்கும் கொடுமைகளுமே திரைக்கதை. அதில் வீராணம் குழாய் சைஸுக்கு ஓட்டைகள்!

சத்யராஜ் ஓட்டிப் போன ஹெலிகாப்டரில் ஒரு தீவிரவாதியின் பாஸ்போர்ட் இருப்பதாகக் கண்டுபிடிப்பது ஓர் உன்னதமான திருப்பம். இருப்பினும், அவர்களது ஆதரவாளராகப் போலீஸ் அதிகாரி (நாசர்) காட்டப்படுவது - கடவுளே! இதுவும் இன்னும் எத்தனை படங்களில்?

பிரதமரைக் கொல்ல தீவிரவாதிகள் சதி. எப்படி? அவர் போகும் ஹெலிகாப்டரில் தீவிரவாதி ஏறி விடுவான். எப்படி? செக்யூரிட்டி அவனை பைலட் என்று நினைத்து விட்டு விடுவார்கள். எப்படி? அவனது போலி ஐ.டி.யைப் பார்த்து. இத்தனை அபத்தங்கள் சேர்ந்தாற்போல் நடைபெற வேண்டுமானால் பி.எம். செக்யூரிட்டி, மத்திய போலீஸ் எல்லாருக்கும் கோடம்பாக்கத்தில் மட்டுமே டிரெய்னிங் அளிக்கப்பட்டிருக்க முடியும்.

ஹீரோயின் கௌதமியை ஜர்னலிஸ்டாக அறிமுகப்படுத்துகிறார்கள். ஏதாவது துப்புக் கிப்பு துலக்குவாராக்கும் என்று பார்த்தால் ம்ஹூம். காதல் காட்சிகளில் கூட கௌதமபுத்தர் மாதிரி ஒரு முகபாவம்.


மாறாக சத்யராஜின் தங்கையாக வரும் அந்த ஊமைப் பெண் - அந்தக் கண்கள் என்னமாய்ப் பேசுகின்றன!

பாடல்கள் ஏதும் இல்லை என்பது மகத்தான ஆசுவாசம். ஓட ஓட விரட்ட, ரீ-ரிகார்டிங் ஒன்றே போதும் என்று கருதியிருப்பார்கள் போலும்.

மலையாள ஜோஷிக்கு, முதற்கண் நமது ஆழ்ந்த அனுதாபங்கள். இரண்டாவது கண் அனுதாபம் ரசிகப் பெருமக்களுக்கு.

- ஆர்.பி.ஆர்.






பொது இடங்களில் உண்ணா விரதம் தடை செய்யப்படும்.


மெ
திருக்
கட்ட

அழகிய சென்னை 2000!

நடைபாதை குடிசைகள் அகற்றப்பட்டு, அவர்கள் வேறு இடங்களில் குடியிருக்க வசதி செய்யப்படும்.







ணாவை சுத்தமாக வைத்
தம் பொருட்டு நுழைவுக்
ணம் வசூலிக்கப்படும்.

கூவத்தை பிக்னிக் ஸ்பாட் ஆக்குவோம்.


போஸ்டர் ஒட்டுவது அடியோடு ஒழிக்கப்படும்.






கிண்டல் கிடக்கட்டும்;
உருப்படியான
யோசனைகளுக்கு பார்க்க
பக்கம் 49

வாகனங்களின் புகையால் ஏற்படும் அசுத்தத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.





வைகையாத்தா

வைகையாத்தாளுக்கு இப்படி ஒரு கோபம் வரும் என்று நாங்கள் யாருமே எதிர் பார்க்கவில்லை. அவளிடம்தான் என்ன ஒரு சீற்றம்?

செத்த பாம்பாய்க் கிடந்த அந்த ஆறு, எங்களால் சாக்கடையாகிப் பற்பல வருஷமாகி விட்டது. வேலிக்காத்தானும் கோரைப் புற்களும் போட்டி போட்டு முளை விட்டெழ, நாயும் பன்றியும் சளம்பித்திரியும் நாற்றக் காடாய் ஆகி விட்ட அதை அவ்வப்போது மழை வந்து சுத்தம் செய்துவிட்டுப் போகும்.

அப்பொழுது மட்டும் மஞ்சளாய் நீர் ஓடப் பார்ப்போம். அப்புறம் வழக்கம் போல் கறுப்பு ஆறாய்க் கால் பரப்பி ஓடும். அதைப் பார்த்து எப்போதாவது என் பாட்டி புலம்பியழக் கேட்டிருக்கிறேன்.

வைகைக் கரையை ஒட்டி, தாழ்வான நிலப்பரப்பில்தான் எங்கள் வீடு. சரிந்த கூரையுடன் கூடிய ஓட்டு வீடு. வாசலில், நின்று பார்த்தால் எதிரே தத்தனேரியில் பிணங்கள் எரிவதிலிருந்து ஆற்றில் வண்ணான் துணி பிழிவது வரை பார்க்கலாம்.

அழுக்குத் தண்ணீரில் அழுக்கை வெளுப்பது எந்த வகை சாமர்த்தியம் என்பது எனக்கு இன்று வரை புரியாத புதிர்.

என் சிநேகிதன் வெங்கடசுப்பிரமணியின் வீடு மதுரை ஜெய்ஹிந்த்புரத்தில்தான் இருக்கிறது. சேலம்னா மாம்பழம். மணப்பாறைன்னா முறுக்கு. அதுபோல ஜெ.ஹி. புரம், சாக்கடைக்குப் பிரசித்தமான குடியிருப்புப் பகுதி. அங்கே ஒரு சாக்கடையும் ஒழுங்காகவே ஓடாது. என் மகள் அதைப் பார்த்து விட்டு இது என்ன என்று கேட்க, சாக்கடை என்று அறிமுகப்படுத்தின நான், வைகையைக் காட்டி இது என்ன என்று கேட்டபோது, பெரிய சாக்கடை என்றிருக்கிறேன்.

அப்புறம் அவளாகவே வயது முதிர, வைகை பற்றி அறிந்து, ''அப்பா ஏனப்பா வைகையாத்தாவை சாக்கடைன்னே...?'' என்று ஒருநாள் திருப்பிக் கேட்டாள்.

''ஆறுன்னா அழகு தாயி. எங்க இருக்கு, அழகு நம்ம வைகைல? ஊர்ப் பயலுகளோட கக்கூசைப் போயி வேற என்னான்னு நான் சொல்றதாம்?'' - என்று திருப்பிக் கேட்டேன்.

அவள் பதில் பேசவில்லை. பேச முடியவில்லை. ஆனால் அடிக்கடி ஆற்றைப் பார்த்து ஏங்கி நிற்கக் கண்டிருக்கிறேன்.

இப்படியான ஒரு பெரிய சாக்கடை, திரும்ப ஆறாக உருமாறி, அசுர வேகம் காட்டி ஓடி வரும் என்று நான் நினைத்தேனில்லை.

பலமாக மழை பெய்தால், கல் பாலத்தின் மதகு வழியாகக் கொஞ்சம் சீற்றப் பாய்ச்சலோடு அது எப்போதாவது ஓடும். அதையே உலக அதிசயமாக எண்ணி, மதுரை ஜனம் வேடிக்கை பார்க்கும். தினசரிப் பேப்பர் எல்லாம் கூட போட்டோ எடுத்துப் போகும்.

எல்லாம் அற்பத்துக்கு வாழ்வு வந்த சமாசாரம் என்று நான் சிரித்த விஷயம்.

ஆனால் இன்று அப்படியில்லை...

வைகையாத்தாளின் சீற்றத்தில் அநியாயக் கடுரம்.

ஆற்றை அசிங்கப்படுத்தின பாவிகளை உண்டு, இல்லை என்று பார்க்க அவள் துணிந்து விட்டது போல் ஓர் உணர்வு என்னுள்...

அர்த்தராத்திரியில் அலைக்கரம் கொண்டு கதவைத் தட்டி, அவள் எங்களை எழுப்பிய போது எனக்கு உயிரே போய் விட்டது. கூரை மேல் ஏறி எல்லோரும் தப்பிக்கப் பட்ட பாடு! சட்டென்று, சுத்தமாக மின்சாரம் வேறு அவுட்! 'நம்ம விலாசினியைக் காணோங்க' என்கிற குரல் என்னைச் சொரேலென்று தாக்கியது.

''என்னது? என் விலாசினியைக் காணோமா? கண்ணு விலாசம்...'' கதறி விட்டேன்.

''தூங்கிட்டிருக்கறவளை நீ கூரை மேல ஏத்தலையா?''

''நீங்க ஏத்திட்டதால்ல நினைச்சேன். இருட்டில யார் யாரைப் பார்க்க முடியுது? ஆத்தா விலாசம்...'' என் மனைவி கூரை மேல் நின்று கேவ, மின்னல் ஒன்று, வினாடி அவகாசத்துக்கு ஊருக்கே குழல்விளக்கு போட்ட தினுசில், மரக்கிளைகள் போல் ஒரு பார்டர் போட்டு வெட்டியதில் அக்கம் பக்கத்துக் கூரை மேலெல்லாம் எங்களைப் போல் ஜீவன்கள்.

அற்பப் பூச்சியாய் உயிரைக் கையில் பிடித்தபடி

இந்திரா சௌந்தர்ராஜன்

உட்கார்ந்திருக்கிறோம்...

பக்கத்து வீட்டு வடிவேலுவும் என்னைப் போலத்தான் கத்திக் கொண்டிருந்தான்.

''அர்த்தநாரி! என் மகளைக் காணலப்பா. அய்யோ நான் என்ன பண்ணுவேன்...?'' என்கிறான்.

சப்தம் தேய்ந்து காதில் மோத, என் மனைவி ஆவேசிக்கிறாள். ''இறங்கிப் போய்ப் பாருங்க. எனக்குப் பயமா இருக்குங்க. நம்ப உசுர் நமக்கு பெரிசில்லீங்க'' - பேச்சோடு பேச்சாக அவள் கூரையை விட்டு இறங்க முனைய, அந்தச் சமயமாய் விலாசினியின் குரல்!

''அப்பா நான் வீட்டு முருங்கை மரத்து மேல இருக்கேன். என் கூடவே பக்கத்து வீட்டு அம்சவேணியும் இருக்குது. வெள்ளம் தள்ளிக்கிட்டு வந்ததுல மரத்தைப் பிடிக்க ஏறிட்டோம்...''

- அந்தக் குரல் எனக்குள் ஜீவகருதியையே பிடித்து ஒரு மீட்டு மீட்டினாற் போல் ஒரு பிரமை.

''ஆத்தா! பதறாம அங்கேயே இரு. நா வந்து மீட்டுக்கறேன்'' - என்கிறேன்.

குளிர் வெடவெடக்கிறது. மழைச்சாரல் வேறு... வாழ்வின் நிலையாமை மிக நுட்பமாக எனக்குப் புரிகிறது. எங்கும் கூக்குரல். இதில் கதிரேசன் குரல் என்னை ஊடுருவும் போது எனக்குள் புதிய பரிமாணம்.

இந்தக் கதிரேசன் சரியான அராத்து பேர் வழி. ஆடு திருடியைத் தெரியும், கோழி திருடியைத் தெரியும். ஆனால் ஆற்றையே திருடியவன் இவன். லாரி லாரியாக மணலைக் கொள்ளையடித்தவன். அஞ்சு பத்தால்





100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் 5 வினாடிகளுக்குள் வெற்றிபெற முடியுமா?

செ ய ல் தி ற னே . . .

அதற்கு நிகரான சாதனையை சக்தி ஃபைனான்ஸ் நிகழ்த்தியிருக்கிறது. ஆம். சக்தி ஃபைனான்ஸ் மிகத்திறமையாகச் செயல்பட்டுத் தனது சாதனைப் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் பெருக்கிக் கொண்டே போகிறது.

இந்த ஆண்டும் முந்தைய ஆண்டின் வளர்ச்சியை விட கடந்த ஆறு மாதங்களில் கூடுதலான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது சக்தி ஃபைனான்ஸ். நிகர டெபாசிட் தொகை பிரமிக்கத்தக்க விதத்தில் 270.4% அதிகரித்துள்ளது. அளிக்கப்படும் கடனுதவியோ 145.1% அதிகமாகியுள்ளது. சொல்லப்போனால், கடந்த ஓராண்டு முழுவதும் வழங்கப்பட்ட கடன் தொகையைவிட மிக அதிகமாக இந்த 1993ம் ஆண்டு செப்டம்பர் உடன் முடிவடைந்த ஆறு மாதங்களில் அளிக்கப்பட்டுள்ளது என்பது தான் உண்மை.

இதில் வியப்படைய எதுவும் இல்லை. காரணம் — ஒரு குறிக்கோளுடன் செயல்பட வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்து கொண்டிருப்பவர்கள் நாங்கள். அதன் மூலம் மகத்தான சாதனைகளைப் படைக்க முடியும் என்பதையும் தெரிந்து கொண்டிருப்பவர்கள்.

சக்தி
ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 475, டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோயம்புத்தூர் — 641 018.
தொலைபேசி எண் : 31471/31472/31473/31474.

தவணைமுறை நிதியுதவி — லீசிங் — டெபாசிட்டுகள் — பாதுகாப்புப் பெட்டகங்கள்.

எ ங் க ள் வ லி மை

கார்ப்பரேஷன் கன்னையே கட்டியவன்.

'என்னைத் திருடியவனே உன்னை விடுவோனா' என்கிறாள் வைகையாத்தா. 'எந்த கார்ப்பரேஷன்காரன் வந்து காப்பாத்தறான் பார்க்கறேன்...'

ஏனோ எனக்குள் பயமில்லை இப்போது. பதற்றமில்லை இப்போது... ஒரு அர்த்தபூர்வ செயல் நடப்பதாக ஓர் உணர்வு எனக்குள்.

'இப்போதாவது உனக்கு ரோஷம் வந்ததே...' - வைகையை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

''பக்கத்து வீட்டு ஒச்சாயி போயிட்டாளாம். ஏங்க, நாம என்ன பாவங்க பண்ணோம்...?''

''என்ன புண்ணியம் பண்ணோமோ - இன்னும் போகாம இருக்கோமோ...!''

''உங்க பேச்சே சரியில்லை. இது இப்படி எல்லாம் பேசற நேரமில்லீங்க...''

''வேற எப்படிப் பேச?''

''நாசமாப் போன ஆத்துக்கு ஏழை பாழை நாமதானா கிடைச்சோம்? ஆத்தோரமா வீடுன்னப்பவே எனக்கு பக்குன்னு இருந்திச்சு. இப்ப நினைச்சா மாதிரியே...''

''ஏய், சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி பேசாதே. ஒரு நாளாவது இந்த ஆத்தை ஆறா நினைச்சிருப்பியா? மோளவும் கால் கழுவவும் தானடி இதை உபயோகிச்சீங்க. உங்க சாக்கடைக்கு இந்த ஆறுதானே வடிகால்?

சாக்கடை என்னா செஞ்சிப்பிடும்னு வீடு வாசல் கட்டி குடி வந்துட்டு, இப்போ புலம்பலா?''

''பாவி மனுஷா... நீயும்தானே மாட்டிக்கிட்டிருக்கே. இப்படியா எனக்கென்னன்னு பேசவே...''

''ஆமா நானும் மாட்டியிருக்கிறவன் தான். நானே போனாலும் சரி; ஆறு ஆறா ஓடினா போதும். தண்ணிக்குக் குழாயடியில போடுற சண்டைக்குக் கழிமோட்சம் வரணும். கொசுவும் பன்னியும் ஒழியணும். அதுக்கு ஆறு, ஆறா ஓடணும். ஆத்தைத் திருடறவன், அழகைக் கெடுக்கறவன் அம்புட்டு பயலும் அழியணும்.

நான் இப்போ ஆத்தா கோபத்தை ரசிக்கிறேன். இது தர்மதேவதையோட கோபம். இயற்கைன்னா கொக்காடி உங்களுக்கு...?

''சீறி வந்தா புலம்ப வேண்டியது. சிறுத்துக் கிடந்தா ஏறி மிதிக்க வேண்டியது. இப்படித்தானே இது நா வரை பொழைச்சிருக்கோம்.

''அதுக்குத் தண்டனை வேண்டாமா...? மறுபடி நாளைக்கு வந்தத்தான் போவுது. நாமும் பழைய சாக்கடையாக்கத்தான் போறோம். இந்த நிமிஷம் அனுபவிக்கணும். இந்த தண்டனை கொஞ்சமாவது மறக்காம இருக்கணும்டி!'' - என் பேச்சை சகிக்காமல் என் மனைவி பதிலுக்குப் புலம்புகிறாள்.

''வெள்ளத்தை விடக் கொடுமைய்யா உன் பேச்சு!'' - என்கிறாள்.

நடுவில் விலாசத்தின் கூக்குரல்.

''அப்பா சீக்கிரம் வாங்க. மரக்கிளையைத் தட்டிடிச்சு வெள்ளம்.''

''ஐயோ போங்களேன்...''

''இருடி போறேன்'' - என்று சொல்லும் போது அம்சவேணி அலறுகிறாள். என் மகளைப் போல் நம்பிக்கைக் குரலாக இல்லாமல், உயிர் போய் விட்டவளைப் போலவே புலம்புகிறாள். எனக்குள் மிளகாய் வறுபடுவது போல் ஒரு காரல். பக்கத்து வீட்டுக்காரன் என் வரையில் அத்தனை நல்லவனில்லை. ஆனால் இப்போது அதெல்லாம் அனாவசியம். மனுஷத்தனம் வேண்டாமா? முதல் காரியமாக நான் முருங்கை மரத்தை நெருங்கி, பக்கத்து வீட்டுக்காரன் மகளைத்தான் தாங்கிச் சுமந்து வந்தேன்.

''யப்பா வடிவேலு... உன் மக என் வீட்டுக் கூரை மேல பத்ரமா இருக்கா. கவலைப்படாதே...'' - என்று உரக்கக் கத்துகிறேன்.

என் மனைவி பிளிறி வெடிக்கிறாள். ஆத்திரம் தாளாமல் அவளே கூரைச் சரிவில் இறங்கி, முருங்கை மரம் நோக்கிச் சரிய...

''வேண்டாம் தனம்... வேண்டாம்'' - நான் கத்தியதற்குப் பலனே இல்லை. ''ப்ளக்...'' என்று நீர்க் குமிழ் சப்தம் பெரிதாகக் கேட்க, முருங்கை மரம் ஒடிவது கூட காதில் விழுகிறது.

''ஐயோ தனம்...'' - அலறுகிறேன். பதிலுக்குச் சப்தமே இல்லை. ''ஐயோ இருவரையும் வெள்ளம் இழுத்து விட்டதா?'' இதுவரை இல்லாத பதற்றம், கோபம் என்னுள் வெடிக்க, அழுகை முட்டுகிறது.

விடிந்து விட்டது!

வெள்ளத்தின் வீச்சல் நன்றாகத் தெரிகிறது.

கூரை மேல் நானும் வடிவேலுவின் மகள் அம்சவேணியும்! அரசாங்க எந்திரங்கள் முடுக்கி விடப்பட்டு ரப்பர் படகு, டியூப் வளையம், மூங்கில் மிதவை என்று சகலமும் வந்து எங்களை மீட்கின்றன. தனமும் விலாசினியும் என்ன ஆனார்களோ? நான் செயல்பட்ட மனிதத்துக்கு வைகையாத்தாள் ஏதாவது பரிகரிப்பாள் என்றும் ஒரு நம்பிக்கை.

ஜடஸ்வரூபி என்று அவளை சாக்கடையாக்கினவர் கூட்டம் நோக்கிக் கோபம் கொண்டு வந்தவள் ஆயிற்றே? கோபம் இருக்கும் இடம் குணம் இருக்காதா என்ன?

அது இருப்பது நிரூபிக்கப்பட்ட மாதிரி நான் வந்து ஒடுங்கிய பள்ளிக்கூடத்தில் என் தனத்தையும் விலாசினியையும் உயிருடன் பார்த்த போது எனக்கு ஏற்பட்ட என்னை நெகிழ்ச்சியை எப்படி விவரிப்பேன்? ஆனால் தனம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''போக்கத்த மனுஷா... கதை பேசிக் காரியத்தைக் கெடுக்கப் பாத்தியே. ஆத்தோடு போகாம திரும்பிட்டோமேன்னு பாக்குரியா...?''

''இல்லை தனம். அப்படி நடக்காதுன்னு எனக்குத் தெரியும்!''

''என்னா தெரியும்... ஊரே மூழ்கிக்கிட்டு இருக்கச்சே உபன்யாசம் பண்ணுவியே.. மனுஷனா நீ? எப்படியோ யாராலையோ கரை சேர்ந்தோம். போ... போய் உன் ஆத்தா கோபத்தை உக்காந்து ரசி...''

- எனக்குள் தனத்தின் பேச்சால் சிரிப்பு.

''சிரிப்பு வேற வருதாக்கும்!''

மேலும் சிரிக்கிறேன்.

''உசுரு போயிருந்ததுன்னா தெரிஞ்சிருக்கும்!''

''அது எப்படி போயிடும்? ஆத்தாவை எனக்குத் தெரியாதா?''

என்னைப் பைத்தியம் போல் பார்ப்பது புரிந்தது. எனக்கென்ன கவலை?

வைகையின் சீற்றமும் சப்தமும் பிரும்மாண்டமாய் பொங்கிப் பிரவகித்தது.

எனக்குள்ளும் அதே பிரவாகம்.

யாருக்குப் புரியப் போகிறது?



ஒருவன் மாடியிலிருந்து கீழே விழுந்து விட்டான். மயங்கிய நிலையில் இருந்த அவனை வீட்டுக்குத் தூக்கிச் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் டாக்டர் வந்து அவனைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, ''இந்த மனிதர் இறந்து விட்டார்'' என்றார்.

அடிபட்டவனோ திடுக்கிட்டு எழுந்து, ''இல்லை டாக்டர்! நான் உயிருடன்தான் இருக்கிறேன்'' என்றான்.

பக்கத்திலிருந்த அவன் மனைவி, ''வாயை மூடுங்கள்! டாக்டருக்குத் தெரியாதது உங்களுக்கு என்ன தெரியும்?'' என்றாள்!

ஆதாரம் : 'பட்டிமன்ற நகைச்சுவை' நூலிலிருந்து.

- என். ஜெயராமச்சந்திரன்



மெக்ஸிகோவில் பெண்கள் துணிகளை முதலில் வெந்நீர் ஊற்றி அலசுவதும், பின்னர் குளிர்நீர் ஊற்றி அலசி காயப் போடுவதுமாக இருந்தனர். இதைக் கண்ட ஒரு வெளிநாட்டுப் பயணி, ''இந்தப் பெண்கள் இவ்வாறு வெந்நீரும் குளிர்நீரும் அருகருகே படைத்ததற்காகக் கடவுளைப் பாராட்டுவார்களே!'' என்றார். அதற்கு, அருகிலிருந்த வழிகாட்டி, ''சரியாப் போச்சு! 'ஆண்டவன் சோப்பையும் இலவசமாகக் கொடுத்திருக்கலாமே' என்று இப்பெண்கள் முணுமுணுக்கின்றனர்!'' என்றாரே பார்க்கலாம்! வெளிநாட்டுப் பயணி வாயடைத்து நின்றார்!

தகவல் : நெல்லை. வி. சிவா

நன்றி : இந்து



சாவித்திரி சரியான வழியில் முயற்சி செய்திருந்தால் ஒரு வேளை ஸ்ரீதரனுடைய அன்பைக் கூடப் பெற்றிருக்கலாம். ஆனால், அந்தச் சரியான வழி அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. மாமியாரைத் திருப்தி செய்வதுதான் கணவனைத் திருப்தி செய்யும் வழி என்று அவள் நினைத்தாள். அவன் பகலில் எப்போது வீட்டுக்கு வந்தாலும் அவள் அடுப்பங்கரையில் ஏதாவது காரியம் செய்து கொண்டிருப்பாள். இரவில் அவன் வரும் போது அவள் ஒன்று, பகலெல்லாம் உழைத்த அலுப்பினால் படுத்துத் தூங்கிப் போய் விடுவாள்; அல்லது மாமியார் சொன்னது எதையாவது நினைத்து அழுது கொண்டிருப்பாள். ''சனியன்! சனியன்! எப்பப் பார்த்தாலும் ஒரே அழுகைதானா? மூதேவி! பீடை!'' என்று ஸ்ரீதரன் எரிந்து விழுவான். இதனால் அவளுடைய அழுகை அதிகமாகும். ஸ்ரீதரனுடைய வெறுப்பும் வளரும்.

சாவித்திரி ரொம்பவும் அழுது விசிக்கும் சமயங்களில், ஸ்ரீதரன் அது சகிக்காமல், ''ஏண்டி அம்மா! இந்தப் பீடையை உன்னை யார் அழைச்சுண்டு வரச் சொன்னா? நான்தான் வேண்டாம் வேண்டாம்னு முட்டிண்டேனே! ஊருக்கு அனுப்பிச்சுத் தொலைச்சுட்டு மறு காரியம் பாரு!'' என்பான். அவன் தாயார், ''ஆமாண்டாப்பா! என்பேரில் தப்புத்தான்! என் புத்தியை விளக்கு மாத்தாலே அடிச்சுக்கணும். ஆனா, இப்ப என்ன முழுகிப் போச்சு? இவளுக்கு என்ன, கடுதாசி எழுதத் தெரியாதா? உனக்கு அந்தக் காலத்திலே எட்டு நாளைக்கு ஒரு கடுதாசி எழுதிண்டிருந்தாளே? அப்பாவுக்கு கடுதாசி எழுதி அழைச்சுண்டு போகச் சொல்லட்டுமே?'' என்று பதில் சொல்வாள்.

இத்தகைய நிலைமையில்தான், சாவித்திரி கர்ப்பமானாள். இதனால் அவளுடைய மனத்தில் ஒரு புதிய உற்சாகத்துடன் குதூகலமும் உண்டாயிற்று. இனிமேல், தனக்கு இந்த வீட்டில் அதிக கௌரவம் ஏற்படும், புருஷனும் மாமியாரும் முன்னைவிடப் பிரியமாயிருப்பார்கள் என்ற ஆசையும் எழுந்தது. கூடிய சீக்கிரத்தில் இந்த ஆசை நிராசையாயிற்று.

ஸ்ரீதரனுக்குச் சில புதிய கஷ்டங்கள் அப்போது ஏற்பட்டிருந்தன. சில காலமாகவே ஸ்ரீதரனை அலட்சியம் செய்யத் தொடங்கியிருந்த லஸிலி அப்போது பகிரங்கமாய் அவனை நிராகரிக்கத் தொடங்கினாள். அது மட்டுமல்ல; ஐயாயிரம் ரூபாய் பணம் கொடுக்காவிட்டால் அவன்மேல் கேஸ் போடுவதாகப் பயமுறுத்திக் கொண்டிருந்தாள். பாங்கில் அவனுடைய வேலை திருப்திகரமாயில்லையென்று மேலதிகாரிகள் கருதி, அவனுடைய சம்பளத்தைக் குறைத்து விட்டார்கள். இந்தக் கோபத்தையெல்லாம் ஸ்ரீதரன் பேதை சாவித்திரியின் மேல் காட்டினான்.

தங்கம்மாளுக்கோ, ஏற்கெனவே இருந்த குறைகள் எல்லாம் போதாதென்று, வளைகாப்பு, சீமந்தம் பண்ணவில்லை, சம்பு சாஸ்திரி கடுதாசி கூடப் போடாமல்



இருக்கிறார் என்ற குறையும் சேர்ந்து கொண்டது. ஆகவே, நாளுக்கு நாள் சாவித்திரியின் கஷ்டங்கள் அதிகமாகிக் கொண்டு வந்தன.

இவ்வளவு கஷ்டங்களுக்கும், வேதனைகளுக்குமிடையில் சாவித்திரி தன்னுடைய மாமனார் ஒருவரைத்தான் நம்பியிருந்தாள். அந்த வீட்டில் தன்னிடம் பச்சாதாபப்படுகிறவர் அவர் ஒருவர்தான் என்றும், ஏதாவது ஆபத்து என்றால் அவர்தான் தன்னைக் காப்பாற்றக்கூடியவர் என்றும் எண்ணியிருந்தாள். அவர் இந்த மாதிரித் தன்னைத் தனியாக ரயிலேற்றி அனுப்பிவிடச் சொன்னார் என்றதும், அவளுக்கு 'இனிமேல் என்ன இருக்கிறது?' என்று தோன்றிவிட்டது. குழந்தைப் பருவத்திலிருந்து அவளுக்குப் பகவானிடம் இருந்த அசையாத நம்பிக்கையும் தளர்ந்துவிட்டது. 'ஸ்வாமியாவது? பூதமாவது? எல்லாம் பொய்போல் இருக்கிறதே!' என்று எண்ணலானாள்.

ஒரு மனம் இப்படி நினைத்தது; ஆனால் அதே சமயத்தில் சாவித்திரியின் இன்னொரு மனம், 'நிஜமாக நாம் நெடுங்கரைக்குக் கிளம்பப் போகிறோமா?' என்று குதூகலத்தினால் துள்ளிக் குதித்தது!

"அப்பா! எனக்கும் நெடுங்கரைக்கு வந்து உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது" என்று சாவித்திரி எழுதியபோது அவளுடைய இருதயத்தில் உண்மையாகவே பொங்கிக் கொண்டிருந்த ஆசையையே வெளியிட்டிருந்தாள்.

கர்ப்ப ஸ்திரீகளுக்கு 'மசக்கை' வரும் என்றும், சில சில பொருள்களின் மேல் பிரத்தியேகமான ஆசை உண்டாகுமென்றும் சொல்கிறார்கள் அல்லவா? சாவித்திரியின் மசக்கை, அவளுக்கு நெடுங்கரைக்குப் போக வேண்டுமென்று அளவிலாத ஆசை கொள்ளச் செய்தது.

நெடுங்கரையில் தன்னுடைய வாழ்க்கையை நினைத்தாலே அவளுக்கு இப்போது சந்தோஷமாயிருந்தது. அந்தக் காலத்தில் அவள் அங்கே பட்ட கஷ்டங்களையும், அநுபவித்த துயரங்களையும் அடியோடு மறந்துவிட்டாள். நெடுங்கரையைப் பற்றிய சந்தோஷமான ஞாபகங்கள் மட்டுமே அவள் மனத்தில் இப்போது இருந்தன.

நெடுங்கரை வீடுதான் எவ்வளவு அழகாயிருக்கும்? வாசலில் தென்னை மரங்களின் நிழல் எவ்வளவு குளிர்ச்சியாயிருக்

தியாக பூமி

கும்? அந்த வீதியில் வில் வண்டி பூட்டி வரும்போது, மாடுகளின் சதங்கை ஜில் ஜில் என்று சப்திப்பது எவ்வளவு இனிமையா யிருக்கும்?

ஆகா! நெடுங்கரை வீட்டை எப்போது பார்ப்போம்? முன்போல் மறுபடியும் எப் போதாவது அப்பாவின் பஜனைக்குப் புஷ்பம் எடுத்துக் கொண்டு வருவோமோ? மாலை தொடுத்துப் படங்களுக்குப் போடு வோமோ?

அப்பா! அப்பா! நீங்கள் பஜனை பண்ணி நான் மறுபடியும் கேட்பேனா? சித்தி! உன் கையால் சாதம் பிசைந்து போட்டு நான் சாப்பிடுவேனா?

ஐயோ! சித்தி! உன்னை என்னவெல் லாம் பாடு படுத்தி வைத்தேன்? உன் வயிற் றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட பாவந் தான் இப்படி என்னைப் படுத்தி வைக் கிறதோ? - சாவித்திரி இவ்வாறெல்லாம் எண்ணமிடுவாள். தங்கம்மாளுடன் ஒப் பிட்டபோது, மங்களம் தன்னிடம் அபார மான பிரியம் வைத்திருந்ததாகச் சாவித்திரிக் குத் தோன்றிற்று.

ஆகவே, அவள் அப்பாவுக்குத் தன்னை வந்து அழைத்துப் போகும்படி கடிதம் எழுதியபோது, அடங்காத ஆர்வத்துடன் தான் எழுதினாள். தன்னுடைய கடிதங்களுக் குப் பதில் வராததனால் அவள் அடைந்த ஏமாற்றத்துக்கு அளவில்லை. ஒரு வேளை கடுதாசி போய்ச் சேர்ந்திராதோ? அப்பா ஒரு வேளை ஊரில் இல்லையோ, அல்லது அவர் சரியாய் விலாசம் எழுதாதபடியால் அவருடைய பதில்தான் இங்கே வந்து சேரவில்லையோ என்று எண்ணாததெல் லாம் எண்ணிக் கொண்டிருந்தாள். ஒவ் வொரு சமயம் சப்பட்டை கட்டிக் கொண்டு நெடுங்கரைக்குப் பறந்து போய்விடலாமா என்று அவளுக்குத் தோன்றும்.

இத்தகைய மனோ நிலையில், அவளை ரயிலேற்றி ஊருக்கு அனுப்பி விடுவதாகச் சொன்னபோது, 'என்ன இரக்கமற்றவர்கள் இவர்கள்!' என்ற வெறுப்பும், தனியாகப் போக வேண்டுமே என்ற துணுக்கமும் அவள் அடைந்தாலும், மனத்தின் ஒரு பக்கத் தில் சந்தோஷமும் இருந்தது. ஊருக்குக் கிளம்பும் நேரம் ஆக ஆக அவள் உற்சாகம் அதிகரித்தது.

சாவித்திரி, மாமனார் விஷயத்திலும் தான் ஏமாற்றமடைந்ததாக எண்ணியது மட்டும் சரியல்ல. உண்மையில், ராஜா ராமய்யர் சாவித்திரியின் மேல் இரக்கங் கொண்டே, "அவள் ஊருக்குப் போவதா யிருந்தால் போகட்டும்" என்று சொன்னார். தங்கம்மாளின்மேல் வந்த கோபத்தைத் தம் கையில் இருந்த பத்திரிகையின் மேல் காட்டிவிட்டு அவர் வெளியே போனது கூடச் சாவித்திரியின் மேல் இருந்த கருணை யினால்தான். கல்கத்தாவிலிருந்து வேறொரு குடும்பத்தார் மறுநாள் சென்னைக்குப் புறப்படுவதாக அவர் கேள்விப்பட்டிருந்தார். அதைப்பற்றி விசா ரித்துத் தகவல் தெரிந்து கொள்வதற்குத் தான் அவர் வெளியேறினார். விசாரித்ததில், மறுநாள் புறப்படப்போவது உண்மைதா னென்று தெரிந்தது. அவர்கள் திருநெல் வேலி ஜில்லாக்காரர்கள், ரொம்பவும் நல்ல மனுஷர்கள். "ஆகா! சாவித்திரியை பேஷாய் அழைத்துக் கொண்டு போகி றோம்" என்று சொன்னார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்டுக் கொண்டு ராஜாராமய்யர் திரும்பி வீட்டுக்கு வந்ததும் நெடுங்கரை சம்பு சாஸ்திரிக்கு ஒரு கடிதம் எழுதினார். தம்முடைய சம்பந்திக்கு அவர் இதுவரையில் தம் கையினால் கடிதம் எழுதி யது கிடையாது. அவர் சாஸ்திரிக்கு எழுதிய முதல் கடிதம் இதுதான்; பாவம், அவர் எழுதிய கடைசிக் கடிதமும் இதுவாகவே ஆயிற்று!

சில முக்கியமான காரணங்களினால் சாவித்திரியைக் கல்கத்தாவில் பிரசவத்துக்கு வைத்துக் கொள்ள முடியவில்லையென் றும், இங்கிருந்து திருநெல்வேலிக்கு வரும் தகுந்த மனுஷ்யாளுடன் கூட்டி அனுப்பி யிருப்பதாகவும், சென்னைப் பட்டணத் துக்கே சாஸ்திரி வந்திருந்து குழந்தையை அழைத்துப் போகவேண்டுமென்றும், சென்னைப்பட்டணத்துக்கு ஒரு வேளை வர முடியாவிட்டால், குறிப்பிட்ட வண்டிக்குப் புதுச்சத்திரம் ஸ்டேஷனுக்கு வந்திருந்து அழைத்துப் போக வேண்டுமென்றும் கடிதத்தில் எழுதினார். பிறகு, தாமே அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு போய்த் தம் கையாலேயே தபால் பெட்டியில் போட் டார். தபால் பெட்டியின் விளிம்பில் எழுதி யிருந்த மணிக்கணக்கைப் பார்த்துவிட்டு, "சரி, இன்று தபாலில் கட்டாயம் போய் விடும்" என்று நிச்சயம் செய்து கொண்டு திரும்பினார்.

ராஜாராமய்யர் நம்பியபடியே, கடிதம் அன்று தபாலிலேயே சேர்ந்து, வழியில் எங்கும் விழுந்து விடாமல் பிரயாணம் செய்து, போட்ட மூன்றாம் நாள் மேலமங் கலம் தபாலாபீஸுக்குப் போய்ச் சேர்ந்தது.

தக்ஷதா! தக்ஷதா!

இது ஒரு படத்தின் பெயரல்ல. போலீஸ்காரர்களுக்காக, போலீஸ் காரர்களாலேயே மகாராஷ்டிராவில் நடத்தப்படும் ஒரு பத்திரிகையின் பெயர். "தக்ஷதா! தக்ஷதா!" என்றால் "உஷார் உஷார்!" என்று பொருள்!

- பாளை பசும்பொன்.



நெடுங்கரைக்குக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்த தபால்காரன், சம்பு சாஸ்திரியின் வீடு பூட்டியிருப்பதைப் பார்த்தான். ஒரு நிமிஷம் யோசனை செய்தான். பிறகு, 'சரிதான், எங்கேயாவது போயிருப்பார்கள்; வந்து எடுத்துக் கொள்வார்கள்', என்று முடிவு செய்து, காமரா அறையின் ஜன்னல் வழியாகக் கடிதத்தை உள்ளே எறிந்து விட்டுப் போய்ச் சேர்ந்தான்.

அவன் எறிந்த இடத்திலேயே ராஜாராமய்யரின் கடிதம் அநாதையாய்க் கிடந்தது!

28. சாவித்திரியின் கனவு

சாவித்திரியை அழைத்துக் கொண்டு போகிறோமென்று சொன்ன திருநெல்வேலி ஜில்லாக்காரர்கள் உண்மையிலேயே ரொம்பவும் நல்ல மனுஷர்கள். புருஷன், மனைவி, குழந்தை, புருஷனுடைய தாயார் - இவர்கள்தான். மனைவிக்கு இருபது வயது இருக்கும். குழந்தை மூன்று வயதுப் பையன். அவர் களில் யாரும் பார்ப்பதற்கு அவ்வளவு லட்சணமாயில்லை. கணபதி அவனுடைய பெயருக்கு ஏற்றது போலவே கட்டைக் குட்டையாயும், கொஞ்சம் இளந்தொந்தி விழுந்தும் காணப்பட்டான். கறுப்பு நிறந் தான். முகம், கன்னமும் கதுப்புமாய்ச் சப்பட்டையாயிருந்தது. ஜயம் அவனை விடச் சிவப்பு; ஆனால் முகத்தில் அம்மை வடு. போதாததற்கு, மேல் வாய்ப்பல் இரண்டு முன்னால் நீண்டு வந்திருந்தது. இதை மறைப்பதற்காக ஜயம் அடிக்கடி உதட்டை இழுத்து மூடிக் கொண்டாள். அவள் நாலைந்து மாதமாக 'ஸ்நானம் செய்யவில்லை'யென்றும் தோன்றிற்று. இந்தக் குடும்பத்தார் ஒருவரோடொருவர் கொண்டிருந்த அந்யோந்யம் சாவித்திரிக்கு அளவிலாத ஆச்சரியத்தை அளித்தது. என்ன அன்பு! என்ன அக்கறை!

ஐந்து நிமிஷத்துக்கொருதடவை, ''ஜயம்! ஏதாவது வேணுமா?'' என்று கணபதி கேட்டுக் கொண்டிருந்தான். ''ஏண்டாப்பா! பிள்ளைத்தாச்சிப் பொண், பட்டினியாயிருக்காளே! ஏதாவது வாங்கிண்டு வந்து கொடேண்டா!'' என்று தாயார் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள். ''நான்தான் வெறுமனே சாப்பிட்டுண்டே இருக்கேனே! அம்மாதான் பச்சை ஜலம் வாயிலே விடாமே இருக்கா. அவருக்கு ஏதாவது பழம், கிழம் வாங்கிக் கொடுங்கோ!'' என்பாள் ஜயம்.

ஜயம் எதற்காவது எழுந்து நின்றால், சொல்லி வைத்தாற்போல் கணபதி, அவனுடைய தாயார் இரண்டு பேரும் எழுந்திருந்து, ''என்ன வேணும், ஜயம்?'' என்று கேட்பார்கள். கொஞ்ச நேரம் அவள் உட்கார்ந்தபடியே வந்தால், ''இந்தாடி அம்மா! ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தாக் காலைக் கொரக்களி வாங்கும். சித்தே காலை நீட்டிண்டு படுத்துக்கோ!'' என்பாள் மாமியார். அஸ்தமித்தால் போதும்; ஜன்னல் கதவுகளையெல்லாம் சாத்திவிடச் சொல்வாள். வண்டியிலுள்ள மற்றவர்கள் ஆட்சேபித்தால், ''கொஞ்சம் கோவிச்சுக்காதிங்கோ. பிள்ளைத்தாச்சிப் பொண்ணு. பனி உடம்புக்காகாது'' என்பாள்.

அவர்கள் ஒருவரோடொருவர் அந்யோந்யமாயிருந்ததல்லாமல், சாவித்திரியையும் மிகப் பரிவுடன் கவனித்துக் கொண்டார்கள். ஜயம், தான் எழுந்து உட்கார்ந்து கொண்டு சாவித்திரி படுத்துக் கொள்ள இடமளிப்பாள். சில சமயம் அந்த அம்மாள், சாவித்திரியின் கஷ்டங்களைப் பற்றியும் பேச ஆரம்பித்து விடுவாள். ''ராஜாத்தி மாதிரி இருக்கா. இவளை ஆத்திலே வச்சுட்டு அந்த மூடம் எங்கெல்லாமோ சுத்தி அலையறானே?'' என்றும், ''நல்ல மாமியார் வாச்சாடி அம்மா, உனக்கு! இப்படி எட்டு மாதத்துக் கர்ப்பிணியைத் தனியா அனுப்பறதுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?'' என்றும் சொல்வாள். கணபதி, ''பேசாமலிரு, அம்மா!'' என்று அடக்குவான். ''நீ சும்மா இருடா! என்னமோ, அந்த துஷ்டைகளுக்குப் பரிஞ்சு பேசறதுக்கு வந்துட்டே? உனக்கென்ன தெரியும், ஊர் சமாசாரம்? இந்தச் சாதுப் பெண்ணை அந்த ராட்சஸி படுத்தி வச்சது ஊரெல்லாம் சிரிப்பாய்ச் சிரிக்கது! பாவம்! இவளுக்குப் பொறந்தகமும் வகையில்லைபோல் இருக்கு. அவாதான் வந்து தலைச்சம் பிள்ளைத்தாச்சியைப் பாத்துட்டு அழைச்சுண்டு போகவேண்டாமோ?'' என்பாள்.

மாமியார் இப்படி ஏதாவது பேசும்போதெல்லாம், மாட்டுப் பெண்ணின் முகத்தில் பெருமை கூத்தாடும். அவளுக்குப் புக்ககத்தைப் போலவே பிறந்த வீடும் நன்றாய் வாய்த்திருந்தது என்று சம்பாஷணையில் சாவித்திரி தெரிந்து கொண்டாள். ஜயத்தின் தகப்பனாருக்கு இரண்டு மாதமாய் உடம்பு சரியாயில்லையென்று தகவல் வந்ததாம். ''ஒரு வேளை நான் பிழைக்கிறேனோ, இல்லையோ, என் பெண்ணையும் மாப்பிள்ளை



''லாட்டரியிலதான் நிறையப் பணம் வந்திருச்சே... அப்புறமும் ஏன் பழைய கடன்களை ஒழிக்காமே இருக்கே....?''

''அதெப்படி? பணம் வந்ததும் ஆளே மாறிப் போயிடலாமா....? அதான்!''

– எஸ். உஷாராணி.

யையும் ஒரு தடவை பார்த்து விட்டால் தேவலை'' என்று அவர் சொன்னாராம். அதன் பேரில்தான் இப்போது இவர்கள் திருநெல்வேலிக்குப் போய்க் கொண்டிருந் தார்கள்.

இந்தக் குடும்பத்தையும், இவர்கள் ஒருவரிடம் ஒருவர் காட்டும் அன்பையும் பார்க்கப் பார்க்கச் சாவித்திரிக்கு ஆச்சரியம் அதிகமாகிக் கொண்டிருந்தது. 'உலகத்தில் இப்படியும் மனுஷ்யாள் இருக்கிறார்களா? இந்த மாதிரி இடமாகப் பார்த்து நம்மையும் அப்பா கொடுத்திருக்கக் கூடாதா? இவ்வளவு மோசமான இடத்தில் கொண்டு போய்த் தள்ளினாரே?' என்று ஒரு நிமிஷம் நினைப்பாள். 'அப்பா பேரில் என்ன தப்பு? அவர் எவ்வளவோ பணத்தைக் காசைச் செலவழித்து, நாம் ஒசத்தியாயிருக்க வேண்டுமென்று ஒசந்த இடமாய்ப் பார்த் துத்தான் கொடுத்தார். நம் தலையெழுத்து இப்படியிருந்தால், அதற்கு அப்பா என்ன பண்ணுவார்?' என்று எண்ணுவாள். அப் புறம், கணபதியின் சப்பட்டை மூஞ்சியை யும் அசட்டுச் சிரிப்பையும் அவன் பெண் டாட்டிக்குச் செய்யும் உபசாரங்களையும் பார்க்கும் போது, 'நல்ல வேளை! அப்பா நம்மை இந்த மாதிரி ஆம்படையானைப் பார்த்துக் கொடுக்காமலிருந்தாரே?' என்று தோன்றும். ஸ்ரீதரனின் களையான முகத்தை யும், நாகரிகமான தோற்றத்தையும் அவள் நினைத்துப் பார்த்துப் பெருமை கொள் வாள். ஆனால் அடுத்த நிமிஷமே, அவனும் ஸுசீலியுமாக எடுத்துக் கொண்ட போட்டோ படம் மனக்கண் முன்னால் வந்து நிற்கும். அவளுடைய பெருமை சிதறிப்போகும். 'அசடாயிருந்தாலென்ன? அவலட்சணமாயிருந்தாலென்ன? ஜயம் அதிர்ஷ்டசாலி, அவளுக்கு அகமுடை யானின் அன்பு இருக்கிறது. நாம்தான் கொடுத்து வைக்காத பாவி' என்று நினைத் துக் கண்ணில் துளிர்த்த கண்ணீரை மற்றவர் கள் பார்க்காதபடி துடைத்துக் கொள்வாள்.

ஜயத்தின் தகப்பனாருக்கு உடம்பு சரி யில்லையென்று விஷயத்தைக் கேட்டதும் சாவித்திரிக்கு, 'ஒரு வேளை நம் அப்பாவுக் கும் உடம்பு ஏதாவது அசௌகரியமாயிருக் குமோ? அதனால்தான் கடிதம் போடவில் லையோ?' என்று தோன்றியது. 'ஐயோ! அவர் சுரம் கிரமென்று படுத்துக் கொண் டால், சித்தியும் பாட்டியும் அவரைச் சரியாய்க் கவனித்துக் கொள்வார்களா? அந்த மாதிரி சமயங்களில் நாம் பக்கத்தில் இருந்தால் அவருக்கு எவ்வளவு ஆறுதலா யிருக்கும்? ஐயோ! நாம் பெண்ணாய்ப் பிறந்தது அப்பாவுக்குக் கஷ்டத்தைத் தவிர வேறென்ன? இந்த வயதில் ஒரு பிள்ளை யிருந்தால் அவருக்கு எவ்வளவு ஒத்தாசை யாயிருக்கும்? நாம் ஆணாகப் பிறந்திருக்கக் கூடாதா?' என்றெல்லாம் எண்ணிப் பெரு மூச்சு விடுவாள்.

இப்படியெல்லாம் நினைக்க நினைக்க தகப்பனாரையும், நெடுங்கரையையும் பார்க்க வேண்டுமென்ற அவளுடைய ஆவல் பத்து மடங்கு, நூறு மடங்காகப் பெருகிக் கொண்டிருந்தது. மணிக்கு முப்பது மைல் வேகத்தில் ரயில் போய்க் கொண்டிருந்த போதிலும், அதிலிருந்த ஒவ் வொரு நிமிஷமும் சாவித்திரிக்கு ஒரு யுக மாகத் தோன்றிற்று.

கணபதியின் குடும்பத்தார் சென்னைப் பட்டணத்தில் இறங்கி இரண்டு நாள் சிரம பரிகாரம் செய்து கொண்டு பிறகு திரு நெல்வேலிக்குக் கிளம்ப உத்தேசித்திருந் தார்கள். ஒரே பிரயாணமாகப் போனால் பிள்ளைத்தாச்சிப் பெண்ணுக்கு உடம்புக்கு ஆகாதென்று கணபதியின் தாயார் சொல்லி விட்டாள். ஆகவே, சென்னையில் அவர் களுக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் தங்கி விட்டுப் போகத் தீர்மானித்தார்கள். சாவித் திரியையும் தங்களுடன் இருந்து விட்டுப் போகும்படி சொன்னார்கள். அவள் அதற்கு இணங்கவில்லை.

இந்த நல்ல மனுஷ்யர்கள் காட்டிய அபிமானத்தினாலும் அநுதாபத்தினாலுமே அவர்களைச் சாவித்திரிக்குப் பிடிக்காமல் போயிருந்தது. அவளுடைய துரதிர்ஷ்டத் தைப் பற்றிக் கணபதியின் தாயார் அடிக்கடி பேசியதும், அதைக் கணபதியும் ஜயமும் தடுக்க முயற்சித்ததும் சாவித்திரிக்குப் பரம சங்கடத்தை அளித்தன. இவர்களே தனக்கு முன்பின் தெரியாதவர்கள். இனிமேல் இவர்களுக்குத் தெரிந்தவர்கள் வீட்டுக்கும் போய் அவர்களுடைய பரிதாபத்துக்கும் ஆளாக வேண்டுமா? மேலும், நெடுங் கரைக்குப் போய்ச் சேரும் ஆவலும் சாவித் திரிக்கு அளவில்லாமல் இருந்தது. ஆகை யால் தன்னைப் பெண்பிள்ளைகளின் வண்டியில் ஏற்றி விட்டு விட்டால், போய் விடுவதாக அவர்களிடம் சொன்னாள். தங்க ளுடன் தங்கிப் போகலாமென்று அவர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமற் போகவே, அப்படியே அவளை ரயில் ஏற்றி விட்டார்கள்.

(தொடரும்)

பட்டுமனம்

மணி எப்போதடிக்கும் என்றிருந்தது கோமதிக்கு. வாட்சைப் பார்த்தாள். நாலு இருபத்தைந்து. இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கிறதே என்று நினைத்தாள். காத்துக் கொண்டிருந்தாலே இப்படித் தான். முட்கள் நகர மறுப்பது போலிருக்கும். இன்று நேற்றா இப்படி மணி அடிக்கக் காத்துக் கொண்டிருப்பது? கோமதிக்குப் பழகிப் போனதென்றாலும் வெள்ளிக்கிழமை நாலு மணிக்கு மேல் ஒரு பர பரப்பு தொற்றிக் கொள்ளும். இன்று வியாழக்கிழமையே அந்தப் பரபரப்பு!

மணி அடித்தது. அவசரமாக விடுமுறை விண்ணப்பம் எழுதி எடுத்துக் கொண்டு, தலைமை ஆசிரியர் அறைக்குள் நுழைந் தாள். அவள் வேலை பார்ப்பது ஒரு மேல்நிலைப் பள்ளியில்.


''ஊருக்குப் போறீங்களாம்மா?'' என்றார், கடிதத்தை வாங்கிக் கொண்ட தலைமை ஆசிரியர்.

''ஆமாம் சார். நாளைக்கு 'பந்த்' தாச்சே?'' என்றவ ளாய், வேகமாய் நடக்க ஆரம்பித்தாள். மழை மெல்ல பூத்தூவலாய்த் தூற ஆரம்பித்தது. கையில் குடையை விரித்துப் பிடித்து எட்டி நடை போட் டாள்.

வீட்டுப் படிகளில் ஏறிக் குடையை மடக்காமலே ஹேண்ட் பாக்கில் இருந்த வீட்டுச் சாவியை எடுத்துக் கதவைத் திறந்தவள், பின் குடையை மடக்கி, நீர் வழிய வாசலிலே ஓரத்தில் சரித்து வைத் தாள். மிதியடியில் அழுந்த கால்களைத் துடைத்தபின் உள்ளே நுழைந்து கதவைச் சாத்தி னாள்.

கீச்கீச்சென்று குருவிக் குஞ்சுகளின் சப்தம். ஒருமுறை செங்கோட்டைக்கு ஒரு வார லீவில் போய்விட்டு திங்கட்கிழமை காலை வந்து பார்த்த பொழுது திட்டுத் திட்டாய் கிச்சனில் ஒரே இடத்தில் குருவி எச்சம். கிச்சன் ஸ்லாபில் எறிந்த செருப்பு வைக்கும் அட்டைப் பெட்டிக்குள் தும்பும் வைக்கோலும் கொண்டு குருவி, கூடு கட்டியிருந்தது. குருவிக் கூட்டைக் கலைப்பது, குளவிக் கூட்டைப் பிய்த்து எறிவது தப்பு என்று எப்பவோ சிறு பிள்ளையாய் இருக்கும்போது அம்மா சொன்னது ஞாப கத்திற்கு வரவே, எச்சம் விழுந்திருந்த இடத்தைச் சுத்தப்படுத்தினாள். மறு முறை வாரக் கடைசியில் ஊருக்குப் போய்விட்டுத் திரும்பிய போதும் குருவி ரங்கோலி போட்டிருந்தது. அதிலிருந்து ஊருக்குப் போகும் முன் குருவிக் கூட்டிற்கு நேர்கீழே பேப் பரை வைத்துவிட்டுப் போவாள். திரும்பி வந்து பார்த்தால் இடம் குறித்து





எச்சம் இட்டாற் போல் பேப்பரில் எச்சம் விழுந்திருக்கும். பேப்பரை எடுத்துக் குப்பைக் கூடையில் போடுவாள்.

பழைய பேப்பர் ஒன்றை எடுத்து வழக்கமாய் வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு நிமிர்ந்த பொழுது சிட்டுக் குருவி விருட்டென்று வென்டிலேட்டர் வழி யாய்ப் பறந்து சென்றது. பாத்ரூம் சென்று ஸ்டிக்கர் பொட்டை எடுத்துக் கதவில் ஒட்டி வைத்துவிட்டு முகத்தை சோப் போட்டு அலம்பி வாள். முகம் துடைத்து, தலை பின்னி, முகத்திற்குப் பவுடர் பூசி மீண்டும் பாத்ரூம் கதவில் இருந்து ஸ்டிக்கர் பொட்டை எடுத்து நெற்றியில் அழுத்தி வாள்.



நேரம் பார்த்த பொழுது நாலு ஐம்பது ஆகி யிருந்தது. ஐந்த ரைக்கு பஸ் ஸ்டாண்ட் போனால் போதும். சேலையை அவிழ்த்து மீண்டும் உடுத்தி னாள். மகள் புவ னாவின் நினைவு வந்தது. ஒவ் வொரு திங்கட் கிழமையும் அதி காலையில் செங்கோட்டையில் இருந்து கிளம்பும் போது - இப்படி அவசரமாய் உடுத்தும்போது இப் போதெல்லாம் சேலையைப் பிடித் திழுத்து அழ ஆரம்பித்து விடு கிறாள். விவரம் தெரிய ஆரம்பித்து விட்டது. அவளையறியாமல் பெருமூச்சு வந்தது. கூடவே எப்போது பிள்ளையைப் பார்ப் போம் என்று மனசு தவிக்க ஆரம் பித்தது.

'ச்சே, இதென்ன வாழ்க்கை? பிள்ளையை அருகில் வைத்துக் கொஞ்ச முடியாத வாழ்க்கை. மழலையில் பேசும் பொழுது அருகில் இருந்து கேட்கக் கொடுத்து வைக்காத துர்பாக்கியம்! என்ன சம்பாதித்து என்ன?' - ஒவ்வொரு நாளும் சாப்பிடும்போதெல்லாம் குற்ற உணர்வு தலைதூக்கும். குட்டிக் கண்ணம்மாவிற்குச் சோறூட்ட முடியலையே என்று.

என் ராசாத்தி இந்நேரம் பால் சாப்பிட்டிருப்பாளா? இல்லை, பிடிவாதம் பிடித்து அத்தையைப் பாடாய்ப் படுத்துவாளோ? ஸ்டாஃப் ரூமில் மற்ற ஆசிரி யைகள் ''நம்ம அவசரம் தெரி யாம முரண்டு பிடிக்கிறா'' என்றும், ''குளிப்பாட்டினா சோப்பு போட விடமாட்டேனென்கிறான்'' என்றும் சொல்லும் போது மனசு ஏங்கும். இவர்கள் குற்றச்சாட் டாய்ச் சொன்னாலும் ஒவ்வொ ருத்தரும் தன் பிள்ளையின் குறும்புத் தனத்தை ரசிப்பது அப்பட்டமாய்த் தெரியும்.

இவரிடம் எத்தனையோ முறை சொல்லியாச்சு. ''ஏங்க, எனக்கு சீக்கி ரம் நம்ம ஊர்ப் பக்கம் டிரான்ஸ்ஃப ருக்கு ஏற்பாடு பண்ணுங்களேன்'' என்று.

எப்ப சொன்னாலும் ''இப்ப தானே அந்த ஊருக்குப் போயி ருக்கிறே? உடனே டிரான்ஸ்ஃபர் வேணும்னா ஐயாயிரம், ஆறாயிரம் தெண்டம் அழணும். தேவையா? வீடு கட்ட வாங்கின லோன்

ஷஜிலா தேரிராஜன்

அடைக்காம இருக்கு. பிறகு பார்ப்போம்.''

''ஊர்க் குருவி மாதிரி பறக்க வேண்டியதாயிருக்கு. உங்களை மாதிரி எனக்கு மேனேஜ்மெண்ட் ஸ்கூல்ல வேலை கிடைச்சிருக்கணும்.''

''அதுவும் சொந்த ஊர்லயேன்னு சேத்துக்க. அதான், நீ வெள்ளிக் கிழமை ஊருக்கு வந்திடறியே!''

ஆரம்பத்தில் கோமதியும் புவனாவைத் தன்னுடன் வைத்துக் கொள்ளாமல் இல்லை. ஸ்கூலுக்குப் போகும் நேரம் கவனித்துக் கொள்ள ஆள் ஏற்பாடு பண்ணியிருப்பாள் தான். ஆனால் ஒரு நாள் அந்தப் பெண்ணின் கவனக் குறைவால் தீப்பெட்டி ஒட்ட வைத்திருந்த பசையைச் சாப்பிட்டு புவனா வாந்தி எடுத்தாள். அந்தச் சின்ன கிராமத்தில் உள்ள டாக்டர், பக்கத்து டவுனுக்கு எடுத்துச் செல்லுங்கள் என்றார். மிகவும் கஷ்டப்பட்டுப் போனாள் கோமதி. பிள்ளையின் நிலை மிகவும் மோசமாகி, பின்பு மெல்ல மெல்லத் தேறினாள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் மாமியார், சரவணன் புவனா எல்லோரும் சொந்த ஊரான செங்கோட்டையிலும், கோமதி இந்த ஊரில் சிறிய வாடகை வீட்டிற்கும் வந்தாள். ஸ்கூல் விட்டதிலிருந்து இரவு தூக்கம் வரும்வரை புத்தகம்தான் துணை. ஒரு பக்கம் வாசித்து முடிப்பதற்குள் மூன்று நான்கு முறை மகள் நினைவு வந்துவிடும்.

யோசனையில் இருந்து மீண்டு 'எல்லாப் பாத்திரங்களையும் அலம்பி வைத்திருக்கிறோமா?' என்று பார்க்கக் கிச்சனுக்குள் சென்றாள். உதட்டில் ஏதோ ஈரமாய் விழுந்தது. சிட்டுக் குருவி வெண்டிலேட்டர் வழியாய்ப் பறந்தது வெளியே! விரலால் தொட்டுப் பார்த்தாள். மஞ்சளும் வெள்ளையும் கலந்த குருவி எச்சம்! அருவருப்பாய் இருந்தது. 'குருவிக் கூட்டைத் தூக்கி தூர எறிந்து விடுவோமா!' என்று எண்ணினாள். வாய், கையை நன்கு கழுவித் துடைத்த வேகத்தில் பழைய அட்டைகளைத் தேடி எடுத்து வெண்டிலேட்டரை அடைத்தாள். அழுத்தி, அழுத்தி வழியை அடைத்த பிறகே நிம்மதி பிறந்தது. கோபம் தணிந்தது.

வாட்சைப் பார்த்தவள் ஹேண்ட் பேக்கில் கதவைப் பூட்டி சாவியைப் போட்டாள். வெளியில் மழை ஹோவென்ற சப்தத்துடன் இப்பொழுதுதான் ஆரம்பித்தது. குடையை விரித்துப் பிடித்துப் பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தாள்.

''இந்த பஸ்ஸில் ஏறினால்தான் எட்டு மணிக்கு வீடு போய்ச் சேர முடியும். அதோடு ஏறி இறங்க வேண்டிய தொல்லை இல்லை. த்ரூ பஸ். இதை விட்டால் அவ்வளவுதான்... ரொம்ப லேட்டாயிடும். நாளைக்கு பந்த் வேற. இந்த பஸ்ஸும் நிரம்பி வழியத்தான் செய்யும். புவனாக் குட்டி காத்துக் கொண்டிருப்பாள். போனதும் தாவி வருபவள், கிளம்பும் வரை கங்காருக் குட்டியாய் ஒட்டிக் கொள்வாள். 'ம்மா, ம்மா' என்று கூப்பிடுவதே அழகு! ஊருக்குப் போனால் ம்மாதான் ஊட்டணும். 'ஆ'வென்று குருவிக் குஞ்சுபோல் வாயைத் திறந்து... டக்கென நினைவு இழை அறுந்தது.

குருவிக் குஞ்சு! அட்டையை வைத்து வெண்டிலேட்டரை அடைத்து விட்டோமே அழுத்தி! வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாளாய்ப் பூட்டிக் கிடக்கும் வீட்டிற்குள் தாய்க்குருவி எப்படிச் செல்லும்? எப்படி உணவூட்டும்? பசித்த வயிறோடு குஞ்சுகள் கீச்மூச்சென்று கத்தாதா? குஞ்சுகளைப் பார்க்க தாய்க்குருவி துடிக்காதா? பதறாதா?


வளைவில் பஸ் வரும் சப்தம் கேட்டது. கோமதி பலத்த மழையில் குடை பிடித்தவாறு வீடு நோக்கித் திரும்பி நடந்தாள். அடுத்த பஸ்ஸுக்கு இன்னும் அரை மணி இருக்கிறது.

''அப்பா! கவர் ஏதாவது இருந்தாக் குடுங்களேன்!''

''எதுக்குடா?''

''ஆபீஸ் விளையாட்டுக்குத் தேவைப்படுது!''

- வேதபுரி எஸ். ரமேஷ்



எழில்மிகு சென்னை: எதிர்பார்ப்பு என்ன?



* ராஜலட்சுமி

பி. ஆர். ராஜலட்சுமி :

மெரினாவை மட்டும் சுத்தம் செய்தால் போதாது. நகரங்களின் நடுவே வந்து பார்க்க வேண்டும். தற்சமயம் சில நாடுகளில் அமுலில் உள்ளது போல, பொது இடங்களில் புகைபிடிப்பதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வர வேண்டும். வெற்றிலை போட்டு, பொது இடங்களில் எச்சில் உமிழ்கிறவர்களைக் குறைந்தது ஒரு நாளாவது 'உள்ளே' வைக்கலாம்!

என். கீதா :

தெருவோரக் கடைகளை அப்புறப்படுத்தினாலே பாதி சுத்தமாகி விட்டாற் போலத்தான். பார்க் வைப்பது நல்ல ஐடியாதான். ஆனால் பராமரிப்பு மிக முக்கியம். இதைத் தனியார் நிறுவனங்கள் ஸ்பான்ஸர் செய்யலாம். இன்னும் நிறைய இடங்களில் பாதசாரிகள் சாலையைக் கடக்க சப்-வே அமைக்க வேண்டும். அப்போதுதான் நெரிசல் குறையும்.



* கீதா

வி. எஸ். நீலகண்டன் :

மெட்ராஸில் இப்போது அதிகரித்து வரும் போஸ்டர் ஒட்டும் பழக்கத்தை ஒழித்தாலே பாதி அழகு வந்துவிடும். குறிப்பாக அடல்ஸ் ஒன்லி பட விளம்பரங்கள். திரிசூலம் பகுதியில் அடிக்கடி நேரும் விபத்துக்கும் இதுதான் காரணம். கொத்தவால் சாவடி, ரங்கநாதன் தெரு போன்ற இடங்களைக் கொஞ்ச நாள் No walk zone ஆக அறிவித்துச் செப்பனிட வேண்டும். மறுபடி மறுபடி மெரினாவையும் மௌண்ட் ரோடையும் மட்டும் அழகுபடுத்திப் பிரயோஜனமில்லை.



* நீலகண்டன்

கே. கௌசல்யா :

நகர்ப்பகுதி பெரும்பாலும் வளர்ந்துவிட்டது. கார்ப்பரேஷன் எல்லைகளை விரிவாக்க வேண்டும். பல்லாவரம், குரோம்பேட்டை, ஆலந்தூர், பழவந்தாங்கல், மடிப்பாக்கம் இங்கெல்லாம் ஒரு சாலையோ, தெருவோ உருப்படியாகக் கிடையாது. எங்கும் மேடு, பள்ளம். இந்த மாதிரி இடங்களுக்குச் சரியான சாலை போன்ற அடிப்படை வசதிகள் கூடச் செய்து தராமல், அழகிய சென்னை 2000 என்று பீற்றிக் கொள்வது அபத்தம்.



* கௌசல்யா

– ஆகர்ஷன்

படங்கள் : கோபிநாத்

சிதம்பரம் நகர வாசகர்களே!

கும்பகோணம், கரூர், கன்யாகுமரி நகரச் சிறப்பிதழ்களைத் தொடர்ந்து 'சிதம்பரம் நகரச் சிறப்பிதழ்' தயாராகப் போகிறது. தயாரிக்கப் போவது – நீங்கள்தான்!

உங்கள் ஊரின் அருமை பெருமைகளை, குறிப்பிடத் தகுந்த நிறுவனங்கள், தனி நபர்கள், அமைப்புகள், இன்னும் என்னவெல்லாம் இடம் பெறவேண்டும் என்று நினைக்கிறீர்களோ எழுதி அனுப்புங்கள். நீங்கள் தரும் தகவல்களின் அடிப்படையில் எமது நிருபர்கள் நேரில் வந்து பார்த்தபின் பிரசுரிக்கிறோம்.

எங்கே எடுங்கள் பேனாவை!

14.1.94க்குள் உங்கள் கடிதங்கள் எங்களுக்குக் கிடைக்கும்படி, 'சிதம்பரம் சிறப்பிதழ்' என உறை மீது குறிப்பிட்டு எழுதுங்கள்.

– ஆசிரியர்

ராஜாஜி

65. எங்கும் தேடினான்

லங்கையில் ஹனுமான் இறங்கினான். மிக உற்சாகமாகவும் மகிழ்ச்சி கொண்டவனுமாகவும் இறங்கினான். பிறகு நிதானமாக யோசிக்கலானான்.

''கடலைத் தாண்டி விட்டேன். உண்மைதான். ஆயினும் அதனால் வேலை முடிந்து போகவில்லை. திரிகூட மலை மேல் ராவணனுடைய பெரிய நகரம் ஆகாயத்தில் தொங்குவது போல் காணப்படுகிறது. ஆஹா! எவ்வளவு அழகு! எவ்வளவு செல்வம்! எவ்வளவு ஆயுதக் காப்பு! அமராவதி, போகவதி நகரங்களுக்குச் சமானமான நகரமும் கோட்டையுமாக இருக்கிறது. வனங்களின் வனப்பும் மாளிகைகளின் அழகும் மதிற் சுவர்கள், காவல் யந்திரங்கள், அகழிகள், இவற்றையெல்லாம் பார்க்கும் போது கவலையாக இருக்கிறது. இந்த ராவணனை எவ்வாறு எதிர்த்து ஜெயிப்போம்? நான் தாண்டிய கடலை நம்முடைய சேனை எப்படித் தாண்டி வர முடியும்? தாண்டி வந்தாலும் இந்தக் கோட்டையை எப்படித் தாக்கி வெற்றியடைவோம்? ஆயுத பாணிகளாக நிற்கும் அரக்கர்களால் காக்கப்படும் இந்த நகரத்தை சாமம், பேதம், தானம், யுத்தம் எதனாலும் தகர்க்க முடியாது போலிருக்கிறது. ஆயினும் சீதை உயிரோடிருக்கிறாளா, இல்லையா என்பதை முதலில் காண வேண்டும். பிறகு மற்ற யோசனையெல்லாம்! ராவணனால் காக்கப்படும் இந்த நகரத்துக்குள் நான் எவ்வாறு, எப்போது பிரவேசித்தல் நலம்? ஓரிடம் விடாமல் தேடினால் அல்லவோ சீதையை மறைத்து வைத்திருக்கும் இடத்தைக் காண முடியும்? யோசனை செய்யாமல் தவறான முறையில் நான் ஏதேனும் இப்போது செய்து விட்டேனானால் முதல் பிழை முற்றும் பிழையாகிப் போய், ராம காரியம் என்னால் கெட்டுப் போனதாகும்.

''பகலில் பிரவேசித்தால் இந்த அரக்கர்கள் எளிதில் என்னைக் கண்டு கொள்வார்கள். இரவிலேதான் நகரத்துக்குள் நான் புக வேண்டும். எந்த உருவத்தை எடுத்து நான் பிரவேசிக்கலாம்? அரக்கர்கள் என்னைக் கண்டு சந்தேகப்படாத மிகச் சிறிய அற்ப உருவம் எடுத்துச் செல்ல வேண்டும்.''

இவ்வாறு யோசித்து, ஒரு பூனையளவான சிறு குரங்கு உருவம் எடுத்துக் கொண்டான். நகரத்துக்குள்ளும் மாடமாளிகை உப வனம் முதலிய எல்லா இடங்களிலும் பிரவேசித்துத் தேடுவதற்கு அதுவே சவுகரியம் என்று தீர்மானித்தான். தீர்மானித்த உடனே வாயு புத்திரன் தன் இயற்கை உருவத்தைச் சுருக்கிக் கொண்டு விட்டான். பிரம்மாண்ட பெரிய வடிவமாகிக் கடலைத் தாண்டிய ஹனுமான் ஒரு சிறு குரங்கானதை யாராவது கண்டிருந்தால் மிக வியந்திருப்பார்கள்.

இப்படி ஆஞ்சநேயன் சிறு குரங்கு வடிவம் எடுத்த சமயம் சூரியன் அஸ்தமித்து விட்டான். ஹனுமான் கோட்டை வாயில் நோக்கிச் சென்றான். அச்சமயத்தில் சந்திரன் தோன்றி எங்கும் நிலா நிறைந்தது. தேடும் வேலைக்குச் சகாயமாகவே சந்திரன் தோன்றியிருக்கிறான் என்று எண்ணி, ஹனுமான் உற்சாகத்தோடு சென்றான்.

மதிலால் காக்கப்பட்ட ராவணனுடைய நகரத்தின் அழகும் செல்வமும் போகமும் தூரத்திலிருந்து பார்க்கும் போதே ஹனுமான் மிகவும் வியந்தான். வீதிகள், மாளிகைகள், தோரணங்கள், அலங்காரங்கள், கொடிகள் எல்லாம் பொன், வெள்ளி, ரத்தின மயமாக ஜொலித்தன. சமுத்திரக் காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. இந்திரனுடைய அமராவதியும் குபேரனுடைய அளகாபுரியும் போல் ராவணனுடைய நகரம் ஐசுவரியத்தின் உச்சியை அடைந்திருந்ததைக் கண்டான். வியப்பு ஒரு பக்கம்,

சக்கரவர்த்தித் திருமகன்



மற்றொரு பக்கம் இவ்வளவு பலமாகக் காக்கப்பட்டு ஐசுவரியம் நிறைந்த இந்தக் கோட்டையையும் நகரத்தையும் இதைப் பரிபாலித்து வரும் அரக்கனையும் எவ்வாறு வெல்வது என்கிற கவலை ராம தூதனுக்கு வளர்ந்தது.

இப்படி வியந்தும் கவலை கொண்டும் பார்த்துக் கொண்டே சென்ற போது அந்த நகரத்து அதிதேவதை பயங்கர வடிவத்துடன் ஹனுமானுக்கு எதிரில் நின்று, ''யார் நீ குரங்கு? இங்கே எவ்வாறு வந்தாய்? ஏன் வந்தாய்? உண்மையைச் சொல்?'' என்று அதட்டிக் கேட்டாள்.

''நான் குரங்குதான். இந்த அழகிய நகரத்தைப் பார்த்துப் போக வந்திருக்கிறேன். எல்லாம் சுற்றிப் பார்த்து என் ஆசையைத் தீர்த்துக் கொண்டு திரும்பிப் போவேன்'' என்றான் ஹனுமான்.

லங்கா தேவதை கோபங்கொண்டு ''குரங்கே!'' என்று ஹனுமானை ஒரு அறை அறைந்தாள்.

ஹனுமானும் தன் இடது கையால் லங்காதேவியை ஒரு குத்து குத்தினான். கோர வடிவம் கொண்ட தேவதை அந்தக் குத்தைத் தாங்க முடியாமல் கீழே சுருண்டு விழுந்தாள்.

விழுந்த லங்கா தேவதை எழுந்து ''ஒரு வானரத்தால் அடிபட்டு எந்த நாளில் நீ தோற்றுக் கீழே விழுவாயோ அன்று உன் நகரத்துக்கு முடிவு என்கிற வாக்கு உண்மையாகும் போலிருக்கிறது. ராவணனுடைய பிழைகள் முற்றிப் போயிற்று. இனி லங்கை அழிய வேண்டிய காலம் வந்து விட்டது. தேவர்கள் சொன்னது நிறைவேறப் போகிறது'' என்று சொல்லி விட்டு ஒதுங்கி நின்றாள்.

லங்கா தேவதை ராவணனுக்குக் கீழ்ப்படிந்த ஒரு ஆள் அல்ல. அந்த நகரத்தின் விதியே இந்தச் சொரூபம்.

குரங்காகிய ஹனுமான் மதில் ஏறி உள்ளே குதித்துப் பிரவேசித்தான்.



அரசியல் வார இதழ்
நக்கீரன்
ஜனவரி 1 முதல்
முதன் முதலாக
வை.கோ
எழுதும்
யமுனை
கரையில்
அரசியல் தொடர்
இது ஒரு
உணர்வுகளின்
தொகுப்பு!

விரோதிகளுடைய கோட்டைகளுக்குள் சாதாரண வாயில் வழியாகச் செல்லல் ஆகாது, வழியில்லாத வழியில் செல்ல வேண்டும் என்பது பழைய யுத்த நீதி சாஸ்திரம். அரக்கர்கள் அழிய வேண்டும் என்று சங்கற்பம் செய்து கொண்டு, ஹனுமான் லங்கா நகரத்துக்குள் வலது காலை முன் வைத்துப் பிரவேசித்தான்.

அழகிய புஷ்பங்கள் உதிர்ந்து மிகப் பொலிவடைந்திருந்த ராஜவீதியில் சென்றான். மேகங்களுக்கு இடையில் மின்னல் வீசிப் பிரகாசிப்பது போல் பிரகாசித்துக் கொண்டிருந்தன மாட மாளிகைகளெல்லாம். அவற்றின் மேல் ஏறிச் சென்றான். மாளிகைகளின் சௌந்தரியத்தை அனுபவித்துக் கொண்டே சென்றான்.

சொல்லுக்கு அடங்காத அழகுடன் அரக்கர்களின் மாளிகைகளும் அலங்காரங்களும் தெருக்களும் பிரகாசித்தன. சங்கீத சாஸ்திரோக்தமாகப் பாடிய பாட்டுக்கள் கேட்டன. அழகிய பெண்டுகளும் அவர்கள் கால்களின் ஆபரணங்களுடைய சப்தமும் நிறைந்த மாளிகைகளைக் கண்டான். எங்கும் குதூகல ஆரவாரங்கள். சில வீடுகளில் அரக்கர்கள் வேதம் ஓதிக் கொண்டிருப்பதைக் கேட்டான். சில வீடுகளில் ராவணனை ஸ்துதி செய்து கொண்டிருக்கும் சப்தத்தைக் கேட்டான். யுத்த வீரர்களும் சாரர்களும் நிறைந்திருந்த வீதிகளைப் பார்த்தான். வைதீக முறையில் விரதம் பூண்டிருந்த பலரையும் இன்னும் அநேக காட்சிகளையும் கண்டான். கோரமான வடிவங்களும் கண்டான். வில்லும், கத்தியும், பெருந்தடிகளும், கல் வீசும் கவண்டையுறிகளும், சூலாயுதங்களும், எறியும் வேல்களும், இன்னும் பல யுத்தப் படைகள் வைத்துக் கொண்டு நிற்பவர்களைக் கண்டான். வீரர்கள் எல்லாரும் கவசங்கள் பூண்டிருந்தார்கள்.

சிலர் மிக அழகாக இருந்தார்கள். சிலர் மிகக் கோரமாக இருந்தார்கள். சிலர் வெளுப்பு, சிலர் மிகக் கறுப்பு, சிலர் சிவப்பு, சிலர் சாதாரண வடிவம், சிலர் மிகக் குள்ளம், சிலர் மிக உயரம். இவ்வாறு நானாவித வடிவங் கொண்ட ஜனங்களைக் கண்டான்.

மாளிகை மாளிகையாகப் பார்த்துக் கொண்டே ஹனுமான் சென்றான். மகோன்னத அழகைக் கொண்ட பல ஸ்திரீகளைக் கண்டான். நாயகர்களுடன் சந்தோஷமாக இருப்பவர்களைக் கண்டான். உருக்கி விட்ட தங்கத்தைப் போன்ற நிறம் கொண்ட யௌவனப் பெண்மணிகள் பலரைக் கண்டான். சிலர் உப்பரிகையில் உட்கார்ந்திருந்தார்கள். சிலர் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் விளையாடிக் கொண்டும் பாடிக் கொண்டுமிருந்தார்கள். இவ்வாறு கணக்கற்ற ஸ்திரீகளைக் கண்டான். ஆனால் துக்கப்பட்டு இளைத்துப் போய் ராமனையே தியானம் செய்து கொண்டிருக்கும் சீதையைக் காணவில்லை. சௌந்தரிய வடிவங்களையெல்லாம் கண்ட ஹனுமானுடைய உள்ளத்தில் துக்கமே நிறைந்து நின்றது.

பல அரக்க வீரர்களுடைய மாளிகைகளில் ஒவ்வொன்றாகப் பிரவேசித்துப் பார்த்தான். யுத்த யானைகளும் ஜாதிக் குதிரைகளும் தேர்களும் ஆயுத சாலைகளும் எங்கும் நிறைந்திருந்தன. எங்கும் வீரர்கள் ஆயுதபாணிகளாய் நின்றார்கள். ஸ்திரீகளும் விளையாட்டுக்களும் பாட்டும் சங்கீதவாத்திய முழக்கமுமாக ஆனந்த மயமாயிருந்த மாளிகை வரிசைகளையும் தோட்டங்களையும் பார்த்துவிட்டுப் பிறகு மலை போல் உயர்ந்து நின்ற ஒரு மிகப் பெரிய அரண்மனையைக் கண்டான். அதன்முன் நின்ற யானை, குதிரை, காலாட்படைகளையும் அதைச் சுற்றியிருந்த மதிலையும் மாளிகையின் அபார அழகும் ஆபரண தோரணங்களும் பார்த்து, இதுவே ராவணனுடைய அந்தப்புரம் என்று தெரிந்து கொண்டு செல்வ மயமான லங்கா நகரத்துக்கே ஒரு சுடர்விட்டு ஜொலிக்கும் ஆபரணம் போலிருந்த அந்த அரண்மனைக்குள் பிரவேசித்தான்.

(தொடரும்)



"முழுக்க சங்கீதத்தை வச்சு ஒரு படம் எடுக்கப் பூஜை போட்டாங்களே... என்ன ஆச்சு?"

"மங்களம் பாடியாச்சு...!!"

- ஆர்.பி. சாரதி.

KARTIK FINE ARTS (REGD.)

39, Bheemanna Mudali Garden Road,

Alwarpet, Madras - 600 018. Phone : 73388

wishes the members, artistes and patrons

A HAPPY AND PROSPEROUS NEW YEAR

and cordially invite you with your family and friends

for the **INAUGURATION OF 19th YEAR DANCE FESTIVAL - 94**

at 6.15 p.m. on Tuesday the 4th Jan. '94

at Bharathiya Vidya Bhavan, Mylapore, Madras - 4.

Shri **V. Balaraman,**

Managing Director, Ponds (India) Ltd.,

Presides

Shri **V.M. Sivasubramaniam,**

Chief Commissioner of Income Tax

Inaugurates

Shri **C.V. Narasimhan,** Former Under Secretary,

United Nations

will be the Chief Guest, Confer the Title

NADANA MAMANI

(Shriram Award of Excellence which carries

cash Rs. 10,000/-, a scroll, and a Golden Medallion) on

Smt SHOBA NATARAJAN

and felicitate.

Shri **Prakash Mehta,** Industrialist from USA

will be a Special Invitee

7.15 p.m. Bharatha Natyam

By Kum. Deepa and Kum. Archana

(Disciples of Mrs. Krishnakumari Narendran)

பாலம்

●● அகில இந்திய ரேடியோ, திங்கள் தோறும் நடத்தும் சமஸ்கிருத கல்வி நிகழ்ச்சி கேட்டு வருகிறேன். மின்தடங்கல் காரணமாக 6.9.93, 8.11.93 பாடங்கள் கிடைக்கவில்லை. தயவு செய்து உதவவும்.

– வி. ரங்காராவ்,
பிளாட் 58, புதிய என்.ஜி.ஓ. காலனி,
ஆதம்பாக்கம், சென்னை – 600 088.

●● சிறுகதை தொகுப்பு நூல் வெளியிட ஆர்வமுள்ள எழுத்தாளர்களிடமிருந்து சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன. விவரங்களுக்கு எழுதவும்.

– காவை. ஜெஸ்டர்,
6, பாணர் தெரு,
பழவந்தாங்கல்,
சென்னை – 114.



●● மாங்காடு அம்மன் கோயிலில் பக்தர்களுக்குத் தரப்படும் குங்குமம் போல் அதே தரத்தில் மாதம் பத்து கிலோ தேவை. அது போல் குங்குமம் தயாரித்துக் கொண்டிருப்பவர்கள் தொடர்பு கொள்க.

– ஆர். குமார்,
4A, பிரேமா ஸ்கூல் லேன்,
ரத்தினபுரம், மதுரை – 625 011.

●● ராணுவத்தினரின் மக்கள், ஆதரவற்றவர்கள், ஊனமுற்றவர்கள், விவாகரத்தானவர்கள், விதவைகள், வரதட்சிணை இன்றி மணம் புரிய விரும்புவோர் ஆகியோருக்கு இலவச சேவை.

– விஜயா,
இளமதி காந்தன் திருமணத் தகவல் மையம்,
23, புண்ணியகுடி,
மன்னார்குடி – 614 012.

●● என் தந்தை, திருப்பூர் தியாகி டி.பி. ராமசாமி நடத்தி வந்த ''மாலுமி'' பத்திரிகையின் பிரதிகள் வைத்திருக்கும் அன்பர்கள் தெரிவித்தால் தக்க விலை தந்து வாங்கிக் கொள்கிறேன்.

– ஆர். சந்திரமோகன்,
உதவி மேலாளர்,
பாரத ஸ்டேட் வங்கி,
எம். கல்லுப்பட்டி கிளை,
எழுமலை வழி
மதுரை (மாவ) 626 535.

●● தமிழ் நாடு அரசின் தொழில் நுட்ப வாரியத்தால் நடத்தப்படும் Diploma in accountancy (Senior) தேர்வு ஜனவரியில் எழுத விண்ணப்பித்துள்ளேன். சிலபஸ், வினாத்தாள் மாதிரி தெரியாமல் அல்லல் படுகிறேன். உதவக்கூடியவர்கள் எழுதவும். தபால் செலவு ஏற்கிறேன்.

– தி. சுரேஷ்,
18, முத்துராணி தெற்கு
காரைக்குடி – 623 001.

●● செடி அவரை விதை, ஜே.ஜே. 98 வாசனை ரக நெல் வைத்திருப்போர் தயவு கூர்ந்து தங்கள் விலாசம் தெரிவித்து எழுதவும்.

– எம். இரத்னவேல்,
பொன்மலைப்பட்டி,
பொன்மலை,
திருச்சி – 4.

●● நான் பிறந்த பிரமாதி வருடம் மாசி மாதம் 16-ம் தேதி (28.2.1940) இரவு IST மணி 10:45 முதல் 11:15 சமயம் பிறந்த வருடன் கடிதத் தொடர்பு கொள்ள ஆவல்.

– ஹெச். இரமணிக்லால்,
37, கிழக்கு பொன்னுரங்கம் சாலை,
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002.

●● எனது பி.எச்.டி. ஆய்வுக்காக அம்பை எழுதியுள்ள, ''வீட்டின் மூலையில் சமையல் அறை''; ''சிறகுகள் முறியும்'' ஆகிய இரு நூல்களும் தேவை. தபால் மற்றும் ஜெராக்ஸ் செலவுகள் ஏற்கப்படும். அம்பை முகவரியும் தேவை.

– ஆர். சித்ரகலா,
6A/1, காமராஜ் சாலை,
சிவகாசி மேற்கு – 626 124.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. – ஆர்.)

23

மடி

சபரியில் நல்ல பால் பெரிய பெரிய பாத்திரங்களில் மிதமாக சூடாகிக் கொண்டிருந்தது. நடு முதுகில் கூனும், காட்ராக்ட் கண்ணாடியுமாய் இருந்த விசாலிப் பாட்டி, வறுத்த காப்பிக் கொட்டையை கவர்க் கோழி ரீங்காரத்துடன் பொடியாக்கிக் கொண்டிருந்த இயந்திரத்திற்கு எதிரில், பரீட்சை ரிசல்ட் எதிர்பார்க்கும் மாணவி போல லேசான கவலை முகத்துடன் நின்றிருந்தாள். காப்பிக் கொட்டை மிஷின் பொடியை உதிர்த்தது. அதை உள்ளங்கையில் ஏந்தி நிரடினாள்.

திரும்பினாள். வலது கை கட்டை விரலையும் சுட்டு விரலையும் சேர்த்து வட்டம் போல் ஆக்கி, முழங்கையை உயர்த்தி ஒரு குலுக்கலுடன் கூடிய அசை அசைத்தாள்.

''காப்பி சக்ஸஸ்'' என்றான் சிறுவர்களில் ஒருவன். அந்த இரு வார்த்தைகளும் சமையல் கூடத்தில் இருந்த ஒவ்வொருவரிடமும் தூது போய், வதந்தி பரவுவது போல் பரவி, சாலையில் நின்று கொண்டிருந்த சுஜிதாவின் காதில் வந்து விழுந்தது.

''சுஜிதாக்கா, காப்பி சக்ஸஸ்!''

சுஜிதா 'அப்பாடா' என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். உற்சாகமானாள். பக்கத்தில் நின்றிருந்த வேனில் இருந்த ஆறுமுகத்தையும் அந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது. வேனின் ரப்பர் பந்து ஹாரனை ஒருமுறை அழுத்தினான். 'பவ்வய்ங்க்' என்றது தப்பித்த காற்று.

சபரியின் விலாப்புறத்தில் இருந்த கதவு வழியாக கடலைப் பருப்பு மாவுடன் வெளிப்பட்ட மருது, பாத்திரத்தை வேனில் வைத்துவிட்டு, மறுபடி உள்ளே ஓடினான்.

சுஜிதா வேனைச் சுற்றி வந்தாள். டயர்களைத் தட்டிப் பார்த்தாள். டிரைவர் சிங்காரம், சுஜிதாவைக் கண்டவுடன் டிரைவிங் சீட்டில் ஏறி உட்கார்ந்தார்.

ஆறுமுகம் எலுமிச்சைகளை டயர்களுக்கு அடியில் வைத்தான். கற்பூரம் காட்டித் தேங்காயைச் சிதறுகளாக்கினான். வேலை முடிந்த திருப்தியில், அரும்பியிருந்த மீசையை நீவி விட்டுக் கொண்டான். கஸ்தூரிரங்கன் காலத்தில் மீசை இல்லை. இப்போது இருந்தது.

சுஜிதா இரும்பு ஹாண்டிலை எடுத்து வேனின் முகப்பில் அதற்கென இருந்த ஓட்டையில் நுழைத்துத் திருப்பினாள். கரகர என்று ஒரு பத்துத் தடவை சுழற்றியவுடன் வேன் ட்ரு, ட்ரு என்று முறைப்பாக எழுந்து கொண்டது. கிளம்பியது. சபரி நடமாடும் உணவகத்தின் அன்றைய மாலைப் பணி தொடங்கி விட்டது.

சுஜிதா சபரியின் விலாப்பக்கத்தில் நுழைந்து, புகை சூழாத சமையலறையில் பாட்டிகளின் ஊடே நடந்தாள். அவர்களின் பெருமூச்சுகளை உதாசீனம் செய்து, கூடத்தில் வெளிப்பட்டு நியான் விளக்குச் சுவிட்சைப் போட்டு எட்டிப் பார்த்தாள். சபரிக் கிழவி இராமனுக்கு இலந்தைப் பழம் ஊட்டினாள். சுஜிதா காஷ்-கவுண்டர் அடைந்து ஒரு கொத்து ஊதுபத்தி ஏற்றி விட்டு கஸ்தூரிரங்கன் விட்டுச் சென்ற சாம்ராஜ்யத்தை நோக்கினாள்.

சிலர் உட்கார்ந்தவாறே கைகளை ஆட்டினார்கள். சுஜிதா கையசைத்தாள். சிலர் 'சௌக்கியமா?' என்று சைகையில் வினவினார்கள். சுஜிதா சிரித்து 'சௌக்கியம்' என்று திருப்பிச் சைகை செய்தாள்.

தூரத்தில் ஐ.ஏ.எஸ். மாமாவும் இட்லிக்காகவே வரும் அவருடைய அம்மாவும் காரில் இருந்து இறங்குவது தெரிந்தது. கூடவே அந்தப் பையன்.


சுஜிதாவிற்குக் கண்களில் நீர் பெருகியது. அந்தப் பையனுக்கு இரண்டு வயது ஆண்டு விழாவைக் கொண்டாட அவர்கள் சபரிக்கு வந்த போதுதான் அந்த 'ஜிங்குலு'விற்கு பாத்ரூம் அவஸ்தை வந்தது. அந்த சந்தர்ப்பத்தில்தான் அவள் ரங்காவை முதல் முதலாகச் சந்தித்தாள். என்ன ஒரு விநோதமான முதல் சந்திப்பு! அவன் யாரென்று தெரியாமல் அவனைக் கோபித்ததும் அவன்தான் ரங்கா என்று தெரிந்தபின் குளிர்ந்ததும் அவன் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கவர்ந்து கொண்டதும் நீரும் நெருப்பும் என்றதும் சோவிங்கர் ஸ்பெஷல் என்றதும் சிரித்ததும் அறிவுரை சொன்னதும் காதலை மறுத்ததும் ஏற்றதும் மறுபடி சிரித்ததும் முத்தமிட்டதும் அவனோடு சேர்ந்து சுற்றியதும் அழுததும் கடைசித் தருணத்தில் அவளுடைய வாழ்க்கையை மிகச் சந்தோஷமான ஒன்றாக மாற்றியதும் அடுத்த நாளே... அடுத்த நாளே...

சுஜிதா அந்த இடத்தை விட்டு அகன்று கஸ்தூரிரங்கனின் அறைக்கு ஓடினாள். அந்த அறைதான் அவளுடைய அறை. அந்த

தலை

மீது

அறைக்குள் நுழைந்தாலே அவளுக்கு உடல் சிலிர்க்கும். அவளுடைய கஸ்தூரிரங்கன் இன்னும் அந்த அறையில் அவளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிற மாதிரி ஒரு பிரமை... இல்லை... மாயை... இல்லை... அந்த அறையில்தான் கஸ்தூரிரங்கன் அவளுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். கஸ்தூரிரங்கனின் ஆளுயரப் படம் ஒன்று அவளை 'வா'வென்று அழைத்தது. கஸ்தூரிரங்கனின் முகத்தில் அந்த மாறாப் புன்னகை. அந்தப் படத்திற்கு அவள் பொட்டு வைக்க விடவில்லை. பூ மாட்டவிடவில்லை. கஸ்தூரிரங்கன் செத்துவிட்டான் என்று யார் சொன்னது? இதோ, வாழ்ந்து கொண்டிருக்கிறானே?



அறையில் கஸ்தூரிரங்கன் வாழ்ந்த காலத்தில் இருந்த எல்லாமே அப்படியே இருந்தன. பீரோவில் அவன் பான்ட்கள். சட்டைகள். கதவிற்குப் பின்னால் வரிசையாய் பெல்ட்கள். ஷூ ஸ்டாண்டில் ஷூக்கள். அந்த அறையில் இப்போது கஸ்தாவின் புடைவைகள், ரவிக்கைகள் ஹாங்கர்களில் தொங்குகின்றன.

அவளுக்குச் சந்தோஷமாய் இருக்கிறது. இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை அவனோடு சேர்ந்து நிர்வகிப்பது மனோகரமாய் இருக்கிறது. அவளுடைய, அவனுடைய இணைந்த நிர்வாகத்தில் பாட்டிகள் இன்னமும் ஆதரவு பெறுகிறார்கள். பையன்கள் சுயமாய் முன்னேற ஆசைப்பட்டு நகரில் அங்கங்கே குட்டி குட்டியாய் சபரியை நிறுவியிருக்கிறார்கள். மீசை முளைத்தவர்கள் எல்லாம் ரங்காவின் பிம்பங்களாய் சமூக அந்தஸ்து பெற்று வெவ்வேறிடங்களில் நிலைத்துக் கொண்டிருக்க, புதுப்புது அனாதைப் பையன்கள் புகலிடம் தேடிச் சபரிக்கு வருகிறார்கள். அவளும் ரங்காவுமாய் இணைந்து அந்தப் பையன்களை அணைத்துக் கொள்கிறார்கள். பாட்டிகள் ஆசிரமங்கள் எல்லாம் மேலும் புதுப்புது உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றன.

இந்த மாதிரியான ஒரு சந்தோஷமான, ரங்காவுடன் இணைந்த வாழ்க்கை வாய்ப்பை விட்டு, அப்பா அழுகிறாரே யென்று அவள், அவர் காட்டும் வேறு பையனைக் கல்யாணம் செய்து கொண்டு நரகத்தில் உழல முடியுமா என்ன? கல்யாணமாகிக் கணவனோடு சந்தோஷமாய் வாழ்க்கை

வைத்து

நடத்தும் பெண்ணுக்கு, இன்னொரு கல்யாணம் செய்து வைக்கப் பார்த்த முதல் அப்பா அவளுடைய அப்பாவாகத்தானிருக்க முடியும். அதனால்தான் அந்த அப்பாவின் உறவே வேண்டாம் என்று அவள் அறுத்துக் கொண்டு வந்து விட்டாள்.

''இல்லியா ரங்கா?''

''ம்.''

''வெறுமனே 'ம்'னா போறுமா?''

''பின்ன என்ன பண்ணணுங்கறேடா சுதாக் குட்டி?''

''முத்தம் கொடுக்கணும்!''

''மாட்டேன்!''

''ஏனாம். ஐயோ ஏனாம்?''

''பின்ன, அந்த ஜிங்லுவைப் பாத்துட்டு நீ ஏன் அப்படி அழுதுக்கிட்டே வந்தியாம்?''

''நான்தான் நீரும் நெருப்புமாச்சே. அதான் அழுதேன்.''

''அழக் கூடாதுடா!''

''பின்ன நீங்க ஆக்ஸிடெண்ட்ல செத்துட்டதாச் சொன்னாங்களே. அப்படிச் சொல்லலாமா? தப்புத்தானே? உங்க மூஞ்சி மேலே லாரி ஏறி மூஞ்சியே தெரியலைன்னு சொன்னாங்களே? தப்புத்தானே? வெறும் ஒரு மூட்டையைக் காமிச்சி 'இதான் ரங்கா'ன்னு சொன்னாங்களே. தப்புத்தானே? அந்த மூட்டையைக் கொண்டு போய் வரட்டிக்கு நடுவுல வெச்சி எரிச்சிட்டு 'ரங்கா கற்பூரமாக் கரைஞ்சி போய்ட்டான்'னாங்களே. தப்புத்தானே? நீங்கதான் இருக்கீங்களே ரங்கா. எப்படி ரங்கா நீங்க போனதாச் சொல்லலாம்? ஜிங்லுவைப் பார்த்தேனா? எனக்கு என்னென்னவோ ஞாபகத்துக்கு வந்தது. எரிக்கறதாச் சொல்லிட்டு ஏதோ ஒரு மூட்டையை எரிச்சன்னிக்கு இந்த ஜிங்லுவும் பாட்டியும் வந்து என்னைக் கட்டிப் பிடிச்சிட்டு அழுதாங்க ரங்கா. அதை நெனைச்சேனா? எனக்கு அழுகை அழுகையா வந்திடிச்சி. அதான் உள்ள வந்துட்டேன். ஸாரி ரங்கா! முத்தம் கொடுக்க மாட்டீங்களா?''

''கிட்ட வா.''

''ம்!''

''இன்னும் கிட்ட... ஐயோ, இன்னும் கிட்ட வாயேன்?''

ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த விசாலிக் கிழவியும் துர்வாசனும் நளராஜனும் சுகிதா அந்தப் படத்திற்கு அழுத்தமாக ஓர் உதட்டு முத்தம் கொடுப்பது கண்டு துக்கம் தாங்காமல் கண்களை ஒற்றியெடுத்தார்கள்.

ஆறு வருடங்களாக நாள் தவறாமல் நடந்து வரும் வேதனை விளையாட்டு இது. அழுகை வராமல் என்ன செய்யும்! சைக்கியாட்ரிஸ்ட்டுகளைக் கேட்டால் அது ஒன்றும் மனவியாதி இல்லை என்கிறார்கள். துளசிதாசருக்கும் ராமதாசருக்கும் கபீர் பக்கிரிக்கும் அழுகை வரவில்லையா? அவர்கள் ஆண்டவனிடம் அளவளாவவில்லையா? அதைப் பைத்தியம் பிடித்தவனின் செயலாகவா உலகம் பார்த்தது? சுகிதாவிற்கு ரங்காவின் மேல் காதல்! அது அப்படித் தானிருக்கும் என்கிறார்கள். மற்ற நேரங்களில் சுகிதா நன்றாகச் சிரித்துப் பேசுவதை, சபரியின் கஸ்டமர்களைப் பரிவுடன் கவனிப்பதை, நிர்வாகத்தில் எந்தக் குறையுமின்றிப் பார்த்துக் கொள்வதையெல்லாம் பார்த்தால் டாக்டர்கள் சொல்வது சரிதான் என்று தோன்றுகிறது.

சுகிதா மெல்லத் திரும்பினாள். ஜன்னலுக்கு அருகிலிருந்து யாரோ விலகிப் போன மாதிரி இருந்தது. என்ன இது? விடுவிடுவென்று நடந்து வந்து கதவைத் திறந்து பார்த்தாள். யாருமில்லை. வாட்சைப் பார்த்தாள். மணி ஆறு முப்பது. ஐயய்யோ, சபரியில் கஸ்டமர்கள் கூட்டம் மொய்த்துக் கொண்டிருக்குமே! இங்கே அப்படி என்ன இருக்கிறது வெட்டி முறிக்க என்று இங்கே உட்கார்ந்திருக்கிறாள்?

'ஸாரி ரங்கா. நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. நான் வெளிய போய்ட்டு வந்துடறேன்!'

சுகிதா வெளியே வந்து மேஜை நாற்காலிகள் போடப்பட்டிருந்த மணல் பிரதேசத்தில் கால்கள் புதையப் புதைய நடந்தாள். தூரத்தில் அது யார்...?

மைகாட். பரிமளா!

''ஹாய் பரி. என்னடி இது?''

பரிமளாவின் கழுத்தில் மஞ்சள் சரடு. பக்கத்தில் வாட்டசாட்டமாய் அவள் கணவனாகத்தானிருக்க வேண்டும்.

''எங்கிட்ட சொல்லவேயில்லியே நீ? சொன்னா சாப்பாட்டுக்கு வந்துடுவேன்னு பயந்துட்டியா?''

''இல்லடி சுகி.. இது லவ் மேரேஜ். ரகசியமாத் திருப்பதில போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். போன வாரந்தான். இப்ப ரெண்டு பேர் வீட்லயும் சமாதானமாய்ட்டாங்க. அடுத்த வாரம் ரிசப்ஷன். அவசியம் நீ வரணும். மகேன்... நான் சொல்லலை... சுகிதா. சுகி. இது மகேன். சபரியை அவர் பார்த்ததேயில்லன்னு சொன்னாரு. அதான் கூட்டிட்டு வந்தேன்.''

''ஹலோ. பரிமளா நல்ல பொண்ணு. என்ன... வாய் கொஞ்சம் நீளம்... ஏய்... கிள்ளாதேடி... எல்லாம் அட்ஜஸ்ட் பண்ணுவாரு. மருது... இங்க வா... இன்னிக்கு என்ன ஸ்பெஷல்...?''

''ஜாங்கிரி சுகிதாக்கா!''

''போ, ரெண்டு ப்ளேட் மொதல்ல எடுத்துட்டு வா. நளராஜனோட ஸ்பெஷலாம் ரெண்டு ப்ளேட். பில் போடாதடா. இன்னிக்கு என் ட்ரீட்!''

ஏறக்குறைய சபரி மொத்தமும் காலியாகி விட்டது என்று முடிவு செய்து அவள் ரங்காவின் இடத்தில் உட்கார்ந்து மறுபடி ஒரு முறை தனது சாம்ராஜ்யத்தைப் பார்வையிட்ட போது, சபரியின் இன்னொரு இருட்



ஸ்ரீ ராம ஜெயம்

ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேய நிலையம்

சென்னை.

காஞ்சி காமகோடி பீட பரமாச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் பரிபூர்ண அனுக்ரஹத்துடன், சென்னையில் அம்பத்தூருக்கு அருகிலுள்ள ஜயப்பாக்கத்தில் 8 அடி உயரமுள்ள ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேய ஸ்வாமியின் கோயில் கட்ட உத்தேசித்துள்ளோம். அதே வளாகத்தில் ஸ்ரீராமர் சன்னதியும் அமைக்கப்பட உள்ளது. இவற்றை செய்து முடிக்க மனை உட்பட ரூ. நான்கு லட்சம் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. இப்புனிதப் பணி நாடெங்கிலுமுள்ள ஆஸ்திக அன்பர்களின் தாராள பொருளுதவியினால்தான் முடிக்க முடியும். எனவே இதைக் காணும் ஆஸ்திக அன்பர்கள் தாராளமாக பொருளுதவி அளித்து ஸ்ரீராம, ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேய ஸ்வாமிகளின் கோயில் கட்டி முடிப்பதில் பங்குகொள்ள வேண்டுகிறோம்.

இங்ஙனம்

M.V. இராமசேஷன்
GM, UCO Bank (Retd)
T.C.A. இராமானுஜம்
I.T. Commissioner (Rtd.)
V. கிருஷ்ணப்ரசாத்,
N. இராகவன்
K.C. வரதாசாரியார்
கிருஷ்ணன்
K.K. தாகா

N. இராகவன்
2, கலைவாணி நகர்,
பட்டம்மாள் காலனி,
கீழ்கட்டளை - 601 303

குறிப்பு : காசோலை மற்றும் டிமாண்ட் டிராப்டை Sri Panchamukha Anjaneyar என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

டுக் கோடியில் நிழலாக இருவர் தெரிந்தார்கள்.

இரண்டு பேருமே ஆண்கள்.

''மருது...!''

''என்ன கவிதாக்கா?''

''என்ன வேணுமாம் அவங்களுக்கு?''

''ஜூஸைாக் குடிச்சிட்டிருக்காங்கக்கா. ரெண்டு மணி நேரத்துக்கு மேல ஆச்சி அவங்க வந்து. மூடப் போற டயம்னு சொன்னேன். கௌம்பற வழியாத் தெரியலை.''

''பில்லுக்குப் பணம்?''

''குடுக்கல. பில்லு போட வேணாம்னு சொல்றாங்கக்கா. இன்னும் சாப்பிடணுமாம்!''

கவிதா எழுந்து அவர்கள் அருகில் சென்றாள்.

பொது விளக்குக் கம்பத்திலிருந்து சோடியம் மஞ்சள் வெளிச்சம் அவர்களின் முகங்களில் சரிபாதி அளவிற்கு விழுந்து கொண்டிருந்தது. 'லைட் அண்ட் ஷேட்' ஓவியம் வரைய மாடலாக உட்கார்ந்தவர்கள் போல அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். இருவரும் நன்றாக ட்ரிம் செய்யப்பட்ட தாடியுடன் இருந்தார்கள். விநோதமாக அந்த நேரத்தில் குளிர் கண்ணாடி. ஒருவன் நடுத்தர வயதினனாகத் தெரிந்தான். அவனுக்குத் தலைமுடி அடர்த்தியாக இருந்தது. சுருள், சுருள், சுருளான முடி. காதோரங்களில் காதுகளை மறைத்தது. நெற்றியில் பாதி அளவு வளைந்து இறங்கியிருந்தது. பிடரியிலும் அதே சுருள்முடி. கவிதாவிற்கு அவனைப் பார்த்தவுடன் உடலில் சிலிர்ப்பு ஓடியது. அவன் ரொம்ப நெருக்கமாகத் தெரிந்தவன் போல உணர்ந்தாள். மீசையின் அடர்த்தியிலும், தாடியின் ஆக்கிரமிப்பிலும் அவன் உதடுகள் ஒளிந்து கொண்டிருந்தாலும், தெரிந்த வரையிலும் அந்த உதடுகளுக்குச் சொந்தக்காரன் அவளுக்கு மிகப் பரிச்சயமானவன் போலத் தெரிந்தான். மற்றொருவன் ஏறக்குறைய கிழவன். கவிதா கிழவனைத் தவிர்த்து இன்னொருவனைப் பார்த்தாள். அவளுக்குப் படபடப்பாய் இருந்தது. அவர்களுடைய நோக்கம் நல்ல நோக்கம் இல்லையோ! எத்தனையோ இடங்களில் இப்போதெல்லாம் கொள்ளையும் கொலையும் மலிவாகப் போய் விட்டதே!

பயமாக இருந்தாலும், அவ்விடம் விட்டு அகல வேண்டும் என்று தோன்றவில்லை. ஏதோ ஓர் வசீகரம் இருந்தது. அவளை நிறுத்தியது. கால்களைக் கட்டிப் போட்ட மாதிரி உணர்ந்தாள். தொண்டையின் ஈரம் வரள, ''யெஸ்... என்ன வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''நீ வரணும்னுதான் காத்துக்கிட்டிருந்தோம் கவிதா'' என்றான் அவன்.

அந்தக் குரல். அந்தக் குரல். அதே குரல். கவிதாவால் நம்ப முடியவில்லை. அவளுடைய ஆண்டவன் வந்திருக்கிறான். பிரமையா என்ன? இல்லையே!

''ரங்கா?''

நாம் ஒரு மடங்கு இன்பத்தை அடைய ஆசைப்பட்டால் அதைப் போன்று இரு மடங்குத் துன்பங்களை அடையத் தயாராக இருக்க வேண்டும். இன்பம் எவ்வளவுக்கு எவ்வளவு பெரிதாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அதை ஒட்டியுள்ள துன்பங்களும் பெரியனவாய் இருக்கும். இயற்கை விதித்த விதி இது!

கவிதா கற்பனை செய்ய முடியாத அளவிற்கான துன்பங்களை எல்லாம் அனுபவித்து விட்டதால், அவளால் இப்போது அந்த உண்மையைத் தாங்க முடியவில்லை. நம்ப முடியவில்லை. இதுவும் வேறு வகைத் துன்பம் என்பது போல்தான் தோன்றியது.

''ஆமாம் கவிதா, உன் ரங்கா வந்திருக்கேன்!'' என்றான் அவன்.

நிறைய இரவுகளில், பகல் போல் நிலவு காயும் நேரங்களில், அவளுடைய கனவுகளில் ரங்கா வந்திருக்கிறான். அவளுடன் நிறைய நேரம் பேசியிருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு கனவுப் பொழுதா இது?

''ரங்கா... ரங்கா!''

கவிதா தடுமாறினாள். அவன் எழுந்து அவளைத் தாங்குவதற்குள் மயங்கி விழுந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)

◆ தலையங்கத்தில் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து எழுதியிருந்தீர்கள். 20.4.93 அன்று அரசிடம் அளிக்கப்பட்ட நியாய மான கோரிக்கைப் பட்டியலைக் கண்டு கொள் ளாமல், 6.12.93 வரை அலட்சியமாய் இருந்த அரசை எதிர்க்க தபால் ஊழியர்கள் வேறு வழி யில்லாமல் வேலை நிறுத்தம் செய்ய வேண்டி யிருந்தது. பொது மக்களின் நன்மை கருதியும், தேச நலன் கருதியும் ஊழியர்கள்தான் விட்டுக் கொடுத்து வேலைக்கு வந்தார்கள்.

காரைக்குடி - 2, கமலநாபன்.

◆ தலையங்கத்தில், தபால் துறையினரின் ஸ்டிரைக் பற்றியும் அதனால் ஏற்பட்ட எண்ணிப் பார்க்க முடியாத ஏழை மக்களின் இழப்புகள் பற்றியும் கூறியிருந்தீர்கள். எந்த அளவு அத்தியா வசிய வேலையாக இருந்தாலும் அதைச் செய் பவர் தன்னிறைவு பெறாத நிலையில் நியா யத்தை நாம் எங்குமே எதிர் பார்க்க முடியாது. இதைப் புரிந்து கொண்டிருந்தால், அரசு அவர்கள் குறையை நீக்கியிருக்கும். ஆனால், நம் நாட்டு வழி வழி அரசுகள் அதை எண்ணுவது அரிது! அரசே 'பந்த்' அறிவிக்கும் இந்த அநியாய பூமி யில் எப்படிப்பட்ட முக்கிய வேலை பாதிக்கப் பட்டாலும் பாவப்பட்ட மக்களும் பரிதாபப் படும் பத்திரிகைகளும் மட்டுமே ஏங்கும் நிலை உள்ளது!

செவேகா, ஏத்தாப்பூர்.

◆ காங்கிரசில் பிளவு, கம்யூனிஸ்டில் பிளவு, திமுகவில் பிளவு, இப்போ பா.ம.க.வில் பிளவு - இப்படிப் பிளவுபட்டவர்கள், ஆளாளுக்கு நான் தான் கட்சியின் உண்மையான தலைவன் என்று கூறிக் கொண்டே போனால், கடைசியில் கட்சி களில் தலைவர்களே நிறைந்து, தொண்டர்களே இல்லாது போய் விடுவார்கள்!

கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

◆ 'ஹம்டி டம்டி சேட் ஆன் தி வால்' கார்ட்டூன் பார்த்தேன். அதைவிடவும், ''ஜாக் (வாழப்பாடி) அண்ட் ஜில் (ரங்கராஜன்) வெண்ட் அப் தி ஹில் (மத்திய அமைச்சரவை) - ஜாக் ஃபெல் டௌன் அண்ட் ஜில் கேம் டம்ப்ளிங் ஆஃப்டர்'' என்ற ரைம் இன்னும் பொருத்தமாக இருக்குமே!


சிட்லபாக்கம், அ. ஷண்முகசுந்தரம்.

◆ கல்கி 12.12.93 இதழில் ''சுழலும் வீடும் சூரிய காந்தியும்'' என்ற செய்தியைப் படித்தேன். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தாமஸ் ஆல்வா எடிசன், ''கறுப்பு மரியா'' என்ற ஒரு சுழலும் ஸ்டு டியோவை வட்டமான தண்டவாளத்தின் மீது அமெரிக்காவில் உள்ள நியு ஜெர்ஸி நகரில் கட்டி யிருந்தார். தார் பேப்பரால் ஆன அந்த ஸ்டுடியோ வின் கூரைகளை, மேல் நோக்கித் திறக்க முடி யும். சூரியனின் நிலைக்கேற்ப வீட்டைச் சுழல வைக்கவும் முடியும். உலகின் முதல் திரைப்படங் களை இந்த ஸ்டுடியோவில் தான் எடுத்தார்கள்.

மதுரை - 9, ஜு. மகேசுவரன்.

◆ பிரதமருக்கு ஒரு (சிரிகமபதநி) இதழ் அனுப்பி வைத்தீர்களா? இல்லையெனில் அனுப்பி வையுங்கள் உடனே! பிரதமரைச் சிரிக்க வைப்பதற்கு இதைவிடச் சிறந்த உபாயம் வேறில்லை.

திருச்சி - 4, வீணை ராம்ஜி.



◆ கறுப்பு மரியா....

◆ நகைச்சுவை நாவோடு நகைச் சுவையின் உச்ச கட்டம். கற்பனை யாளருக்கும் கல்கிக் கும் ஜே!

பொன்மலை, துரை. நாகராஜன்.

◆ இரண்டே பக்கத்தில், நாலு பட விமர்சனம் எழுதிய உமது சினிமா விமர்சகர்களுக்கு நிச்சயம் 'கின்னஸில்' இடம் கொடுக்கலாம்!

மதுரை - 10, ஆர். லட்சுமி.

◆ கோடிக் கணக்கில் பணம் போட்டு பல மாதம் உழைத்துப் படம் எடுக்கிறார்கள். படம் எவ்வளவுதான் மோசமாக இருந்தாலும் அதற் காக ஒரு பக்கத்தைக் கூடவா விமர்சனத்துக்குச் செல வழிக்கக் கூடாது? இரண்டு பக்கத்தில் நான்கு படம்! என்னே உம் கருமித்தனம்!

மணக்காவு, வை. பாலசுப்பிரமணியன்.

◆ தான வாத்தியப் புயல் சவியின் பிரௌன்லி, தன் இசையையோ அதற்கு எழும் கைத்தட்ட

'ஜாக் அண்ட் ஜில்'லை ஏன் மறந்தீர்?

லையோ கேட்கும் சக்தி இழந்தவர் என்பதைப் படித்ததும் மனம் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியது.

கலியல், அ. செபாஸ்டின்.

◆ பட்டி மன்றம் போல செமை சுவாரஸ்யமாக வும் அரிய பல விஷயங்களையும் உள்ளடக்கி இருந்தது. ஆர்க்கெஸ்ட்ராவும் ஆடல் கலைஞர் களும் கட்டுரை. சினிமாவின் இன்றைய வளர்ச் சியை அலசியிருந்த விதம் பாராட்டுக்குரியது.

திருச்சி - 8, தி.மா. தமிழ்முருகன்.

◆ உஷா மணியனின் 'மாலையிலும் ஒரு பூபாளம்' இசையைப் போன்றே ஒரு இனிமை யான கதை. இசை பயின்றவர்கள், சூழ்நிலையின் காரணமாக அதை மனத்திற்குள் அடக்கி வைப்ப தால் நேரும் கஷ்டங்களை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியது.

காட்பாடி, அ.சோ. விஸ்வநாதன்.

BK0203



கிளிஃப் ஹேங்கர்

பிரும்மாண்டம். இந்த வார்த்தையைப் பத்து முறை நினைத்துக் கொள்ளுங்கள். அதுதான் இந்தப் படம். முதல் சில காட்சிகளில் முதுகுத்தண்டு 'ஜில்'.

கதை : நம்மூர் 'திருடா திருடா'வின் என்லார்ஜ்டு சைஸ். (அல்லது 'திருடா திருடா' இதன் Reduced Version!) இதிலும் வங்கிப் பணம் அபேஸ். வானில் பறக்கும் பிளேனுக்குப் பிளேன் பணம் இடம் மாறிக் கடத்தல்! ஆனால் பெட்டிகள் பனிமலையில் விழுந்துவிடுகின்றன. மூன்று பெட்டிகள். தேடிப் போகும் வில்லன்கள்.

பணத்தை மீட்கும் குழுவில் சில்வர்ஸ்டர் ஸ்டாலோன். மலையேறும் நிபுணர். அநாயாசமாக உடும்பு போல் முனைகளைத் தாவித் தாவிப் பிடிக்கிறார். மலையேறியோடு சேர்ந்து காமிராவும் ஏறுகிறது. அந்தரத்தில், ஆகாயத்தில், சரிவில், பொந்தில் என்று எங்கும் அநாயாசமாகச் சென்று நம்மை நகம் கடிக்க வைக்கிறது. அந்த முனைக்கு இந்த முனையுள்ள ஃப்ரேமில் என்ன ஜகஜ்ஜாலம் பண்ணுகிறார்கள்!

கரன்சி எரித்துக் குளிர்காய்கிறார்கள். ஹீரோவும் வில்லனும் பனிமலையில் வழுக்கிவிழ, ஹீரோ மட்டும் தப்புகிறார். பெண்கள் பயப்படுகிறார்கள். காது கிழியக் கத்துகிறார்கள். மற்றபடி நடிகைகளுக்கு வேலையில்லை. சும்மா ஒப்புக்குச் சப்பாணி.

மிக முக்கியம் : திரைக்கதையில் தொய்வில்லை; துவளலில்லை. பயமும் சந்தோஷமும் மாறி மாறி உண்டாக, சீட் நுனி காத்திருத்தல். பொழுதுபோக்குத்தான். சிரத்தையாய்ச் செய்திருக்கிறார்கள். பொழுது போக்கு என்ற உணர்வேயில்லாமல், முடிந்து வெளிவந்த பின்தான் கப்ஸா, பீலா எல்லாம் தோன்றுகிறது. உள்ளிருக்கும் வரை அபார உணர்வு மட்டுமே!

- துளசி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்:
வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு
அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

நம்பகமான முதலீடு.
அனுபவ் முதலீடு.

சிறந்த முறையில் ஸ்திரமாக வளர்ந்து வரும் அனுபவ் நம்பகத் தன்மை, புதுமையான அணுகுமுறைகள், கடுமையான உழைப்பு ஆகியவற்றுக்கு மறுபெயராக விளங்குகிறது.

முன்னணி நிறுவனமான அனுபவ் ஃபவுண்டேஷன்ஸ் தலைமைப் பொறுப்பில் அனுபவ் நிறுவனங்கள் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வருகின்றன. கட்டிடப்பணியில் மட்டுமின்றி, துரிதமாக விரிவடைந்து வரும் துறைகளான ஓய்வு இல்லங்கள், தேக்கு மரப்பண்ணைகள், பழத் தோட்டங்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் வலுவான இடத்தைப் பெற்று வருகின்றன.

சவால்களை எதிர்நோக்குவதும், சாதனைகளைப் படைப்பதும், மிக உயர்ந்த தரங்களை நிர்ணயிப்பதில் முன்னோடியாக விளங்குவதும் எல்லா அனுபவ் நிறுவனங்களிலும் நடைமுறையாக உள்ளது.

அனுபவ்ஃபைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனமும் இதற்கு விலக்கு அல்ல. நிதியுதவித் துறையில் மிகச் சிறந்த அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் நிர்வகிக்கப்படும் இந்நிறுவனம் உங்களுக்கு இரண்டு சிறந்த டெபாசிட் திட்டங்களை அளிக்கிறது.

அனுபவ் டெபாசிட்

குறைந்தபட்சத் தொகை : ரூ.10,000/-

குறைந்தபட்ச டெபாசிட் காலம் : 45 நாட்கள்

வட்டி : 1 ஆண்டுக்குக் குறைவாக	—	18%
1 முதல் 3 ஆண்டுகள்	—	21%
3 ஆண்டுகள்	—	24%

பின் தேதியிட்ட செக்குகளின் மூலம் மாத வட்டி அளிக்கப்படும்.

அனுபவ் பாண்ட்

குறைந்தபட்சத் தொகை : ரூ.25,000/-

உங்கள் முதலீடு 3½ ஆண்டுகளில் இரட்டிப்பு ஆகிறது.

அனுபவ் நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள். பாதுகாப்பான முறையில் உங்கள் பணம் விரைந்து பெருகுவதைக் காணுங்கள்.

மேலும் விவரங்களுக்கு அணுகவும்:

அனுபவ் பைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மென்ட்ஸ்

11, சோமசுந்தரம் தெரு, தி.நகர், சென்னை-600 017.
போன்: 8259447, 8267248, 8254155, 8282629, 8282833 ஃபாக்ஸ்: 044-8284967

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka